வானிலை
கூ.வெ. 31°C
கு.வெ. 26°C
தெளிவான வானிலை

# உதயன்

சுடர் 30 கதிர் 216 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 15, செவ்வாய்க்கிழமை 30.06.2015

**பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலத்தைக் கடத்துவதில் பயனில்லை**

பக். 23

## நாகபாம்பு சின்னத்தில் களமிறங்கும் பலசேனா

கொழும்பு, ஜூன் 30
பொதுத் தேர்தலில் களமிறங்குவதற்குத் தயாராகியுள்ள பொது பல சேனா அமைப்பு, பொது ஜன பெரமுன என்ற கட்சியின் கீழ் நாகபாம்புச் சின்னத்தில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளது.
இதற்கான விண்ணப்பத்தைத் தேர்தல்கள் செயலகத்துக்குப் பொதுபலசேனா அனுப்பிவைத்துள்ளது.
இந்தத் தகவலைப் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் உறுதிப்படுத்தியுள்ளார். தமது கட்சி நாகபாம்புச் பக்.32

# மஹிந்த, கோத்தாவை தண்டிக்க இடமளியோம்

### புலித் தலைவர்கள் தண்டிக்கப்படுவர் என்று நேற்று அடித்துக் கூறியது ஐ.தே.க

கொழும்பு, ஜூன் 30
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவ அதிகாரிகளைத் தண்டிப்பதற்கு சர்வதேசத்திற்கு இடமளிக்கப்படாது எனத் தெரிவித்த பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க, விடுதலைப்புலிகளின் முன்னாள் தலைவர்கள் அனைவரும் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என்றும் உறுதியாகத் தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சர்வதேச விசாரணை அறிக்கையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோர் உள்ளிட்ட 42 பேருக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் மற்றும் விடுதலைப்புலிகளின் முன்னாள் தலைவர்கள் தொடர்பில் ஐ.தே.கவின் நிலைப்பாடு என்ன என வினவியபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.
இதன்போது மேலும் பக்.32

## நயினை தேர்த் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 30
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 8மணிக்கு நடை பெறவுள்ளது. முன்னதாக அதிகாலை 4.30மணிக்கு விசேட பூசைகள் ஆரம்பமாகி காலை 7மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று காலை 8மணிக்கு அம்பாள் பக்.32

சிறப்பிதழ் உள்ளே!

## மஹிந்த - மைத்திரி ரகசியத் தொடர்பு

### குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி



கொழும்பு, ஜூன் 30
மக்களால் நிராகரிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரகசிய தொடர்புகளைப் பேணுவதாக ஜே.வி.பி. குற்றஞ் சுமத்தியுள்ளது.
மஹிந்தவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அண்மையில் பேச்சு நடைபெற்றுள்ளது என்றும், இருவரும் திட்டமிட்ட அடிப்படையில் அதை நிராகரித்துள்ளனர் என்றும் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
மைத்திரிபால சிறிசேனவுக்கும், மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சபாநாயகர் இல்லத்தில் பேச்சு நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், இறுதிச் சந்தர்ப்பத்தில் அந்தப் பேச்சு வேறொரு இடத்தில் இடம்பெற்றது. பக்.32

## மீள்குடியமர்வுக்கு படையினரே தடை

### முன்னாள் அமைச்சர் சுவாமிநாதன் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
பாதுகாப்புத் தரப்பினரே மக்களின் மீள்குடியமர்வுக்குத் தடையாக இருக்கின்றனர் என்று தெரிவித்தார் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன். நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
"மக்களின் மீள்குடியமர்வு பற்றியும், புதிதாக காணிகளை விடுவிப்பது தொடர்பிலும் ஜனாதிபதியிடமும் பல தடவைகள் தெரிவித்துள்ளோம். ஆனால், எந்தப் பதிலும் இல்லை" என்றார் அவர்.



யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை, வலி. வடக்கு மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் பக்.32

## மஹிந்தவுக்கு ஆதரவாக வாகனத் தொடரணி நாளை

கொழும்பு, ஜூன் 30
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அவரை மீண்டும் அரசியலுக்கு வருமாறு கோரி அம்பாந்தோட்டைக்கு நாளை வாகனத் தொடரணி யில் செல்லவுள்ளனர்.
அம்பாந்தோட்டையிலுள்ள கால்டன் இல்லம் வரை செல்லவுள்ள இந்த வாகனத் தொடரணியில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, குமார வெல்கம, டலஸ் அழகப்பெரும, காமினி லொக்குகே, மேல்மாகாண சபை உறுப்பினரான உதய கம்மன்பில உள்ளிட்ட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
கொழும்பிலிருந்து ஆரம்பமாகும் இந்த வாகனத் தொடரணி காலை 9 மணிக்கு கால்டன் இல்லத்தைச் சென்றடையவுள்ளது.
அங்கு இடம்பெறும் சமய வழிபாடுகளுக்குப் பின்னர் காலை 9.30 இற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார்.
இதன்போதே அவர் தான் பக்.32

## நாளை முதல் ரூபா 1,000 தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
வீதியோரத்தில் அல்லது காணிகளில் குப்பைகள் கொட்டப்பட்டிருந்தால் அதனருகில் உள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு 1,000 ரூபா அபராதம் விதிக்கப்படும் என்று யாழ். மாநகர சபை அறிவித்துள்ளது. நாளை முதல் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது என்று பக்.32

## எம்மைச் சந்தித்து குறைகளை கேட்கவில்லை சுவாமிநாதன்

### வலி. வடக்கு மக்கள் நேற்று வருத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
வலி. வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக வருகை தந்தார் எனக் கூறப்படும் முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர், தம்மைச் சந்தித்துக் கலந்துரையாடவில்லை என்று மீளக்குடியமர்ந்த மக்கள் வருத்தம் தெரிவித்தனர். இராணுவத்தினருடனும் மக்கள் பிரதிநிதிகள் சிலருடனும் மாத்திரமே அமைச்சர் கலந்துரையாடல் நடத்தினார் என்றும் தம்மைச் சந்தித்துத் தமது குறைநிறைகளைக் கேட்கவேயில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளுக்கு நேற்றுக் காலை, முன்னாள் அமைச்சர் பக்.32

## எந்த வழியில் வந்தாலும் மஹிந்தவை வீழ்த்துவோம்

### வரிந்து கட்டுகிறார் சுஜீவ

கொழும்பு, ஜூன் 30
மஹிந்த ராஜபக்ஷ வெற்றிலைச் சின்னத்தில் மட்டுமல்ல, வேறு எந்தச் சின்னத்தில் போட்டியிட்டாலும் நிச்சயமாகத் தோற்கடிக்கப்படுவார் எனத் தெரிவித்த பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க, தற்போது தேங்காய் விழுந்தால்கூட புலி என்று தான் மஹிந்த கூறுவார். புலி இன்றி அவரால் முன்னோக்கிச் செல்லமுடியாது என்றும் தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், பக்.32

## அபிவிருத்தி குறித்த கூட்டத்தில் செய்தியாளர் தேவையில்லை!

### எனக் கூறி அவர்களை வெளியேற்றினர் முன்னாள் அமைச்சர் மற்றும் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30
அபிவிருத்தி பற்றிய கூட்டத்தில் கலந்துகொள்ளத் தேவையில்லை என்று கூறி நேற்று செய்தியாளர்களை வெளியேற்றினார்கள் அதிகாரிகள்.
வலி. வடக்கு மக்களின் மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்துக்கான அழைப்பிதழ்கள் யாழ். செயலக தகவல் பிரிவாலும் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடகப் பிரிவாலும் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. அதனடிப்படையில் செய்தியாளர்கள் கூட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்றிருந்தனர். எனினும் கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் பங்கேற்க முடியாது என்று கூறிய முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பக்.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆமை பிடித்தோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வண்ணாரம் குளத்தில் ஆமைகள் பிடித்த இரண்டுபேருக்குதலா 3ஆயிரம்ரூபா அபராதம் விதித்து ஊர்காவற் றுறை நீதிவான் செல்வநாயகம் லெனின் குமார் நேற்றுத் தீர்ப்பளித்தார்.
இருவரிடமிருந்து மீட்கப்பட்ட 2 கடலாமைகளையும் குளத்துக்குள் மீண்டும் விடுமாறு நீதிவான் கூறினார். சுழிபுரத்தைச் சேர்ந்த இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி குளத்தில் ஆமைகள் பிடித்த போது, ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (ற)

## 90 வயதில் ஓய்வூதியம் பெறுவோர் 28,000 பேர்

கொழும்பு, ஜூன் 30
ஓய்வூதியம் பெறுவோரில் 90 வயதைக்கடந்துள்ளோரின் தொகை 28 ஆயிரம்எனஓய்வூதியத்திணைக்களம் தெரிவித்துள்ளது.
85 வயதுக்கும்90வயதுக்கும்இடைப்பட்ட ஓய்வூதியம் பெறுவோரின் தொகை 42 ஆயிரம் எனவும், 80 வயதுக்கும் 85 வயதுக்கும் இடைப்பட்டோரின் தொகை 53 ஆயிரம் எனவும், 70 வயதுக்கும் 80 வயதுக்கும் இடைப்பட்டோரின் தொகை ஒரு இலட்சத்து 25 ஆயிரம் எனவும், 65 வயதுக்கும் 70 வயதுக்கும் இடைப்பட்டோரின் தொகை 82 ஆயிரம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த போர்க் காலத்தில் முப்படைகள் மற்றும் பொலிஸ் துறைக்கு ஒரே தடவையில் ஆயிரக்கணக் கானோரைச் சேர்த்துக்கொள்ள வேண்டி நேர்ந்ததன் காரணமாக ஒரே தடவையில் நூற்றுக்கணக் கானோர் ஓய்வுபெற்றுச் செல்லும் சந்தர்ப்பங்களுக்கும் ஓய்வூதியத் திணைக்களம் முகம் கொடுக்க வேண்டி நேர்வதாகவும் அதன் பணிப்பாளர் நாயகம் சுனில் யஹட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ற-22)

## தீவகத்தின் நிலை குறித்த கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 30
தீவகப் பகுதியின் பொருளாதார, சமூக, கல்வி மேம்பாட்டுக்கான திட்ட வரைவுகள் பற்றிய கருத்தாடல் ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இலக்கம் 121, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சிந்தனைக்கூடம் எனும் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்.மாவட்டப் பிரதேச அபிவிருத்தித் திறமுறைகள் எனும் தலைப்பிலான கருத்தரங்குத் தொடரின் பகுதியாக தீவுப் பகுதி பற்றிய கலந்துரையாடல் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
தீவகப் பகுதியின் மேம்பாட்டில் அக்கறை கொண்ட தீவுப் பகுதியைச் சார்ந்த, சாராத கல்வியாளர்கள், புத்திஜீவிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், வர்த்தகத் துறையினர் ஆர்வமுள்ள பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்து தமது கருத்துக்களை முன்வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.
கலந்துரையாடலின் பின்னர் தீவகப் பகுதியின் சகல துறைசார் மேம்பாடு தொடர்பான சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கு ஓகஸ்ட்டில் நடைபெறவுள்ளது. அதற்கான கலந்துரையாடலாகவும் இந்நிகழ்வைக் கொள்ளலாம் என்று சிந்தனைக் கூடத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-4)

# மக்களைக் குழிதோண்டி புதைக்க முற்பட்டுள்ளனர்

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 30
நல்லாட்சிக்காக பாடுபட்டு உழைத்த மக்களை நல்லாட்சியின் உள்ளே இருக்கும் சிலர் குழிதோண்டிப்புதைக்க முற்பட்டுள்ளனர் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.
கல்குடாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்தும்உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-
இலங்கையில் நல்லாட்சியைக் கொண்டுவருவதில் சிறுபான்மை மக்கள் பெரும் பங்காற்றினர். இந்த உழைப்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பங்கும் அளப்பரியது. ஆனால், நல்லாட்சிக்காக பாடுபட்டு உழைத்த மக்களை



நல்லாட்சியின் உள்ளே இருக்கும் சிலர் குழிதோண்டிப்புதைக்க முற்பட்டுள்ளனர்.
இதனால் சிறுபான்மை மக்கள் பாதித்து விடுவார்கள்என்றுநாடாளுமன்றத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் துணிச்சலுடன் குரல்கொடுத்தார். 20ஆவது திருத்த சட்டத்தில் கொண்டுவந்த மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தமைக்கு பொறுப்புடன் இருந்து செயற்படவேண்டிய அமைச்சர் ராஜித சேனாரத்ன ஒழுக்கம் தவறி அமைச்சர் ஹக்கீமுக்கு பேசியிருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும் - என்றார். (ற)







*காணாமற் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் 3ஆவது அமர்வு நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவின் விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் – ஐ.நா. விசாரணைகளை வலியுறுத்தியும் காணாமல் போனோரின் உறவினர்களால் ஆர்ப் பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதேவேளை ஆணைக்குழு அமர்விலும் காணாமற்போனோரின் உறவினர்கள் சிலர் சாட்சியம் வழங்கினர். (ற-40)*

## வவு. பிரதேச கலாசார மத்திய கட்டுமானத்துக்கு நிதி கிடைத்தது

வவுனியா, ஜூன் 30
வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டவரும் வவுனியா பிரதேச கலாசார மத்திய நிலையத்தின் இரண்டாம் கட்டுமான வேலைகளுக்கான 50 லட்சம் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.
கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிதியுதவியுடன் ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் மேற்படி கலாசார நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. முதலாம் கட்ட வேலைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து கடந்த பல மாதங்களாக கட்டுமான வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.
இதுதொடர்பாக வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திர கலாச்சார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு பேசியதையடுத்து இரண்டாம் கட்டவேலைகளுக்கான நிதி கிடைத்துள்ளதாக பிரதேச செ[illegible]லக கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார். (ற)

## மருந்துக் கலவையாளர் தொழிற்சங்க போராட்டம்

தென்மராட்சி, ஜூன் 30
நாடளாவிய வீதியில் மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர்கள் நேற்று முன்தினம் திடீரென தொழிற் சங்க வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால் வெளி நோயாள[illegible] பிரிவுக்கு சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.
தமது கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்காவிடின் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை மருந்தாளர்கள் உள்ள மருத்தவமனைகளில் மருந்தாளர்கள் வெளி நோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகளில் நோயாளர்களுக்கு மருந்துகள் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# தெல்லிப்பழை இ. இ. சங்கத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா

வலி.வடக்கு, ஜூன் 30
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் பொன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் பிற்பகல் துர்க்கைஅம்மன்ஆலய முன்றிலில் நடைபெற்றது.



நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக முன்னாள் மகளிர் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு திரு முருகனும் கலந்துகொண்டனர்.
ஆசியுரையை சின்மயமிஷனின் யாழ்ப்பாணம் கிளையின் சுவாமி சைத்தன்ய ஜாக்கிரத சுவாமி வழங்கினார். (ற-86)

# நீண்ட காலத்தின் பின்னர் சைக்கிள்கள் சோதனை

### சாவகச்சேரிப் பொலிஸாரால்

தென்மராட்சி, ஜூன் 30
நீண்ட கால இடைவெளியின் பின்னர் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் வீதியில் சைக்கிள் சோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.
கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் ஏ-9 வீதி வழியாக வந்த அனைத்து சைக்கிள்களுக்கும் இலக்கத் தகடுகள் உள்ளனவா எனச் சோதனையிட்டதுடன், இலக்கத்தகடு பெறாதவர்களை நகரசபையில் இலக்கத் தகடு பெறுமாறு அறிவுறுத்தினர்.
1996ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் 10 ஆயிரத்துக்கு குறையாமல் சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டன என்றும் அதன் பின்னர் ஆயிரம் சைக்கிள் இலக்கத் தகடுகள் கூட விநியோகிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.
கடந்த வருடம் யாழ் மாவட்டச் செயலகத்தால் விடுக்கப்பட்ட அறிக்கைப் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் இரண்டு லட்சத்துக்கு அதிகமான சைக்கிள்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. முன்னைய காலங்களில் ஏப்ரல் மாதத்திலேயே பொலிஸார் வீதிகளில் சைக்கிள் பரிசோதனை நடத்தி இலக்கத் தகடுகள் பொருத்தப்படாத சைக்கிள் உரிமையாளர்கள் மீது நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மத ஒற்றுமையை வலியுறுத்தும் முகமாக கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் ஆசிரியர்கள், மாணவர்களின் விசேட பிரார்த்தனையுடன் சரஸ்வதி சிலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. (ந–21)

## நாளை மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 30

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.நகரில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

யாழ். நகரில் இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து ஏ – 9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, நக்கா வீதி, மருதடி வீதி, சுண்டிக்குளி, பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ் மாவட்டச் செயலாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், நக்கா வீதி பிரிட்டிஸ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம் ஆகிய பிரதேசங்களில் தடைப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–5)

## ஆசிரிய உதவியாளர் நியமன அநீதிக்கு எதிராக நடவடிக்கை

### மக்கள் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஆசிரிய உதவியாளர் என வழங்கப்பட்ட நியமனத்தில் இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆசிரியர் சங்கம் என்ற வகையில் மக்கள் ஆசிரியர் சங்கம் தயாராக உள்ளது. எனவே இப்பிரச்சினைகளில் சம்பந்தபட்டவர்கள் என்ற வகையில் ஆசிரியர்கள்உதவியாளர்களின் நிலைப்பாடு பற்றித் திறந்த கலந்துரையாடலுக்கும் அதனூடாக நடவடிக்கைகளை வகுத்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் வழங்குகிறோம். – இவ்வாறு மக்கள் ஆசிரியர் சங்கச் செயலாளர் இரா.நெல்[illegible] மோகன்ராஜ் தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியர் உதவியாளர்கள் நியமனத்தில் மறுக்கப்பட்டுள்ள உரிமைகள் தொடர்பான பொதுக் கலந்துரையாடலை இரத்தினபுரி காவத்தை ஸ்ரீ கிருஸ்ணா மகா வித்தியாலயத்தில் மக்கள் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. அதன்போதே சங்கச் செயற்குழு சார்பாக அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மலையகத் தலைவர்கள் தாங்கள் பெற்றுக் கொடுத்ததாகக் கூறும் எதனையும் முறையாக பெற்றுக் கொடுக்க முடியாதவர்களாகவே இருந்துள்ளனர். ஆசிரிய பிரமாண குறிப்பின் பிரகாரம் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெற்றுள்ளவர்களின் தகைமை மற்றும் அவர்களை ஆட்சேர்ப்பதற்குப் பின்பற்றிய நடவடிக்கை முறைகளை வைத்துப் பார்க்கும்போது அவர்களை ஆசிரிய சேவை தரம் 3–II க்குச் சேர்த்துக் கொள்ள முடியும். எனினும் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் இல்லாத ஆசிரிய உதவியாளர் என்ற பதவிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் பொதுவாக ஆசிரியர்கள் செய்ய வேண்டிய அதே பணியைக் குறைந்த வேதனத்துடன் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். 2007 ஆம் ஆண்டு இதே தகைமையை கொண்டவர்கள் ஆசிரியர் சேவை தரம் 3–II க்குச் சேர்க்கப்பட்ட நிலையில் இம்முறை ஆசிரிய உதவியாளர்களாக சேர்க்கப்பட்டுள்ளமை அநீதியானது.

ஆசிரிய உதவியாளர் என வழங்கப்பட்ட நியமனத்தில் இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆசிரியர் சங்கம் என்ற வகையில் மக்கள் ஆசிரியர் சங்கம் தயாராக உள்ளது. எனவே இப்பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற வகையில் ஆசிரியர்கள்உதவியாளர்களின் நிலைப்பாடு பற்றித் திறந்த கலந்துரையாடலுக்கும் அதனூடாக நடவடிக்கைகளை வகுத்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் வழங்குகிறோம்.

இந்த விடயம் பற்றிய பரந்துபட்ட கலந்துரையாடலை மலையகம் முழுவதும் உள்ள ஆசிரிய உதவியாளர்களுடன் உடனடியாக மேற்கொண்டு பிரச்சினைகளை சட்ட ரீதியாக அணுகுவதற்கு மக்கள் ஆசிரியர் சங்கம் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் – என்றார். (ந–4)

# பிள்ளைகளை கண்காணிப்பது மிக முக்கியம்

## கண்காணிப்பு இன்மையே போதைப் பழக்கத்துக்கு காரணம்; பெற்றோருக்கு மருத்துவ நிபுணர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூன் 30

தமது பிள்ளைகளுக்கு எந்தக் குறையும் இல்லாது அவர்களை வளர்த்து வருகிறோம் என்று பல பெற்றோர் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு குறையில்லாது வளர்ப்பதை விடவும் அவர்களைக் கண்காணிப்பதே மிக மிக முக்கியம். பல பிள்ளைகள் போதைப் பாவனையால் பாதிக்கப்பட்டு வருவதற்கு பெற்றோரின் கண்காணிப்பு இல்லாததே காரணம். – இவ்வாறு உளநல மருத்துவ நிபுணர் சிவயோகம் தெரிவித்தார்.

போதைப் பொருளை எதிர்க்க வேண்டிய நிலை, அது பற்றிய விழிப்பூட்டலுக்காக செய்தியாளர் சந்திப்பு ஒன்று யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும்தெரிவித்தாவது:–

போதைப் பாவனையில் இருந்து விடுபடுவது பற்றிய விழிப்புணர்வுகள் உரிய முறையில் மேற்கொள் எப்படுகிறதா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்போதைப்பொருள் தடுப்பு முறைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. அல்லது அது போதாதுள்ளது.

பரீட்சித்துப் பார்ப்போம் என்றுதான் முதலில் பலரும் தொடங்குகிறார்கள். ஆனால் பின்னர் அதனை அவர்களால் கட்டுப்படுத்த முடிவதில்லை. நிறுத்தினால் பாதிப்பு ஏற்படும் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் மருத்துவ உதவியுடன் அதனை நிறுத்த முடியும். எனவே போதைப் பாவனையை நிறுத்த முன்வர வேண்டும்.

போதைப் பாவனையால் குடும்பத்தில் சண்டை, சமூகத்தில் உரிய மதிப்பு இல்லை. தவறான தீர்மானங்களை எடுக்கத் தூண்டுகிறது. பாதிப்பை ஏற்படுத்துகிறது.

போதைப் பொருள் வியாபாரிகளும் பாடசாலை மாணவர்களை – இளவயதினரையே இலக்கு வைத்துப் போதைப் பொருள்களை விற்பனை செய்கின்றனர். வளர்ந்தவர்களிடம் அவற்றை இலகுவில் விற்பனை செய்ய முடியாது என்பது போதைப் பொருள் வர்த்தகர்களுக்குத் தெரியும். அதனால்தான் அவர்கள் இளவயதினரைக் குறி வைக்கின்றனர். அவ்வாறு அவர்கள் குறி வைத்துச் செயற்படும் நிலையில் பெற்றோர் அது பற்றிய கரிசனை– அக்கறை கொள்வதில்லை. பிள்ளைகளுக்கு ஒரு குறையும் இல்லாது வளர்த்து வருகிறோம். ஒரு குறையுமில்லாது வளர்த்தோம் என்று பல பெற்றோர் கூறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை என்பது முக்கியமல்ல. அவர்களை பெற்றோர் எந்தளவுக்குக் கண்காணிக்கின்றனர் என்பதே முக்கியம். ஆனால் பல பெற்றோரும் அந்தக் கண்காணிப்பைச் செய்வதில்லை. ஆனால் பிள்ளைகள் மீதான பெற்றோரின் கண்காணிப்புக் கட்டாயம் இருக்க வேண்டும் – தொடர வேண்டும்.

வருங்கால சந்ததிக்கு போதைப் பொருள்களைக் கொடுத்து அவர்களைச் சமூக அக்கறையற்றவர்களாக, பொறுப்பற்றவர்களாக உருவாக்கி சமூகத்தைப் பின்னடைவுக்குக் கொண்டு செல்ல முற்படுகின்றனர். அது பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளது. போதைவஸ்துக்களைப் பாவிக்கத் தொடங்கியவர்கள் அதிலிருந்து எப்படி விடுபடலாம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். – என்றார். (ந–4)

# காணாமல்போன சிறுமியைக் கடத்திப் போனதாம் காட்டேறி!

## உருத்திரபுரம் சிறுமியின் தாய் பொலிஸாருக்குக் கூறிய கதை

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் காணாமல் போன 3வயது சிறுமியை காட்டேறிகடத்தி சென்றுவிட்டது என்று பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார் காணாமல் போன சிறுமியின் தாய். விசாரணைகளை மேற்கொண்டுவரும் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு அவர் இதனைக் கூறியுள்ளார்.

கிளிநொச்சி உரத்திரபுரம் பகுதியில் கடந்த 21ஆம் திகதி தாயரர் குளிக்கசென்ற போது வீட்டிலே தனியாக இருந்த சிறுமியை காணவில்லை என கிளிநொச்சி பொலிசில் முறைப்பாடு பதிவுசெய்யப் பட்டது. அதை அடுத்து கிளிநொச்சி பொலிஸார் கடந்த வாரம் தொடர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அதன் போது 14 வயது சிறுவன் உட்பட சிறுமியின் உறவினர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுடைய வாக்கு மூலங்கள் முன்னுக்கு பின் முரணாக காணப்படுவதால், சிறுமி பணத்துக்காக கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

உருத்திரபுரம் பகுதியில் உள்ள காடுகள், குளங்கள், கிணறுகள் என பல இடமும் பொலிஸார், இலங்கை [illegible] இட்டு தேடியபோதும் சிறுமி பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இந்தநிலையிலேயே சிறுமியின் தாய் பொலிஸாருக்குப் புதிய தகவலைக் கொடுத்துள்ளார்.

சிறுமியை காட்டேறியே கடத்திச் சென்று விட்டது என்றும், இவ்வாறே தன்னையும் சிறுவயதில் காட்டேறி கடத்தி சென்றதாகவும் அவ்வாறு தான் தனது மகளையும் அப்பகுதியில் உள்ள காட்டேறி கடத்தி சென்றிருக்கும் என சந்தேகிப்பதாகவும் சிறுமியின் தாய் தமக்குக் கூறியதாக கிளிநொச்சி பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.



இதுஒருபுறமிக்க சிறுமியை கண்டு பிடிப்பதற்கான சடங்கு வழியான பூசைகளும் நேற்று உருத்திரபுரம் பகுதியில் சிறுமியின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டது என்று அறியமுடிகின்றது. (ந–21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு அறுவடை செய்யும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை காலை வைபவ ரீதியாக ஆரம்பமானது. நிகழ்வை மாந்தை உப்பு உற்பத்தி நிலைய பொது முகாமையாளர் எம்.ஏ.துவான் மன்சில், மன்னார் உப்பு உற்பத்தி நிலையத்தின் முகாமையாளர் கொக்காலி, மன்னார் மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்களான ஜே.மாஸ்லஸ் பீரிஸ், வைத்தியர் செல்வ மகேந்திரன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்தனர். சுமார் 40 இற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் உப்பு அறுவடையை மேற்கொண்டனர். (ற)

# தயவுதாட்சணியம் காட்டாது தீயோரை ஒதுக்க வேண்டும்

## புங்குடுதீவு மாணவியின் நினைவு நிகழ்வில் வலியுறுத்தினார் சைதன்ய சுவாமிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தீய சக்திகள் கொண்ட, தீய இயல்புகளை வெளிப்படுத்தும் மனிதர்களுக்கு நாம் எந்தவித தயவு தாட்சணியமும் காட்டாது அவர்களை ஒதுக்க வேண்டும். தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். இளம் சமூகத்தினர் வாள்வெட்டு, களவு, கொலை, கொள்ளைகளுக்கு ஆட்பட்டுள்ளனர். இது கடந்த 30 வருட போரைவிடக் கொடூரமான போர். அதனை எதிர்த்து நிற்க வேண்டும். நாம் அவற்றுக்கு அடிமையாக விடக்கூடாது. – இவ்வாறு யாழ்ப்பாண சின்மயா மிஷனின் வதிவிட ஆச்சாரியார் யாக்கிரத்ய சைதன்ய சுவாமி தெரிவித்தார்.

புங்குடுதீவு மாணவியின் 45 ஆம் நாள் நினைவு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எமது உணர்வுகளை ஒன்று சேர்க்கும்போது எல்லோருமே வாய்விட்டு அழவேண்டும் போல உள்ளது. ஆனால் யாரிடம் அழுவது? நாம் அனைவருமே இறைவனிடமே அழவேண்டும். எதிர்பாராத விதமாக எங்களைவிடடுப் பிரிந்து சென்றிருக்கக் கூடிய உயிர்களை நினைத்தும் மற்றும் பல வகைகளில் நாம் எமது கவலைகளை, துன்பங்களை அழுது தீர்த்துதுன்பங்களை இறைவனிடம் வெளிப்படுத்த வேண்டும். கோரமாகக் கொல்லப்பட்ட மாணவியின் ஆத்மா சாந்தியடைய வேண்டும். நாம் எமது உணர்வுகளை விட்டுவிட்டு அறிவுபூர்வமாகச் சிந்திப்போமாக இருந்தால் அந்த உயிரை எவரும் எதுவும் செய்துவிடமுடியாது. உடலுக்கே துன்பங்களைக் கொடுக்க முடியும்.

அனைவரும் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அனைவருமே ஒன்று கூடிப் பிரார்த்திக்கும்போது இறைவன் நிச்சயமாக மாணவிக்கு நல்ல நிலையைக் கொடுத்திருப்பார். அதிலே சந்தேகம் கிடையாது.

மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை பின்னர் கொலை செய்யப்பட்டமை நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் தெரிந்த விடயமாகியுள்ளது. ஆனால் தெரியாமல் எத்தனையோ விடயங்கள் இன்னும் நடந்துகொண்டுதானிருக்கின்றன. எமது சமூக மத்தியில் இருக்கும் மது, போதை, வன்முறை, பழி தீர்த்தல் என்பனவற்றைக் கொண்டு இயங்கும் மனிதர்கள் மிக அதிகமில்லை. சுமாராக 10 ஆயிரம் பேரில் ஒருவரே அவ்வாறான தீய இயல்புகளை வெளிப்படுத்துபவராக உள்ளார். அவர்களை தண்டிப்பதற்கு ஏற்றதாக எமக்குப் பாதுகாப்பான முறையில் நாம் அவர்களைக் காட்டிக்கொடுக்க வேண்டும்.

எமது கவலைகள், சோகங்கள் ஆகிய உணர்வுகளை, தீய சக்திகளை எதிர்க்கின்ற நிலையை நாம் வெளிப்படுத்துவோமாக இருந்தால் அது எமது சமூகம் மேலும் ஒரு நல்ல நிலைக்கு உயர காரணமாக அமையும். மாணவியின் இழப்பு அவருக்கு நடந்த கதி எம் எல்லோரையும் சிந்திக்க வைத்துள்ளது. அந்த மாணவியை மாமனிதராகவே தியாகியாகவே நான் பார்க்கிறேன். அந்த பெரும் தியாகியை அவரது பெற்றோர் பெற்றுள்ளனர். தமிழ் சமூகத்துக்கு விடிவைத் தேடித் தரக்கூடிய மாணவி, கல்விக்கு ஏற்பட்டுள்ள சவாலுக்கு, பாடசாலை மாணவர்களிடையே, லட்சக்கணக்கான குழந்தைகளிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள மது, போதைப் பொருள், வன்முறை கலாசாரத்துக்கு [illegible]ராக அந்த மாணவி உயர்ந்து நிற்கிறாள் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். – என்றார். (ற–4)

# அலம்பில் மாதர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஜூன் 30

மாதர் சங்கத்துக்கு வழங்கப்பட்டிருந்த காணியை தனிநபர் ஒருவருக்கு வழங்கியதாகத் தெரிவித்து நேற்று முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காலை 10 மணியளவில் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கூடிய அலம்பில் மாதர் சங்க உறுப்பினர்கள் குறித்த கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பல வருடங்களுக்கு முன்னர், அலம்பில் மாதர் சங்கத்தின் பொது தேவைகளுக்காக அக்காலப் பகுதியில் கடமையிலிருந்த பிரதேச செயலாளரால் 3 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. இதில் 2 ஏக்கர் காணியை தற்போதைய பிரதேச செயலாளர் தனிநபர் ஒருவருக்கு வழங்கியுள்ளார். இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இன்றைய தினம் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது அலம்பில் மாதர் சங்க உறுப்பினர்களின் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ் வரனிடம் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் கையளித்தனர்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில், வடமாகாணசபை உறுப்பினர்களான ரவிகரன் மற்றும் அன்ரனி ஜெகநாதன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ற)

# மட்டு. மாவட்டத்தில் 3,65,000 வாக்காளர்கள்

## எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வாக்களிக்க தகுதி



மட்டக்களப்பு, ஜூன் 30

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிக்க 3 இலட்சத்து 65 ஆயிரத்து 167 பேர் தகுதி பெற்றிருப்பதாக மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆர்.சீலன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் 1 இலட்சத்து 72 ஆயிரத்து 499 பேரும், கல்குடா தொகுதியில் 1 இலட்சத்து 5 ஆயிரத்து 56 பேரும், பட்டிருப்பு தொகுதியில் 87 ஆயிரத்து 612 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இந்த மாவட்டத்தில் 414 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. மட்டக்களப்பில் 199 நிலையங்களும், கல்குடாவில் 115 நிலையங்களும், பட்டிருப்பில் 100 நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. இம்மாவட்டத்திற்கான தேர்தல் அலுவலக நடவடிக்கைககள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. – என்று தெரிவித்தார். (ற)



பொலிஸாருக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வு வவுனியா மாவட்ட பொலிஸ் மா அதிபர் திஸ்ஸ நாயக்க தலைமையில் நடைபெற்றது. ஆயிரத்து 600 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாருக்கு வழங்கப்படவுள்ள நிலையில் நிகழ்வில் 200 மோட்டார் சைக்கிள்கள் வைபவ ரீதியாக வழங்கப்பட்டன. (ற)

# பாரிசவாத நோயாளர்களுக்கு புனர்வாழ்வு நிலையம் திறப்பு

## வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, ஜூன் 30

இலங்கையில் பாரிசவாத நோயாளர்களுக்கான முதலாவது புனர்வாழ்வு நிலையம் மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடைகளுடன் இந்த பாரிசவாத நோய்க்கான புனர்வாழ்வு நிலையமானது, சிகிச்சையுடன் ஆற்றுப்படுத்தும் வகையிலான சுற்றுச் சூழல்களையும் பொழுதுபோக்கு அம்சங்களையும் கொண்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு இலங்கையில் ஆசிய பாரிசவாத மாநாட்டில் கலந்து கொண்ட அப்போதைய சுகாதார அமைச்சராகவிருந்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாரிசவாத நோயின் தாக்கம் பற்றி குறிப்பிட்டு கவலை வெளியிட்டிருந்தார். அங்குள்ள வைத்திய சாலைகளில் பாரிசவாத நோய்க்கான தனியான சிகிச்சை பிரிவுகள் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் தேவை பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இலங்கையில் 110 பேரில் ஒருவர் பாரிசவாத நோயால் பாதிக்கப்படுவதாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட உள நல மருத்துவரான ரமேஸ் ஜெயக்குமார் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வொன்றை மேற்கோள் காட்டி குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஆறு அரசாங்க வைத்தியசாலைகளில் மட்டுமே பாரிசவாத நோய்க்கான அதி தீவிர சிகிச்சை பிரிவுகள் உள்ளன. ஆனால், தனியான புனர்வாழ்வு நிலையங்கள் எதுவும் இதுவரையில் இல்லை.

இந்நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையத்தில் 10 பேர் தங்கிருந்து சிகிச்சையுடன் இணைந்த புனர்வாழ்வு பெறுவதற்கான வசதிகள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு போதானா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்ற பின்னர், புனர்வாழ்வு நிலையத்தில் பாரிசவாத நோயாளிகள் இணைத்துக் கொள்ளப்படுவதுடன், இங்கு அதி தீவிர சிகிச்சை வழங்கப்படமாட்டாது.

புனர்வாழ்வு என்பது கால வரையறைக்கு உட்பட்டது அல்ல. அவர் தானாக இயங்கும் வரை இங்கு புனர்வாழ்வளிக்கப்படும்.– என்றார். (ற)

# அலுவலக திறப்பும் கருத்தமர்வும்

யாழ்ப்பாணம், ஜூன் 30

முன்னிலை சோஷலிசக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகம் யாழ். ஸ்ரான்லி வீதி ஆரிய குளம் பகுதியில் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

அத்துடன் யாழ்.பொது நூலகத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடதுசாரிய நடவடிக்கை எனும் நூல் வெளியீடும் கருத்தரங்கும் இடம் பெறவுள்ளது என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞருக்கு அரசியல் கருத்துக்கள் புகுத்தப்பட வேண்டும்

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் வாசுதேவ குருக்கள் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 30

இன்றைய இளைஞர்கள் வேறு திசையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் பொழுது போக்கு விடயங்களுக்குள் உள்ளீர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு அரசியல் கருத்துக்கள் புகுத்தப்பட்டு, சரியான திசையை நோக்கி பயணிக்க வைப்பதற்கு இவ்வாறான கட்சி அலுவலகங்கள் திறக்கப்பட வேண்டும். – இவ்வாறு தெரிவித்த சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் தலைவர் வாசுதேவ குருக்கள், வெற்றியின் மறுபக்கம் தமிழர சுக் கட்சி தான் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அலுவலகம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்தியாவில் வீட்டுக்கு வீடு ஒவ்வொரு கட்சிகளின் வர்ணக் கொடிகள் கட்டப்பட்டிருக்கும். அதனைப் பார்த்து நான் அவர்களிடம் கேட்டேன், ஏதாவது தேர்தல் வரப் போகின்றதா என்று. அவர்கள் சொன்னார்கள், இல்லை இங்கே இப்படித்தான் ஒவ்வொரு கிராமங் களிலும் கட்சி அலுவலகங்கள் இருக்கும் என்று. இதனால்தான், அண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா சிறை சென்ற போது 250 கட்சித் தொண்டர்கள் தற் கொலை செய்தார்கள். மக்களுடன் கட்சி இணைந்திருப்பதை அங்கு காண முடிந்தது.

அதே போன்று இங்கும், வட்டுக் கோட்டைத் தொகுதியிலும் மக்களுடன் இணைந்து அதிலும் மக்கள் வாழ்வோடு இணைந்து அலுவலகம் திறக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்க விடயம். வெற்றி என்பது தமிழரசுக் கட்சியுடன் கூட இருப்பது. வெற்றி என்றால் அது தமிழ ரசுக் கட்சி தான். இளைஞர்கள் வருகை இங்கு சிறப்பாக அமைந்திருக்கின்றது.

இன்று சம காலத்தில், இளைஞர்களின் அரசியல் பிரவேசம் என்பது குறைவாகி விட்டது என்று எனது ஆசியுரையில் கூற யோசித்தேன். ஆனால் எனது கருத்துப் பொய்யாகி விட்டது. இங்கு வந்து பார்க் கின்ற போது இவ்வளவு இளைஞர்கள் இருக்கின்றார்கள்.

அன்றைய காலத்தில் எமது தமிழரசுக் கட்சித் தலைவர்களின் பேச்சுக்காக ஏராளமான இளைஞர்கள் வருகை தருவார்கள். அரசியல் சிந்தனைகள் இளைஞர்களிடம் இருந்தது. இன்று சிந்தனைகள் பொழுது போக்கை நோக்கியதாக இருந்ததனால், இளைஞர்களுக்கும் அரசியலுக்கும் இடையில் இடைவெளி அதிகரித்திருக்கின்றது. அதனால் இளைஞர்கள் வேறு வழியில் சென்று கொண்டிருக்கின் றார்கள்.

அவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்ப்பதற்கு, இவ்வாறான அலுவலகங்களைத் திறந்து இளைஞர்களுக்கு அரசியல் சிந்தனைகளைப் புகுத்தி, எங்களுடைய உரிமைகளை வென்றெடுப்ப தற்கு, நாங்கள் யார் என்பதை அடையாளப்படுத்துவதற்கு, மக் களுடன் இணைந்து இவ்வாறான நிகழ்வுகளை முன்னெடுத்திருப் பது பாராட்டுக்குரியது. இறுதியாக, மக்களுடன் மக்களாக தமிழரசுக் கட்சி நிற்பதால் தான், நானும் அந்தக் கூட்டங்களில் பங்கெடுக் கின்றேன் – என்றார். (ற–5,101)

# நான்கு நாள்களுக்குள் மீண்டும் இடமாற்றம்

## மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு

மட்டக்களப்பு, ஜூன் 30

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிரதிப் பொலிஸ் மா ரீ.பி.சம்சுதீன், நுவரெலியா மாவட்டத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

பொது உறவுகள் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரில் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனால் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட ரீ.பி.சம்சுதீன் கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை கடமைகளை பொறுப்பேற்றார்.

எனினும் கடமைகளை பொறுப்பேற்று நான்கு நாள்களுக்குள் அவர் முன்னர் கடமையாற்றிய நுவரெலியா மாவட்டத்துக்கு இவர் மீண்டும் இடமாற்றப்பட்டுள்ளார். இதனால் திருகோணமலைக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர், தற்போது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கான பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபராக செயற்பட்டு வருகின்றார்.(ற–10)

# ஆதரவற்றோருக்கு நிதியுதவி வழங்கல்

காத்தான்குடி, ஜூன் 30

சிறிலங்கா ஹிறா பவுண்டேஷன் நிறுவனமும், லண்டன் பத்மா ஒஸ்மான் பவுண்டேஷனும் இணைந்து புதிய காத்தான்குடி அப்ரார் நகர் பிரதேசத்திலுள்ள கணவனை இழந்த பெண்கள் மற்றும் ஆதரவற்றோருக்கு மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளன. இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு புதிய காத்தான்குடி அப்ரார் பள்ளிவாசல் முன்றலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

அப்ரார் பள்ளிவாசல் செயலாளர் எம்.எஸ்.எம்.றாஸிக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறிலங்கா ஹிறா பவுண்டேஷன் நிறுவனத்தின் பணிப்பாளரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண் டார். நிகழ்வில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட சுமார் 20பேருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் உதவிப் பணம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பரீட், நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ்வின் சிரேஷ்ட புதல்வர் ஹிறாஸ் அஹமட், சிறிலங்கா ஹிறா பவுண்டேஷன் நிறுவனத்தின் இணைப்பாளர்கள் உட்பட அப்ரார் பள்ளிவாசல் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். (ற–10)

# வடக்கு அலுவலர்களுக்கு இருநாள்கள் செயலமர்வு



யாழ்ப்பாணம், ஜூன் 30

வடக்கு மாகாண பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்கள் முதியோர் உரிமைகள் அபிவிருத்தி உதவியாளர்கள் ஆகியோருக்கான இரு நாள் செயலமர்வு கடந்த 26ஆம், 27ஆம் ஆகிய திகதிகளில் கண்டி பொல்கொல்ல கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலை யில் இடம்பெற்றன.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள ஏற்பாட்டில் இடம் பெற்ற செயலமர்வுகளில் சமூக சேவைகள் அமைச்சின் திட்டப் பணிப்பாளர் எம்.இராமமூர்த்தி வளவாளராகக் கலந்து கொண் டார்.

வட மாகாண சமூக சேவைகள் அமைச்சின் சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் முகமாக இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட் டது. (ற–9)


நவீன அழகிய பிறேம் (GLASS CRYSTAL FRAME)

கிறிஸ்ரல் பிறேம் போன்ற அழகிய பிறேம் சகல அளவுகளிலும் 30 நிமிடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

347 கே.கே. எஸ் வீதி (முட்டாஸ் கடைச் சந்தி) யாழ்ப்பாணம். 021 222 8510

"விஸ்ரா விஷன்" 52,பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5187



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக்கூட்டம் பிற்போடல் தொடர்பான அறிவித்தல்

எமது சங்கத்தின் 05.07.2015 ஆம் திகதி நடைபெற விருந்த விசேட பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய விசேட பொதுக் கூட்டத் திகதி பின்னர் அறிவிக்கப்பட்டும்.

செயலாளர்



தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் ஆர். வி.ஜி மருந்த கத்திற்குமருந்தாளர் (PHARMACIST) தேவை.
தகுதியானவர் விண்ணபிக்கவும்.
தொடர்பு :- ஆர். வி. ஜீ மருந்தகம் இல. 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

1½ மாத பூச்சி நீக்கிய German Shepherd குட்டிகள் விற்பனைக்கு.
தொடர்பு: பருத்தித்துறை 077 904 8404

வேலையாள் தேவை

சாவகச்சேரி கண்டி வீதியில் இயங்கி வரும் எலக்ரோனிக் கடைக்கு வேலையாள் (பெண்) தேவை.
தொடர்பு : 077 176 6259

மிருகவைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் மிருகவைத்திய தேவைகளுக்கு
தொடர்பு : 077 973 8802
021 224 2502

வீடு வாடகைக்கு

அதிகாரிவீதி,கோப்பாய் தெற்கு,கோப்பாயில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு : 077 825 1038

A/Cவாகனங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையில் காணப்படும் மருத்துவர் ஒருவரின் பாவனையில் உள்ள இரண்டு வாகனங்கள் விற்பனைக்கு உள்ளன.
டொல்பின் வான் W.P.PA 74xx
பேபி றோசாபஸ் 62-66xx
தொடர்பு : 077 712 6859


காணவில்லை



கிளிநொச்சியை பிறப்பிடமாகவும், மந்துவில் கிழக்கு கொடிகாமத்தை வசிப்பிட மாகவும் கொ ண்ட சண்முகராஜா புவனேஸ்வரன் கடந்த 25.06.2015 வியாழக்கிழமைசுகயீனம் காரணமாக வைத்தியசாலைக்கு புறப்பட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை . கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 354 6609


Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15





ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021-2227712

CeylonTheatres www.ceylontheatres.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் செவ்வாய்க்கிழமை | ஜூன் 30 | 2015

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அக்கம் பக்கத்தினருடன் அதிக நெருக்கத்தை தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். குடும்பச் செலவுக்காக பணக்கடன் பெறுவீர்கள். மனைவியின் கருத்து, நன்மைக்கு வழிவகுக்கும்.



**இடபம்:** நண்பருக்கு நல்வழி காட்ட முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். தெய்வ வழிபாட்டில் ஆர்வம் உண்டாகும்.



**மிதுனம்:** தைரியத்துடன் செயற்பட்டு, வெற்றி காண்பீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு நல்ல முறையில் கிடைக்கும். பணக்கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். எதிரி, இடம் மாறிப் போகும் சூழ்நிலை உருவாகும்.



**கடகம்:** சுதந்திரமாகச் செயற்பட்டு வருவீர்கள். உழைப்பின் மூலம் தொழிலில் ஆதாயம் காண்பீர்கள். உறவினர் வருகையால், மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசியல் வாதிகளுக்கு, புதிய பதவி கிடைக்கும்.



**சிங்கம்:** செயல்களில் மந்தநிலை தென்படலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி தாமதமாகும். வரவுக்கு ஏற்ப, புதிய செலவும் உண்டாகும். தெய்வ வழிபாடு, நிம்மதிக்கு வழிவகுக்கும்.



**கன்னி:** மனதில் சந்தோஷம், பரபரப்பு நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். பிறர் துன்பம் தீர, தேவையான உதவி செய்வீர்கள். வாகன வகையில், பராமரிப்புச் செலவு செய்ய நேரிடும்.



**துலாம்:** பிடிவாத குணத்தால், சிலரது அதிருப்திக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வீட்டில் ஆடம்பரச் செலவு ஏற்படலாம். பாதுகாப்புக் குறைவான இடத்துக்குச் செல்ல வேண்டாம்.



**விருச்சிகம்:** சந்தோஷ வெளிப்பாடு, செயலில் பிரதிபலிக்கும். உறவினர்களுக்குத் தேவையான உதவி புரிவீர்கள். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். புதிதாகச் சொத்துச் சேர்க்கை உண்டாகும்.



**தனுசு:** நண்பர்களிடம் விரக்தி மனதுடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகளின் செயற்பாடு, ஆறுதல் அளிக்கும்.



**மகரம்:** சாதனையால், சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். வாழ்க்கைத் தரம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். உறவினர்களை மனமுவந்து உபசரிப்பீர்கள்.



**கும்பம்:** தன்னம்பிக்கையும், புத்துணர்ச்சியும் மேலோங்கும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். குடும்பத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.



**மீனம்:** பணியின் முக்கியத்துவம் அறிந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில், பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும். உடல்நலனில் ஆர்வம் காட்டுவீர்கள்.




# எம்.எஸ்.வி முன்னேற்றம்

இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன், சில தினங்களுக்கு முன்பு மூச்சுத் திணறல் காரணமாக அடையாறில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வைத்தியர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். இந்த நிலையில் எம்.எஸ்.விஸ்வநாதனின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவருக்கு சிகிச்சை அளித்து வரும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் அவர், சாதாரண விடுதிக்கு மாற்றப்படுவார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# செல்பி கோப்பி



உங்கள் தொலைபேசியில் எடுக்கும் செல்பிகளை அச்சு அசலாக அதேபோல் கோப்பி குடிபானத்திலும் வரையும் புதிய கருவி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஆரம்பித்த செல்பி மோகம் தற்போது உலகத்தையே ஆட்டிப் படைக்கும் விடயமாக மாறி விட்டது. எந்த அளவுக்கு என்றால் செல்பி எடுப்பதற்கு என்று சிறப்பு போன்கள் வரும் அளவுக்கு இதன் அடுத்த கட்டமாக லண்டனில் 3 டி பிரிண்டர் தொழில்நுட்ப அடிப்படையில் கோப்பி இயந்திரம் ஒன்று நுரையைப் பயன்படுத்தி செல்பிகளை வரையும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உங்கள் செல்பி, புகைப்படம் அல்லது செய்திகள் ஆகியவற்றை இதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஆப் மூலம் கடைகாரர்களுக்கு அனுப்பவேண்டும். அடுத்த 10 வினாடிகளில் நீங்கள் அனுப்பிய படங்கள் கோப்பியின் மேற்பகுதியில் அழகாக மிதந்து கொண்டிருக்கும்.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...

**மனைவி:** ஏங்க.. சமையல்காரியை நிறுத்திட்டு இனி நானே சமைக்கிறேன். எனக்கு மாசம் எவ்வளவு சம்பளம் கொடுப்பீங்க?

**கணவன்:** உனக்கு எதுக்குடா சம்பளம். நீ சமைக்க ஆரம்பிச்சுட்டேனா என்னோட காப்புறுதிப் பணம் மொத்தமும் உனக்குத்தானே..!

**பொலிஸ்:** உன் மனைவியை உடனடியாகக் கண்டுபிடிச்சி உன்கிட்டே ஒப்படைக்கிறது எங்க பொறுப்பு.

**வந்தவர்:** ஒண்ணும் அவசரமில்லே... ரொம்பவும் சிரமப்பட வேண்டாம்.

# டிடிக்கு என்னாச்சு?



விஜய் தொலைக்காட்சியில் மிகவும் பிரபலமான நிகழ்ச்சித் தொகுப்பாளினி திவ்யதர்ஷினி. டிடி என்றால் தூதர்ஷன் என்ற நிலையை மாற்றி டிடி என்றால் திவ்யதர்ஷினி என்று மக்களின் மனதில் பதியவைத்த பெருமை இவரையே சேரும். விஜய் தொலைக்காட்சி என்றாலே திவ்யதர்ஷினி தான். பிரபலமான தொகுப்பாளர் என்று தன்னை மக்களின் மனதில் பதிய வைத்து, தனக்கென்று ஒரு ரசிகர்கள் வட்டத்தை உருவாக்கிக் கொண்டவர்.

இவர் நடத்தி வந்த காபி வித் டிடி நிகழ்ச்சி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை, வரவேற்பைப் பெற்ற ஒரு நிகழ்ச்சி. சினிமா பிரபலங்களை பேட்டி கண்டு பல சுவாரஸ்யமான விடயங்களை அவர்களிடம் இருந்து வெளிக்கொணர்ந்து நிகழ்ச்சியை, கலகலப்பாக இவர் நடத்திச் சென்றதில் விஜய் தொலைக் காட்சியின் டிஆர்பி எகிறியது.

இவ்வளவு நல்ல தொகுப்பாளரை சமீப காலமாக எந்த நிகழ்ச்சிகளிலும் விஜய் தொலைக்காட்சியில் காண முடியவில்லை. பத்திரிகையாளர்கள் தொடர்பு கொண்டு கேட்டாலும் குழப்பமான பதிலையே தருகின்றார். டிடி. விஜய் தொலைக்காட்சியில் கேட்டாலும் எந்த ஒரு பதிலையும் அவர்கள் சொல்வதில்லை. இதனால் விஜய் தொலைக்காட்சியில் டிடி இருக்கிறாரா இல்லையா என்பதில் குழப்பம் நீடித்து வருகிறது.

இத்தனை களேபரங்களுக்கு மத்தியில் விஜய் தொலைக்காட்சி டிடி இருப்பது போல காட்டிக் கொள்கிறது. காபி வித் டிடி நிகழ்ச்சியில் டிடி தொகுத்து வழங்கிய பழைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி, அவர் இங்குதான் இருக்கிறார் என்று சொல்லாமல் சொல்கிறது விஜய்.

இதற்கிடையில் டிடியின் காலில் விபத்து ஏற்பட்டு இருக்கிறது. அதனால் அவர் ஓய்வில் இருக்கிறார் என்று ஒரு தகவலும், டிடி தரப்பில் இருந்து கசிந்துள்ளது. இரண்டு தரப்பினருமே தொடர்ந்து கண்ணாமூச்சி ஆடி வருகின்றனர், விரைவில் உண்மை



# உயரமான மாடு சாவு

6 அடி 2 அங்குல உயரமான உலகின் மிகவும் உயரமான மாடு காலில் ஏற்பட்ட காயமொன்றையடுத்து உயிரிழந்துள்ளது.

அமெரிக்க இலினொயிஸ் மாநிலத்தைச் சேர்ந்த 13 வயதான புளோஸம் என்ற இந்த மாடு இந்த வருட ஆரம்பத்தில் உலகின் உயரமான மாடாக கின்னஸ் உலக சாதனைப் பதிவேட்டு அதிகாரிகளின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவுடன் மைத்திரி கை கோர்க்க மாட்டார்

## ஐ.தே.க. நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 30

சர்வாதிகார ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைக்க தமது உயிரையும் பொருட்படுத்தாது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் பேராதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எவ்வாறான சந்தர்ப்பத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாற்றுக் குழுவாகச் செயற்படும் மஹிந்த அணியுடன் கைகோர்த்து செயற்படமாட்டார். இது தொடர்பில் ஜனாதிபதி மீது எமக்கு பூரண நம்பிக்கை உள்ளது. – இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பொது தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி முன்னெடுக்க எதிர்ப்பார்க்கும் செயற்றிட்டங்கள் தொடர்பிலான ஊடகவியலாளர் மாநாடு கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சருமான எரான் விக்கிரமரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளர் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. அந்த வகையில் மக்கள், ஒன்றை நன்கு புறிந்து கொள்ள வேண்டும். இங்கு காணப்படுவது பிரதமர் ஒருவரை நியமிப்பது தொடர்பிலான பிரச்சினை அல்ல. மக்களின் தேவைகளை நிறை வேற்றவும் எமது நாட்டை அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கான சக்திமிக்கதான அரசை உருவாக்குவதே ஆகும்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் பொதுத் தோதலில் மக்களின் சார்பில் நாடாளுமன்ற பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தொடர்பில் மக்களும் கட்சியின் தலைவர்கள் உட்பட அனைத்து அங்கத்தவர்களும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

இன்று எமது ஐக்கிய தேசியக்கட்சி அரசை எடுத்துக் கொண்டால் அதில் நாடாளுமன்ற அங்கத்துவம் பெறும் பல்வேறு பிரதிநிதிகள் ஒவ்வொரு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும் பட்டதாரிகளாகவும் காணப்படுகின்றனர். அந்த வகையிலேயே எமது கட்சியின் நாடாளுமன்ற பிரநிதித்துவங்கள் அமைந்திருக்கின்றன. இவ்வாறான பிரதிநிதித்துவங்கள் ஒரு நாட்டில் காணப்படும் பட்சத்திலேயே நாட்டின் உண்மையான பொருளாதார நிலை மற்றும் பொருளாதார எதிர்வு கூறல்கள் இனங்காணப்பட்டு மக்களின் உண்மையான பிரச்சினைகள் தீர்க்கப்படும். எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் பிரதிநிதியாக போட்டியிட அனுமதி வழங்கும் குறித்த போட்டியாளர் தொடர்பில் கட்சியின் தலைவர்கள் உட்பட மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் எழுந்த வண்ணம் உள்ளன. சர்வாதிகார ஊழல்ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைக்க தமது உயிரையும் பொருட்பாடுத்தாது கடந்த ஜனாதிபதித் தோதலில் மக்களின் பேராதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எவ்வாறான சந்தர்ப்பத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாற்றுக்குழுவாக செயற்படும் மஹிந்த அணியுடன் கைகோர்த்து செயற் படமாட்டார். இவ்விடயம் தொடர் பில் ஜனாதிபதி மீது எமக்கு பூரண நம்பிக்கை உள்ளது.

எமது நம்பிக்கையையும் மீறி குறித்த அணி இரண்டும் கைகோர்த்து எதிர்வரும் பொது தோதலுக்கு சென்றால் அதுவும் எமது கட்சிக்கே நன்மை பயக்கும். காரணம் கடந்த அரசின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சியின் கீழ் பல்வேறு அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் அமைச்சுகளின் செயலாளர்களும் பல்வேறு ஊழல் செயற்பாடுகளை முன்னெடுத்தமை மக்களுக்கு தெரிய வந்துள்ளதோடு, அவை தொடர்பிலான அனைத்து விசாரணைகளும் நீதியான முறையில் இடம் பெற்று வரும் நிலையில் இந்த இரண்டு தரப்பினர்களும் ஒன்று சேர்வார்களாயின் அது எமது கட்சிக்கே சாதகமாக அமையும்.

காரணம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மீது மக்கள் வைத்திருக்கின்ற ஒரு சில நம்பிக்கைகளும் இல்லாமல் போகும். மறுபுறத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டதா என்பது தொடர்பிலும் மக்கள் மனதில் கேள்வி ஒன்று எழும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக போட்டியிட வைப்பிக்க இன்று பல் வேறு தரப்பினர் முயற்சிக்கின்றனர்.அவரை முன்னிலைப் படுத்தி தமது நாடாளுமன்ற பிரதி நிதித்துவத்தை தக்க வைத்து கொள்வதே அதற்கான காரணம்.

எமது நாட்டில் முன்னாள் தேச தலைவர்களையும் ஜனாதிபதியாக பதவிவகித்தவர்களையும் எண்ணிப் பார்ப்போமானால் அவர்கள் இந்த நாட்டுக்காகவும் எமது மக்களுக்காகவும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளமையைக் குறிப்பிட முடியும். அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எண்ணிப் பார்த்தோமானால் பஸில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ போன்றவர்களே மக்களின் மனதில் தோன்றுவர். இவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஒன்றும் புதிதாகக் கூற வேண்டியது இல்லை.

இன்று எமது கட்சி மீது மக்கள் மனதில் பெரும் நம்பிக்கை உள்ளது. கடந்தக்காலங்களில் மக்களுக்கான சிறந்த சேவைகளை மேற்கொண்டதன் காரணமாகவே கடந்த மே தின நிகழ்வில் வரலாறு காணாத மக்கள் வெள்ளம் எம்மோடு கை கோர்த்தது. எமது சேவைகள் மக்கள் மனதில் பதிந்துள்ளன. இது தொடர்பில் எவ்வித சந்தேகமும் எமக்கு இல்லை.

முன்னைய அரசின் கீழ் ஊழல் செயற்பாடுகளை முன்னெடுத்த தரப்பினர்களுக்கு இம்முறையும் கட்சிகள் போட்டியிட அனுமதி வழங்கினால் அவர்களை மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் இவ்வாறான நிலையே முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் நிகழும். – என்றார். (ற)

# பலம் மிக்க கட்சியாக களமிறங்கும் ஐ.தே.க.

## நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

நாடாளுமன்றத் தேர்தலில் பலமான கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி களமிறங்கும். பெரும்பான்மை வாக்குகளுடன் மாபெரும் வெற்றியைப் பெற்றே தீரும் என அந்தக் கட்சியின் உபதலைவரும் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் மக்கள் ஆணை எந்தத் தரப்பினர் பக்கம் உள்ளதென்பது தெரியவரும். நீதியான தேர்தலை நடத்தி வெற்றியை உறுதி செய்வோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு கலைக்கப்பட்டது. அதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் தயார் நிலை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:–

ஜனவரி 8 ஆம் திகதி சர்வாதிகார போக்குடன் கூடிய ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு எதிராக ஜனநாயக புரட்சியை முன்னெடுத்து மாபெரும் வெற்றியைப் பெற்றுக்கொண் டோம். எமது முதற் கட்ட புரட்சியை வெற்றி கொண்டோம்.

இந்த நிலையில் இரண்டாம் கட்டப் புரட்சிக்கு நாம் தற்போது தயாராக உள்ளோம். இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட வர்த்தமானி அறிக்கையின் மூலமாக நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படவுள்ளது. தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாகத் தயாராக உள்ளது. எனவே பலமான கட்சியாக நாம் தேர்தலில் களமிறங்கி மாபெரும் வெற்றியைப் பெற்று ஆட்சிபீடமேறுவோம்.

நாட்டில் இதுவரை காலமும் எந்தவொரு அரசும் செய்யாதவைகளை 100 நாள்களில் சிறு பான்மை அரசாக இருந்துகொண்டும் நிறைவேற்றி யுள்ளோம். எவராலும் மாற்ற முடியாதென்று கூறப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையைத் திருத்தியமைத்தோம்.

அதுபோன்று பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்ததுடன், அத்தியாவசிய பொருள்களின் விலைகளையும் குறைத்து மக்களுக்கு சலுகை வழங்கினோம். எனவே தற்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பெரும்பான்மை அரசு அமைக்க எமக்கு மக்கள் ஆணை வழங்கினால் பொருளாதார ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

எனவே இந்தத் தேர்தலில் மக்கள் ஆணை எந்தத் தரப்பினர் பக்கம் உள்ளதென்பது தெரியவரும். எவ்வாறாயினும் நீதியான தேர்தலை நடத்திக் காட்டி எமது வெற்றியை உறுதி செய்வோம். – என்றார். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மாற்றுத்திறனாளிகளுக்கு

# கருணை உதவி


### புரியும் யாழ். மண்ணின் மைந்தன்

# கணேஸ்வரன் வேலாயுதம்









**நாடு தழுவிய ரீதியில் இன மொழி மத பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் மாற்றுத் திறன்கொண்ட சிறார்களின் மேம்பாட்டுக்காக மகா உன்னத சேவையாற்றுபவர்தான் கணேஸ்வரன் வேலாயுதம்.**



மாற்றுத் திறனாளிகளுடைய பெற்றோர்கள்படும் அவஸ்தையையும் சோகக் கதையையும் அவலத்தையும் அவர்கள் வடிக்கும் கண்ணீரையும் நன்கு அறிந்தவர்தான் கணேஸ்வரன் வேலாயுதம். அவருக்கு லண்டனில் சிவன் என்ற மாற்றுத் திறனாளியான 19 வயதுடைய மகன் இருக்கிறார். அவருக்குக் கண் தெரியாது. வாய் பேச முடியாது. நடக்க முடியாது. மாற்றுத் திறனாளிகளுடைய வேதனையை தன் மகன் மூலமாக நன்கு அறிந்த மனிதர் இவர்.

கொடூரப் போரின் காரணமாக இடம்பெயர்ந்து சென்று லண்டனில் வாழ்ந்த ஒருவர். தன்னுடைய மகன் சிவனின் பெயரால் இலங்கை முழுவதும் மாற்றுத் திறனாளிகளுக்காக 13 நிலையங்களை நிறுவி பெருமளவான மனிதாபிமான சேவைகளை ஆற்றி வருகிறார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, புதுக்குடியிருப்பு, சுன்னாகம் கண்ணகிமுகாம், குருநகர், கிளிநொச்சி, நெல்லியடி, கண்டி, பனவிலை, மட்டக்களப்பு, கேகாலை, மாத்தளை, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் திறக்கப்பட்டுள்ளன. இங்கே அனைத்து சிகிச்சைகளும் இவரது சொந்த நிதியின் மூலம் இலவசமாகவே நடைபெறுகின்றன. 14ஆவது கிளை பெ[illegible] விரைவில் திறக்கப்படவுள்ளது. இந்த உன்னத சே[illegible] வேலாயுதத்தின் பெயர் வரலாற்றில் முக்கிய இடத்தைப்பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் போசாக்கு தொடர்பிலும் அரசு கொள்கை வகுக்க வேண்டும்

## நுகர்வோர் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 30

புற்றுநோய் மற்றும் இதய நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும் ஈயம் மற்றும் 'மெனோசோடியம் க்ளூட்டமேற்' (எம்.எஸ்.ஜீ.) உள்ளடக்கியுள்ள உணவு உற்பத்திகளை இந்த நாட்டு வர்த்தகச் சந்தையில் இருந்து அகற்றுமாறு நுகர்வோர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்பு, அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தப் புற்றுநோய்க் காரணியை உள்ளடக்கியுள்ள உடனடித் தயாரிப்பு நூடில்ஸ் வகைகளை வர்த்தகச் சந்தையில் இருந்து அகற்றுவ தற்கு அண்மையில் இந்திய அரசு நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும் இலங்கை அரசு இன்னமும் அது சம்பந்தப்பட்ட தீர்மானமொன் றுக்கு வரவில்லை என்றும் மேற்படி அமைப்பின் அமைப்பாளரான ரஞ்ஜித் விதானகே, மருதானை சமூக மற்றும் ஒருங்கிணைப்பு மையத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றிருந்த ஊடகச் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரும்பாலும் வீட்டுத் தலைவிமார் நேரத்தை மீதப்படுத்துவதற்கு வசதியாக இத்தகைய திடீர்த் தயாரிப்பு நூடில்ஸ் வகைகளை தமது பிள்ளைகளுக்கு உண்ணக் கொடுக்கின்ற னர்.

கல்வி முறைமையினுள் எந்தளவு மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டாலும், பிள்ளைகளுக்கு போஷாக்குமிக்க ஒருவேளை உணவு வழங்கப்படாது போகுமானால் பிள்ளைகள் நோயுறுவதைத் தவிர்க்க இயலாது.

இத்தகைய இரசாயனப் பதார்த்தங்களைக் கொண்டுள்ள உணவு உடலுக்குள் செல்லும்போது குணப்படுத்த முடியாத புற்றுநோய்த் தாக்கம் ஏற்படுகிறது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பெருமளவிலான உணவகங்களில் வழங்கப்படும் உணவு வகைகளில் இந்த ருசியூட்டிகள் செறிந்துள்ளன. பலதரப்பட்ட பெயர்களில் வர்த்தக சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள இந்த ருசியூட்டிகள் இன்றளவில் பெருமளவிலான உணவு வகைகளில் உள்ளடக்கப்படுகின் றன.

உதாரணமாக கொழும்பு நகரிலுள்ள பிரதானமான பாடசாலையொன்றில் காலைநேர உணவாக கொத்துறொட்டி வழங்கப்படுகிறது.

மேலுமொரு பிரதானமான பாடசாலையின் உணவகத்தில் உடலுக்கு ஒவ்வாத குளிர்பான உற்பத்தியொன்று விற்பனை செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் நேரடிக் கண்காணிப்பு தேவைப் படுகிறது.

அவ்விதம் செயற்படாதுவிடில் 2020 ஆம் ஆண்டாகும்போது இந்த நாட்டில் கணிசமானவர்கள் புற்றுநோயால் உயிரிழப்பர் என்பது எமக்கு மிக நன்றாகவே தெளிவாகின்றது. 19 ஆவது மற்றும் 20 ஆவது அரசமைப்புத் திருத்தங்கள் வெளியிடப்படுவது போன்றே நாட்டு மக்களின் உணவுகள் மற்றும் போஷாக்கு சம்பந்தமாக புதிய தேசிய கொள்கையொன்றை முன்வைக்குமாறு நாம் அரசிடம் வேண்டுகின்றோம் - என்றார். (ற-22)

# புங்குடுதீவு மாணவியின் கொலையை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றம்

## வலி.தென்மேற்கு பிரதேச சபையில்

கல்மனம் படைத்தவர்களையும் கலங்கவைக்கும் சம்பவம் புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவிக்கு நடந்திருக்கின்றது. வெள்ளை உடை அணிந்த, ஒன்றும் அறியாத அப்பாவி மாணவிக்கு நடந்த கீழ்த் தரமான, கொடூரமான செயலானது தமிழ்ச் சமூகத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கீழ்த்தரமான செயலுக்கு உடந்தையாக இருந்த பாதகர்கள் அனைவரையும் சட்டத்தின்முன் நிறுத்தி கடுமையான அதியுச்ச தண்டனை வழங்குவதோடு மட்டும் நின்றுவிடாது, எமது மக்களின் பாரம்பரியங்களை, கலாசாரத்தை சீரழிப்பதற்கு உடந்தையாக இருக்கும் அனைவரையும் இனங்கண்டு கடுமையான தண்டனை வழங்கவேண்டும்.- இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் நடைபெற்ற வழமையான சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இனிமேலும் இளம் சந்ததியினரின் கலாசாரத்தைக் காக்கும் வகையில், பெண்கள், மாணவர்கள், சிறுவர்கள் மீது நடக்கும் வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு மாணவி வித்தியாவின் கொலைக்கான தீர்ப்பே ஒரு பாடமாக அமைய வேண்டும். அத்துடன் பெண்கள், மாணவர்கள், சிறுவர்கள் ஆகியவர்களது பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை சட்டரீதியாக வழங்கவேண்டிய நடவடிக்கைகளை அரசு விரைந்து செயற்படுத்த வேண்டும்- என்று அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற)

# தச்சன்தோப்பில் சித்த மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நாவற்குழி தச்சன்தோப்பில் நாளை மறுதினம் வியாழக்கிழமை சித்த மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

தச்சன்தோப்பிலுள்ள கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இந்த முகாம் நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் ஆரம்பிக்கும் இந்த முகாம் ஒவ்வொரு கிழமையும் புதன்கிழமைகளில் முற்பகல் 9 தொடக்கம் மதியம் 12 வரை இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை விரிவுரையாளர்களாலும் சித்த போதனா வைத்தியசாலை அதிகாரிகளாலும் இந்த முகாம் நடத்தப்படும்.

'கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம்! உணவே மருந்து! மருந்தே உணவு!' எனும் தொனிப்பொருளுடையதாக இந்த சித்த மருத்துவ முகாம் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ற-4)

# தேர்த் திருவிழா

சாவக்சேரி, ஜூன் 30

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்தடன் ஆரம்பமாகிய பெருந் திருவிழா சிவஸ்ரீ க.க. சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகின்றது. (ற-131)

★★★

சாவகச்சேரி, ஜூன் 30

சாவகச்சேரி மண்டுவில் ஸ்ரீஇலஞ்சியாரணியம் கண்ணகை அம்பாள் (சோலை அம்மன்) ஆலய பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான பெருந்திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெற்று வருகின்றன. (ற-131)

சாவகச்சேரி - கல்வயல் - பெருங்குளம்
அருள் மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்-2015
❋ஆனித்திங்கள் 15 ஆம் நாள் 30.06.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இரதோற்சவம்
❋ஆனித்திங்கள் 16 ஆம் நாள் 01.07.2015 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம்
பெருங்குளம் கல்வயல், சாவகச்சேரி. பரிபாலன சபை.

சேவைநலன் பாராட்டு
தனது 52ஆவது வயதில் 30 வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து எமது பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியராகக் கடமையாற்றி, நல்வழி புகட்டி இன்று ஓய்வு பெறும் எமது ஆசிரியர்
திருமதி கௌசலா நடராசா
அவர்கள் எமது பாடசாலையில் ஆற்றிய சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவனை வேண்டி நீடுழி வாழ உளமார வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் கழகம், யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை.



(16222)(9.3.7)

நயினை நாகபூஷணி தாயே தேரேறி வந்து பக்த பெருமக்களுக்கு அருள் தந்தருள்வாய் அன்னையே



தரம் குன்றாத தங்கநகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
நவீன டிசைன்களில் தரம் குறையாத தங்க நகைகளுக்கு
டோனிகா நகைத் தொழிலகம்
82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 888 6191

பாராட்டி வாழ்த்துகின்றோம்
கனகரட்ணம் மனோகரன்
மணி விழா நாயகன் மனோகரன்
மனை சிறக்க வாழ்ந்ததோடு
மாங்குளம் இலங்கை வங்கியிலும் நீண்டகாலம்
மகத்தான பணி புரிந்து
மகிழ்வுடன் ஈரேழு மாதங்கள் அச்சுவேலி
இலங்கை வங்கியில்
இதுவரை கண்டிராத மனைநிறைவுடன்
ஓய்வு பெறும் மணிவிழா நாயகன் பல சிறப்புகள்
பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.
வாழ்த்துவோர் : மனைவி - கலைச்செல்வி
பிள்ளைகள் - பிரதீஸ், பிரசாந், பிரவீன், றஜனுஜா
அம்மா, மாமா, மாமி, சகோதர, சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார், சகலன்மார், சகலிமார்,
மருமக்கள், பெறாமக்கள்.
[illegible] வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி வீதியில் புதிதாக அமைக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையம் வேண்டாம்

## அந்தப் பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கண்டி வீதியும் சோமசுந்தரம் வீதியும் சந்திக்கும் இடத்தில் செஞ்சிலுவைச் சங்கத்துக்குச் சொந்தமான காணியில் தற்பொழுது புதிதாக அமைக்கப்பட்டுவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்தால் போக்குவரத்து நெருக்கடி, சூழல் மாசடைதல், காற்று மாசடைதல், மனஉளைச்சல்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை குறித்த பிரதேசத்தில் வாழும் மக்கள் மிகையாக எதிர்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. – இவ்வாறு தெரிவித்தார் சுற்றுச்சூழல் பொறியியலாளரும் நிபுணருமான உருத்திரலிங்கம்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலயத்தால் ஏற்படப்போகும் பிரச்சினைகள் தொடர்பாக அந்தப் பகுதி மக்களால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போக்குவரத்து நெருக்கடி, சூழல் மாசடைதல், மன உளைச்சல்கள் என்று மூன்று பிரதான தலைப்புக்களில் அவர் அங்கு தெரிவித்ததாவது:–

**போக்குவரத்து நெருக்கடி**

யாழ். மாவட்ட செயலகம், பிரபல்யமான ஆலயங்கள், சென்.பற்றிக்ஸ், சென்.ஜோன்ஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி என்று அதிகப்படியான மாணவர்களைக் கொண்ட பிரபலமான பாடசாலைகள், பூங்காக்கள், விடுதிகள், முதலமைச்சர் அலுவலகம், ஆளுநர் அலுவலகம், இளைஞர் கழகங்கள் என மிகப்பெரும் போக்குவரத்து நெரிசலைச் சந்திக்கும் இந்த இடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையமும் பாவனைக்கு வந்தால் ஏற்கனவே விபத்துக்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இந்த வீதியின் அகோரத்தன்மை இரட்டிப்பு ஆபத்துடையதாக மாறும். தவிர குழந்தைகள் பூங்காக்களும் அருகில் இருப்பதால் வீதி விபத்தில் குழந்தைகளும் சிக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் அதிகமாகும்.

**சூழல் மாசடைதல்**

திட்டமிட்டபடி எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப்படுமாயின் நீர்மாசடைவு, காற்று மாசடைவு போன்றவற்றால் இருபெரும் அத்தியாவசியத் தேவைகளை குறித்த பகுதியில் வாழும் மக்கள் இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். எரிபொருள் கொள்கலன்களில் சிறு வெடிப்பு அல்லது கசிவு ஏற்பட்டால் நிலத்தடி நீரை நம்பியுள்ள குறித்த பகுதியில் வாழும் மக்கள் நீருக்காக வேறொரு மார்க்கத்தை எதிர்பார்க்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படுவார்கள். அது மட்டுமல்லாது எரிபொருள்கள் காற்றுடன் கலக்கும் தன்மையுடையன. எனவே வாகனமொன்றுக்கு எரிபொருள் நிரப்பப் படும்போது காற்றில் கலந்த எரிபொருளின் மூலம் புற்றுநோயை உருவாக்கக்கூடிய பென்சின் என்னும் நச்சுப்பொருளை மக்கள் சுவாசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும்.

**மன உளைச்சல்கள்**

ஏற்கனவே அளவுக்கு அதிகப்படியான வாகனங்களால் பயன்படுத்தப்படும் இந்த வீதியில் ஒலிபெருக்கிச் சத்தம் காது கேட்கும் திறனை குறைவடையச் செய்யும் வகையில் உள்ளது. இந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையம் பாவனைக்குக் கொண்டு வரப்படும் பட்சத்தில் அளவுக்கு அதிகமான வாகன இரைச்சல்களாலும் ஒலிச் சத்தங்களினாலும் காதுகளின் கேட்கும் திறன் குறைவடைவதுடன் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் போன்ற வர்களுக்கு அளவுக்கு அதிகமான மன அழுத்தம் உண்டாகும். அது மட்டுமல்லாது பரீட்சையை எதிர் நோக்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கும் இது ஆரோக்கிய மானதாக இருக்காது. இவ்வாறு மக்களுக்கான எந்தவொரு பாதுகாப்பு வசதிகளும் அடிப்படைத் திட்டமிடல்களும் இல்லாது அமைக்கப்படும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கட்டுமானங்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு மக்கள் தமது இயல்பான வாழ்க்கையை திருப்திகரமாக வாழ அனுமதிக்கப்படவேண்டும்.–என்றார்.

நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண் டிருந்தனர். (ம)



## மரத்தால் விழுந்து இருவர் காயம்

தென்மராட்சி, ஜூன் 30

உயரமான மரங்களிலிருந்து வீழ்ந்து காயங்களுக்கு உள்ளான பாடசாலை மாணவரொருவர் உட்பட இருவர் கடந்த சனிக்கிழமை யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆடுகளுக்கு குழை வெட்டுவதற்கு மரத்தில் ஏறிய சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த அருணாசலம் கிருபைரூபன் (வயது–51) என்பவரும், மாங்காய் பிடுங்க மரத்தில் ஏறிய சரசாலை வடக்கைச் சேர்ந்த சந்திரகாந்தன் நந்துஜன் (வயது–13) என்ற மாணவனும் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்தவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக கிசிக்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ற–9)

## நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியருக்கு கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 30

2009 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து பணியாற்றும் நியமனம் வழங்கப்படாதமுல்லைத்தீவு மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்று நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு மணற்குடியிருப்பு மீனவ சங்கக் கட்டடத்தில் முற்பகல் 9 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதனால் குறித்த ஆசிரியர்கள் அனைவரையும் அன்றைய தினம் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ற–4,102)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**இளையவன் செல்லையா**

ஒத்தசகோதரபாச உணர்ச்சி பொங்க
உத்தமராய் நாமிருவர் உவந்து வாழ்ந்தோம்
வித்தகனே அந்தநிலை விலக்க வென்றே
வேற்றுரை யடைந்திட்டாய் விதியிதுதானோ?
குத்திமுறித் தழவைத்தாய் கொடுமையண்ணா!
அன்பு மிகும் பெரியப்பாவே ஐயா நீரும்
கொடுங்காலன் வளைத்த பாசவலையிலுயிர் சிக்கியோ
மறைந்தீர் ஐயா! எமது உள்ளம் தேற
ஒரு வார்த்தை சொல்லாது மறைந்திட்டீரே
துன்பமது சகிப்போமா சோர்ந்து நெஞ்சம்
துடிக்கிறதே வேதனையின் சுமையோ ஐயா
அன்புடனே நம் வந்து அருகிருந்து கதைபேசி
எமை எல்லாம் குலுங்கச் சிரிக்கவைத்து நாம் இன்பமுடன்
இருக்கையிலே ஒன்றும் கூறாதெமைப் பிரிந்து எங்கையா
சென்றீர்! உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சகோதரன் - நடராசா (நடை.)
மைத்துனி - இராசமணி
பெறாமகள், மருமகள் - புஸ்பராசா(பிரான்ஸ்), நளினி
மருமகள், பெறாமகள் - ரசீதரன் - நிர்மலா

மலர்வு 10.02.1949 | உதிர்வு 31.05.2015

நாகநாதன் வீதி,
கச்சாய் றோட், கொடிகாமம்.
(க14[illegible])(6,7,8)

### நாதஸ்வர இசைப் பேரரசு முருகப்பா பஞ்சாபிகேசன் அவர்களுக்கு அஞ்சலியும் அனுதாபமும்



ஈழவள நாட்டின் எழில்மிகு சாவகச்சேரி சங்கத்தானைப் பதியில் தோன்றி முத்தமிழில் ஒரு தமிழாம் 'இசை' பயின்று நாதஸ்வர இசையில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி அகில உலகெங்கும் ஆலயங்கள் தோறும் மேலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் கூட நாதஸ்வர கான இசை பொழிந்த எம் நாதஸ்வர இசைப் பேரரசு முருகப்பா பஞ்சாபிகேசன் அவர்கள் அகவை 96 வரை நிறைவாழ்வு வாழ்ந்து புகழுடம்பெய்தியமையால் ஆறாத் துயரில் மனமுடைந்த குடும்ப உறுப்பினர்களுக்கு சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சிவப்பரம் பொருளின் பாதத்தில் ஐக்கியமாக எல்லாம்வல்ல அம்பலவாண வீரகத்தி விநாயகரின் திருவருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றது.

கல்வயல் பெருங்குளம்
அம்பலவாண வீரகத்தி விநாயகர்
தேவஸ்தான தர்மபரிபாலன சபை.

(C/16260)
(30.6.3)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**செல்லையா வைத்திலிங்கம்**

அன்னை மடியில் 25.03.1921

ஆண்டவன் அடியில் 31.05.2015

அன்பினால் எமை ஈன்று ஆக்கமுற வாழ்வளித்து
மார்மேலும் தோள் மேலும் தாலாட்டி எமை வளர்த்த
பாசமிகு தந்தையே! பாரை விட்டுப் போனதெங்கே?
நூற்றாண்டுவிழா எடுக்க நாமெல்லாம் காத்திருக்க
நொடிப்பொழுதில் காலனவன் எம் கனவை
முடித்துவிட்டான்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.06.2015) செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் நடைபெறும். இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

"கருணாலயம்"
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(61257)(3,7,9)
பிள்ளைகள்.

### இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**குருகுலம் ஏபிரகாம்லிங்கன்**

(இளைப்பாறிய ஆசிரியர் யாழ் மத்திய கல்லூரி)



தோற்றம் 29.10.1929

மறைவு 30.06.1995

மண்ணிலே நல்ல வண்ணம்
வாழ்ந்த நின் மாண்புகளால்
வாழ்க்கையில் நாம் நிமிர்ந்தோம்
மண்ணுள்ள வரையில் உங்கள்
மேன்மைகளைக் காத்து நிற்போம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

77, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரில் பவனி வருகின்றாள் நாகபூஷணி



முழுநம்பிக்கையோடு வழிபடும் அடியார்களது கவலைகளையும், நோய்ப்பிணிகளையும் நீக்கியருளும் பேரருட்சக்தியாகவே ஸ்ரீநாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள்.

■ நயினை நா.க.குமார சூரியர் J.P

வட இலங்கையிலே வரலாற்று மகிமையும், வழிபாட்டுச் சிறப்பும் கொண்ட, நாற்புறமும் கடலால் சூழப்பட்ட, மணிமேகலைக் காவியத்திலே இடம்பெற்ற, சப்ததீவுகளிலே மணிபல்லவம் எனப்படும் தனிப்பெருஞ் சிறப்பு மிக்கது நயினாதீவு. அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதியும் நயினையம்பதியாகும். நயினாதீவின் தனித்துவமிக்க சிறப்புகளுள் மேலானதும், மகோத்துவமானதும் இத்தீவிலே எழுந்தருளிப் பேரருள் பாலித்துக் கொண்டிருக்கும் உலகமாதாவாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆலயமாகும். சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றான புவனேஸ்வரி பீடம் என்றழைக்கப்படுவதும் அன்னையவளின் ஆலயமாகும். ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆலய மூல விக்கிரகத்தின் தோற்றம், வரலாறு என்பன இன்னமும் கண்டறிய முடியாத பேரதிசயமாகவே உள்ளது. முழுநம்பிக்கையோடு வழிபடும் அடியார்களது கவலைகளையும், நோய்ப்பிணிகளையும் நீக்கியருளும் பேரருட்சக்தியாகவே ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள்.

அன்னையவளின் ஆலயம் கிழக்கு நோக்கிய 108 அடி உயரமான கோபுரம், அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடிவரும் அடியவர்களைத் தாங்குகின்ற இயற்கைத் தத்துவத்தை வலியுறுத்துகின்றது. அடியார்கள் அரோகரா என்று வந்து கால் பதிக்கின்ற இறங்குதுறை நயினையம்பதிக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட நற்றவத் தோற்ற மாகும். அன்னை பராசக்தி தன்னை நாடி வருகின்ற பெருந்திரளான அடியார்களின் துன்பதுயரங்களையெல்லாம் தனது அருட்கடாட்சத்தால் நீக்கி நல்லருள் வழங்கி வருகின்றாள். அன்னையின் மணியோசை அகிலமெல்லாம் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. காலாதி காலமாக முழுநம்பிக்கையோடு அம்பாளை வழிபட்டு நல்லருளைப் பெற்றவர்கள் பலர். நற்பேறு அடைந்த அடியார்கள் அனேகர். தன்னை வந்து தரிசிக்கும்படி அடியார்களுக்கு கனவிலும், நனவிலும் நாகபாம்பாகத் தோன்றி அவர்களைத் தன்வசம் ஈர்க்கின்ற அம்பாளின் அற்புதங்கள் பலப்பல. அம்பாள் உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் தாயானவள். அழகுக்கொருவரும் ஒவ்வாத ஆனந்தவல்லியாக, அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக அன்னை பராசக்தி விளங்குகின்றாள்.

அம்பிகையின் இந்தவருட மகோற்சவம் 17.06.2015 புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழா பல்லாயிரக் கணக்கான அடியார்கள் மத்தியில் சிறப்பாக நடைபெறுகின்றது. மகோற்சவத்தின் சிகரமாக அமைவது தேர்த்திருவிழாவாகும். இன்றைய தேர்த்திருவிழாவன்று நயினையில் வீற்றிருந்து நல்லாட்சி புரியும் அம்பிகை தேரேறி வந்து எம்மைப் பற்றியுள்ள துன்ப, துயரங் களை அகற்றி நல்லருள் தர வருகின்றாள். தேர்த் திருவிழா அற்புதமாகவும், பக்தி பூர்வமாகவும், பெருவிழாவாக நயினை யில் கோலாகலமாக நடைபெறுகின்றது.

வெள்ளமெனப் பக்தர்கள் எல்லாம் அம்பிகையின் திருத்தலத்தில் உள்ளம் உருகி வழிபடுகின்ற அருட்காட்சியைத் தேர்த்திருவிழாவன்று காணலாம். மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து கைதான் தலைமேல் வைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி அம்பிகையை அடியார்கள் வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அடியார்களின் அரோகரா ஒலி வானைப் பிளக்கும். ஆலய வீதிகள் எங்ஙனும் சன சமுத்திரமாகவே காணப்படும். ஆனி மாதத்தில் அகிலமெல்லாம் அம்பிகையின் பேரொளி வீசத்தொடங்கி விடும். அழகிய சிற்ப வேலைகளுடன் கூடிய திருத்தேரில் அம்பாள் ஆரோகணித்து எழுந்தருளி விநாயகப்பெருமான், முருகப்பெருமான் திருத்தேர்களுடன் வீதியுலா வருவதைக் காணில் கவலைகள் எல்லாம் பறந்தோடிவிடும். இந்தக் காட்சிகளைச் சொல்லோவியமாக வர்ணிக்க முடியாது. அம்பிகையை நேரில்வந்து தரிசித்தால்தான் அம்பிகையின் மகத்துவம் விளங்கும்.

அம்பிகையின் திருத்தேர் மிகவும் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அம்பிகையின் சரித்திர வரலாறுகள் பல இந்தத் திருத்தேரில் செதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக போத்துக்கீசர் கோயிலை இடித்தல், அப்பொழுது நயினை மக்கள் அம்பாளை மேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தல், அம்பாளின் தேர் கடலுக்குள் உருண்டு சென்றது, நயினாப்பட்டர் என்ற அந்தணர் அம்பிகைக்குப் பூசை செய்தது போன்ற பல சான்றுகள் தேரில் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகள் அம்பிகையின் மகத்துவத்தை அடியார்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அன்னையவளின் அருளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆறாத பக்தியினால் பக்தர்கள் கவரப்பட்டு, நயினையம்பதியில் சப்பரத் திருவிழாவன்றே பெருமளவு கூடுவார்கள். அன்று இரவு முழுவதும் அம்பிகையின் சப்பரத்திருவிழாவைக் கண்டு களித்து நல்லருளைப் பெற்று, தேர்த்திருவிழாவன்று அன்னை பராசக்தியைத் தேரில் கண்டு அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்வார்கள். தேர்த்திருவிழாவன்று அதிகாலையிலும் அடியார்கள் பெருமளவில் கூடுவார்கள்.

விழாக்கோலம் பூண்டிருக்கும் நயினையம்பதி இந்திரலோகம் போலக் காட்சியளிக்கும். தேர்த்திருவிழாவன்று விடியற்காலையிலே அடியார்கள் அம்பிகையின் ஆலயத்தில் கூடிவிடுவார்கள். அடியார்கள் பலர் நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு அங்கப்பிரதட்சணம் செய்து கொண்டும், அடியழித்துக்கொண்டும் வீதிவலம் வருவார்கள். கோயில் வீதிகள் எங்ஙனும் பக்திமயமாகவே காணப்படும். அதிகாலையிலே பூஜைகள், அபிஷேகம், வசந்தமண்டபப் பூசை முதலியன நேரக்கிரமம் தவறாது நிறைவேற்றப்பட்ட பின்னர், அன்னை பராசக்தி தேரேறி வீதியுலா வருவதற்குப் புறப்படுவாள். பஜனைக்கோஷ்டிகள் ஒருபுறம், கர்ப்பூரச்சட்டி ஏந்தும் பெண்கள் ஒருபுறம், இப்படியாக அடியார்கள் பக்திக்கோலத்துடன் தேர்வீதி உலாவரும் போது தேரின் பின்னால் வருவதை அற்புதக்காட்சி எனலாம்.

அம்பிகையின் தேர் வடம்பிடித்தால் மிகப்பெரும் புண்ணியமாகும். வடம் பிடித்தவர்கள் அம்பிகையின் திருவடியில் இடம் பிடித்தவர்கள். இதனால் அடியவர்கள் தேரின் வடம் பிடிப்பதற்காக முந்திக் கொள்வதை நான்கு வீதிகளிலும் காணலாம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டி நிற்கும் அன்னை பராசக்தியை தேரில் கண்டு தொழ அடியார்கள் முந்திக்கொள்வதை வீதிகள் எங்ஙனும் காணலாம். தேர்த்திருவிழா காணவாருங்கள். வருகை தந்து அம்பிகையின் அழகுத்திருக்கோலத்தைக் கண்டு அருளமுதைப் பெற்றுக் கொள்ளுங்கள். அம்பிகையைத் தரிசிக்கவரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுதசுரபி அன்னதான சபையினர் அன்னதானம் வழங்குகின்றார்கள். அம்பிகையின் அருள் சுரக்க, அமுதும் சுரந்து வருடந்தோறும் இதன் சேவை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மழை பொழியும் ஆனந்தத்தேர் காணீர்"

அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்தரூப மயிலே"

என தாயுமான சுவாமிகள் மெய்யுருகிப் போற்றும் அன்னை ஸ்ரீ நாகபூசணி மூவர்க்கும் முதற்பொருளானவள், முத் தொழிற்கும் வித்தானவள். ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து நீக்கமற நிறைந்திருப்பவள், நாவுக்கும் மனதுக்கும் இனியவள், எண்ணுதற்கு எளியவள், கருணையுள்ளம் கொணடவள், பேரழகு உடைய பெண்ணரசி, எவ்வுயிர்க்கும் அன்னையுமாகி மூவர்க்கும் மேலான இறைவியுமாகி நின்றாளும் மகாசக்தியை தவளே இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம் அவளே– அவர்தமக்கும் அன்னையுமாயினள் ஆகையால் இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலான இறைவியுமாம், எனப் பட்டர் பிரான் புகழ்ந்தேத்துகின்றார். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்து அனைத்துயிர்களையும் இரட்சிக்கும் அம்பிகை மணி பீடத்தவிசில் ஸ்ரீ நாக பூசணியாய் அமர்ந்து அருளாட்சி செய்வதனால் மணி பல்லவம் என்னும் மகிமையைப் பெற்றது. மணிபல்லவம் ஓர் அழகான தீவு, ஏழ் கடல் சூழ்ந்திலங்கும் ஏழு தீவுகளுக்குள்ளும் எழிலானது. ஞானபூமியென்றும் தியான பூமியென்றும் மாதவத்தோரால் போற்றப் படுவது. அருள் வீச்சு நிறைந்த திருத்தலம் பக்தர் ஈர்ப்புச் சக்திமிக்கது. வரலாற்றுச் சிறப்பு டையது. சிலம்புக் கதையோடு தொடர்புபட்ட சீலம் கொண்டது. யாத்திரைத் திருத்தலம் என்னும் பெருமைபெற்ற அம்பிகை யின் திருக்கோயிலை நாடி, கத்தும் கடல் கடந்து வரும் பக்தகோடிகளை நுழைவாசலில் 'ஓம் சக்தி' என்னும் நாதம் எழுப்பி நெட்ட நெடுங்கோபுரம் வரவேற்கின்றது. சோலை போலும் படர்ந்து நிற்கும் வேப்பம் தருக்களின் தன் மையுடைய நிழல் தரும் இதமான காற்றும் மிதமான வெப்பும் ஆறுதல் அளித்து ஆனந்தமூட்டுகிறது. தமிழ் மணம் கமழும் பெரு வீதியெங்கும் சக்திமயம் நிறைந்திருக்கும், பேரருள் பூத்து நிற்கும்.

தேவர்கோன் இந்திரனால் ஸ்தாபிக்கப்பட்ட அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் தலையாயது புவனேஸ்வரி பீடமாகத் திகழ்வது, 'கங்கா புஸ்பகரணியெனும் பாவ வினையறுக்கும் புனித தீர்த்தத்தைக் கொண்டது. மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொழுவோர்க்கு வார்த்தை சொல் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்னும் தாயுமானவர் பாடலுக்கு ஒப்ப மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் முறையாக அமையப்பெற்ற திருக்கோயில். தலவிருட்சம் வன்னி மரமாகக்கொண்ட அம்மையின் ஆலயக் கருவறையில் திருவுரு தானாகத் தோன் றியது. பின்புறத்தே விரிந்து இருக்கும் ஐந்து தலைநாகவுருவும் இயற்கையாகத் தோன்றியது. இவை சுயம்புருவாகத் தோன்றியவை, காலத்தால் முந்தியவை, நெடிய சரித்திரப் பின்னணி யைக் கொண்டவை. குறைவிலாத பேரருளைப் பொழிவன. வேண்டத்தக்கதையறிந்து வேண்ட முழுவதும் ஈந்துவக்கும் ஈஸ்வரி தன்னை உள்ளத்துள் இருத்தி நாடி வரும் அன்பர்களுக்கு அருள்பாலித்து ஆற்றுப்படுத் தும் தாய் தெய்வமாக ஸ்ரீ நாகபூசணி திகழ்கின்றாள்.

மெஞ்ஞானம் வேண்டி வானப் பிரவேசம் செய்த போதி மாத வன் மணித்தீவில் அம்மையின் பேரொளியில் திளைத்து வைகாசி விசாகப்பூரணையில் ஆசனத்து அமர்ந்து அன் னையை ஆராதித்து ஆனிப் பூரணையில் பரிபூரண ஞானம் பெற்றார் என்பது வரலாறு. மேலும் கௌதமபுத்தர் இரண்டு தடவைகள் பேராலயம் சென்றேகி நாகம்மையைப் பணிந்து சென்றார் என்பதற்கு சான்றுபகரும் தடயங்கள் இன்றும் இருப்பதைக் காணலாம்.

**கந்த. தியாகராஜா**
ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேரேறி வந்து காத்திடுவாய்
நயினைத் தாயே

செல்வி
நகைஅகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels

Chelvi
Nakai Agam

1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

1/3, Kasthuriar Road,
Jaffna.

T.P: 021 222 9441

த சசிகா
லேணர்ஸ் Reg No DS 882

THE SASIKA LEARNERS

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை)



- ✓ இலவச எழுத்துப் பரீட்சை வகுப்புக்களும். வாகன தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- ✓ எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ✓ விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்குசெய்து " Learners Permit "பெற்றுத் தரப்படும்.
- ✓ எழுத வாசிக்க தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ✓ சாரதி தெரிந்து கொள்ளவேண்டிய வாகனம் சம்பந்தமான அடிப்படைக் கல்வி மற்றும் சாரதிக்கான சிறந்த பயிற்சியும் வழங்கப்படும்..

இல. 57, வேம்படி வீதி,யாழ்ப்பாணம். Hot line: 021 221 7678,
(திருக்குடும்பகன்னியர் பாடசாலைமுன்பாக) 0777 226 247.





சிறி நதியா
நகை மாளிகை

இல.01.கஸ்தூரியார்வீதி,யாழ்ப்பாணம்.
021 222 2709
இல.01. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6744



தேரேறி வரும் நயினை அம்பாளின் அருள்
அனைவருக்கும் கிடைக்க
வாழ்த்துகின்றோம்

நவநாகரிக ஆடைகள். நங்கையர்களுக்கான புத்தம் புதிய சாறிவகைகள். சல்வார் கமிஸ். சிறுவர் முதல் பெரியோர்களுக்கான றெடிமேற் ஆடைகள் மற்றும் பட்டுவேட்டி. சால்வைகள் அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

சரவணா
புடைவையகம்

171, பிரதான வீதி, நெல்லியடி, (சம்பத் வங்கி அருகில்).
021 226 2992

வேண்டுவோர் குறைதீர்த்தருள்வாய் நயினைத் தாயே

VMK
JEWELLERY

வீ.எம்.கே
ஜூவல்லறி

80/3, கஸ்தூரியார் வீதி, (யாழ். மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி) யாழ்ப்பாணம்.





தங்கப்பவுண் நகை வியாபாரம்

V.M.K. Jewellery

Manufacturers of gold jewels

No.83/3, Kasthuriyar Road, Jaffna. T.P: 021 2222 515, 021 720 1117, 0777 849 369

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லன எல்லாம் தரும் நயினை நாகபூஷணித் தாய்

நயினை
விசு. இராசநாயகம்

***ஆலய தல விருட்சம் வன்னி மரம். நாக சாந்தி, நாகப்பிரதிட்டை, முடியிறக்குதல், அன்னம் ஊட்டுதல், விற்று வாங்குதல், பௌர்ணமி தினங்களில் சுமங்கலிப் பூசை, நித்திய அன்னதானம் வழங்கல்*** போன்றன ஆலய சிறப்பு நிகழ்வுகளாக காணப்படுகின்றன.

அலைகடல் நடுவே வீற்றிருக்கும் அன்னை நாகபூஷணி அம்பாள் ஆலயம் அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில், புவனேஸ்வரி பீடம் என போற்றி வழிபடும் ஆலயமாகும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்களின் யாத்திரைத் தலமாகவும், சிங்கள, பௌத்த மக்கள் கூட வந்து பத்தினி அம்மன் எனப் போற்றி வழிபடுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

நயினாதீவிற்கு சமீபமாக அனலை தீவு என்னும் ஓர் அழகிய தீவு உண்டு, அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு என்னும், சிறிய தீவு உள்ளது. அங்க பண்டைக் காலம் தொட்டு வரலாற்றுடன் கூடிய நாகதம்பிரான் எனும் ஆலயம் உள்ளது. அந்த ஆலயப் பகுதியில் இருந்து நாகபாம்பு பூக்கொண்டு வந்து நயினாதீவு நாகபூஷணி அம்மனைப் பூசித்ததாகவும், வரலாறுகள் கூறுகின்றன. நாகம் வந்து பூசித்தமையால் நாகபூஷணி என பெயர் வரக் காரணமாயிற்று.

இதன் அடையாளச் சின்னமாக ஆலய வடக்கு கடல் பகுதியில் இரு பெரிய கற்கள் காணப்படுகின்றன. இதில் ஒரு கல் பாம்பு சுற்றிய கல் எனவும், மற்றைய கல் கருடன் கல் எனவும் குறிப்பிடப்படுகின்றன. நாகபாம்பு அம்மனுக்கு பூக் கொண்டு வந்தவேளை கருடன் பாம்பை வழிமறித்து கல்லில் அமர்ந்து கொண்டதாகவும், பாம்பு மற்றைய கல்லின் மீது சுற்றிக் கொண்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த வழியால் கடல் மார்க்கமாக வந்த வணிகச் செட்டியார் அதைக் கண்டு அம்மனை வேண்டி வழிபட்டதாகவும், கருடன் அதன் பின்னர் அவ்விடத்தை விட்டு பறந்து சென்றதாகவும், நாகம் பின்பு பூக்கொண்டு சென்றதாகவும் அறியமுடிகிறது. பாம்பு சுற்றி இருந்த கல்லை பாம்பு சுற்றிய கல எனவும் கருடன் இருந்த கல்லை கருடன் கல் எனவும், காணக்கூடியதாக உள்ளது. இந்தக் கற்களுக்கு ஆலய பதினோராம் திருவிழா அன்று விசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் கடற் கரையாக நடந்து சென்று இக் கற்களை வழிபட்டும் வருகின்றனர். குறிப்பாக ஆலயத்தின் இக்கற்களுக்கான வழிபாட்டின் போது பல வருடங்களாக கருடன் அந்தப் பகுதியில் வட்டமிட்டுப் பறப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பக்தர்கள் களிப்பில் ஆனந்தக்கூத்தாடி அவ்வேளை மகிழ்கின்றனர்.

ஆலயத்தில் பல்வேறு இடங்களில் இருந்து பக்தர்கள் வந்து தங்கி நின்று நாகதோச நிவர்த்தி செய்து வருகின்றார்கள். அம்பாள் அவர்களுக்கு கேட்ட வரங்களை அள்ளிக் கொடுக்கிறாள். பௌர்ணமி தினங்கள் ஸ்ரீ சக்கர பூசை வழிபாடு நடைபெறுகிறது. இதில் திருமணமாகாத பெண்கள் திருமண நல்வாழ்வு வேண்டியும், திருமணமான பெண்கள் தாலிப்பாக்கியம் நிலைக்கவும் அம்பாளை வேண்டி வழிபடுகின்றனர். ஆலய கல்யாண மண்டபத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கைங்கரியம் பல வருடங்களாக நடைபெற்று வருகிறது. ஆலய அறங்காவலர் சபையின் செயற்பாடு போற்றுதற்குரியது. பிறந்த நாள், திருமண நாள், தந்தை, தாயார் நினைவு தினம் போன்ற நிகழ்விற்கு வருடத்தில் ஒருதடவை ஐயாயிரம் ரூபாவை செலுத்தினால் அவர்கள் நினைவாக குறித்த தினத்தில் வருடாவருடம் அன்னதானம் வழங்கப்படுவதுடன் விபூதி பிரசாதம் வீட்டு முகவரிக்கு வருடாவருடம் அனுப்பி வைக்கப்படும்.



ஆலய திருவிழாவிற்காக அமுத சுரபி அன்னதான சபை இரவு, பகல் அன்னதான சேவையை திறம்பட செய்து வருகிறது. ஆலய தென்கிழக்கு வீதியில் தம்பையா தாகசாந்தி நிலையம் தனது சேவையை திறம்பட நடத்திக்கொண்டிருக்கிறது. ஆலய முன்வாயில் பகுதியில் அபிவிருத்தி சபையும் தாகசாந்தி சேவை செய்து கொண்டிருக்கிறது. சாரணர் படை, தொண்டர் சபையினர், சென்ஜோன்ஸ் படை, வழமை போல சேவையை வழங்கி வரு கிறது. இம் முறை கூடுதலான படகுச்சேவையும் நடைபெற்று வருகிறது. அத்துடன் கடல் பாதுகாப்பு சேவையும் இயங்கி வரு கின்றன குறிப்பிடத்தக்கது. எல்லோருக்கும் நயினை நாகபூஷணித்தாய் நல்லன எல் லாம் தர, நல் அருள் கிடைக்கப் பிரார்த் திப்போம்.

## தேரேறி வருகிறாள் நாகபூஷணி



அலைகடல் நடுவினிலே வீற்றிருந்து
அருளாட்சி புரிபவளே!
அடியவர்கள் குறைகள் தீர்க்கும்
அன்னையே!
அகந்தையை அழித்து நல் ஆற்றலைக்
கொடுக்கும் மகா சக்தியே!
அலைகடல் தாண்டி வந்தோம் அம்மா!
உம்மைக்காண, எம்மக்களின்
கண்ணீர்க் கடலைப் போக்கிட உமது
வடம் பிடித்தோம் அம்மா! உந்தன்
கடைக்கண் பார்வையை ஒருமுறை
காட்டாயோ அம்மா!
கயவர்கள், வஞ்சகர்கள், துரோகிகள்
தொலைந்து போகட்டும் அம்மா!
நாட்டில் நல்லாட்சி, சாந்தி, சமாதானம்,
மனிதநேயம் மீண்டு மலர்ந்திடச்
செய்திட
தேரேறி வருகிறாள் நாகபூஷணி

உ
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
திருமண சேவை
"தாய்குத்தாயாம் இருப்பவளே தந்திடம்மா உந்தன் அருளை"
மிகவும் துல்லியமான கணிப்பீட்டின் மூலம்
தகுந்த மணமக்களை தெரிவு செய்ய
நாடவேண்டிய ஸ்தாபனம்.
(சர்வதேச இணைப்பு கொண்டது)
இணைப்பாளர்,
திரு நிறைவாளன்,
மாதாஜி லிங்கெஸ்வரன் ஆலயம் அருகில்
கைதடி கிழக்கு, கைதடி.
T.P: 077 519 3493
077 684 9017
077 961 5206
075 750 0780
Viber: 076 635 6918

பலகோடி பக்தர்களைக் காத்தருளும்
நயினை நாகபூஷனி அன்னையே
தேரேறி வந்து எம்மை காத்தருள்வாயாக
சாரங்கா
நகைமாடம்
சாரங்கா நாணயமாற்று (தனி) நிறுவனம்
Sharanga Money Exchange (Pvt) Ltd.
(அரச அங்கீகாரம் பெற்ற நாணயமாற்று சேவை)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6972, 021 222 8869

தேரேறி வரும் அம்பாளின் அருள் அனைவருக்கும் கிடைக்க
வாழ்த்துகின்றோம்
பண்டிகைக் காலங்களுக்கேற்ற ஆடைவகைகளுக்கும் திருமண
பட்டுப் புடைவைகளுக்கும் கைராசியான ஒரே இடம்
Sellamuthus Textiles
Main Street, Nelliady, Karaveddy.
Tel: 021 226 3238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொலிகண்டி கந்தவனம்

# திருவருள் மிகு கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 30.06.2015

## தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு



### வரலாறும் கோயில் ஆதீனகர்த்தாவின் ஆசிச் செய்தியும்.

தென்கைலாயம் எனும் இலங்காபுரியில் புராணகாலந்தொட்டு பல அருள் நிறைந்த திருக்கோயில்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு அதனூடு அடியவர்களிற்கு ஆன்ம ஈடேற்றம் நல்கி வருகின்றான். அவ்வாறான சிறப்பினால் இலங்காபுரி சிவபூமி என்னும் சிறப்பைப் பெற்றது.அவ்வண்ணம் யாழ்ப்பாணத்து வடமராட்சியின் பொலிகண்டியூரில் ஸ்கந்தாரண்யம், கந்தவனம், கந்தவனக்கடவை, பொலிகண்டிக் கந்தசுவாமி கோயில் எனப்பல பெயர்களால் விளங்கும் திருத்தலம்.

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற உயர்தலம்.யுகம்யுகமாய் அருள் விளங்கும் அற்புதத் திருத்தலம். கற்பூரம் விளைந்த பெருமையுடையதனால் இங்குள்ள இறைவன் கற்பூரக்கந்தன் எனும் சிறப்பு நாமமும்பெற்றான். நறுநீர்ச்சுனையால் நோய்கள் நீக்கியும் காஞ்சிமாவினால் குழந்தைப்பாக்கியமும் ஒருங்கே அடியவர்க்கு நல்கி தனது பேரருளுடன் பேரழகினையும் மொத்த வடிவில் காட்ட விளைந்த தலமே கந்தவனம்.

வடமராட்சிப்பகுதியில் முதன் முதல் தோன்றிய தேர் எனும் பெருமையுடையது. பொலிகண்டியைச்சேர்ந்த நாகர்தம்பர் எனும் அடியவரின் தனி முயற்சியால் இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் தோற்றம் பெற்ற மகாதேர். இதன் சிறப்பினை

தேவருங் காமுறுஞ் சித்திரத்தேரும்
வானோரூர்த்து மறந்து விட்டதுவிது தானோ....

என உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் தமது நான்மணிமாலையில் புகழ்ந்துரைக்கின்றார்.

இத்துணை சிறப்புடைய மகாதேரில் எங்குமில்லாத தனித்துவமுடைய ஆறுமுகநயினார் வள்ளி தெய்வானை இந்திர மயிலமர்ந்து விநாயகர் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி சண்டேஸ்வரர் சகிதம் எழுந்தருள்வது கண்கொள்ளாக் காட்சி. இவ் ஆறுமுகநயினாரை திருமுருக கிருபானந்தவாரியார் கண்ணுற்று தாம் எங்கும் இதுவரை இவரைப்போல் அழகு பொருந்தியதும் பெரியதுமான சண்முகரைக்காணவில்லை என உருகி வழிபட்டுப் பேறடைந்தார்.

இச்சண்முகப் பெருமான் தாமே விரும்பி இத்தலத்தில் எழுந்தருளி யவர் எமது தந்தையாரின் திருநோக்கில் உதித்து வார்ப்பிக்கும் பேற்றை எமது தந்தையார் ஸ்ரீமான் திக்கம் செல்லையாப்பிள்ளைக்கு ஈந்தவர். இவரின் உற்பத்தியில் எத்தனையோ அடியவர்களின் ஆபரணங்களும் பல பெண்ணடியார்களின் திருமாங்கல்யங்களும் சேர்ந்த புனித வரலாறுகள் பலவுண்டு.இந்த ஒளி பொருந்திய சண்முகரை நவாலியூர் சோமசுந்தரப்புலவர் கந்தவனத்தருகே ஆறுமுகப்பொன்மாலை என்று போற்றிப்பாடு கின்றார்.

இப்பேரழகன் பக்தர்களின் பெருமை தாங்கிய தோள்களில் தவழ்ந்து இம் மகாதேரிற்கு எழுந்தருளும் அழகைக் காணும் கண்களே கண்கள். ஆகவே மனிதர்களாகிய நாம் இன்று கந்தவனம் வந்து தரிசித்து பூர்வஜென்ம புண்ணியத்தைப் பெறுவோமாக.

**திருமதி சிவயோகநாயகி இராமநாதன் (M.Sc)**
**அறங்காவலர்.**



### கந்தவனின் அருள் கிடைக்கட்டும்.

பொலிகண்டி கந்தவனம் திருவருள் மிகு கல்யாணவேலவசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் கிடைக்கப்பெற்றது மிக்க மகிழ்ச்சி. வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் பொருட்டு கல்யாண வேலவசுவாமியாக எழுந்தருளியிருந்து அருளாசி புரியும் முருகப்பெருமானுக்கு வருடாவருடம் மஹோற்சவம் நடைபெறுவது அனைத்து சைவத்தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நடைபெறும் மஹோற்சவத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ இறைவனுடைய அன்பு கிடைப்பதாக. தங்களுடைய பணிகள் தொடர்ந்து நடைபெற எமது வாழ்த்துக்கள்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

### ஆசிச்செய்தி

சீரும் சிறப்பும் பொலிந்து விளங்கும் ஈழத்திருநாட்டின் வடபால் மகுடமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வளம் பலபெருகும் வடமராட்சிப் பிரிவிலே சைவசீலரும், தானதருமமும் சிறந்த சிந்தனை கொண்ட மாந்தரை தொன்மையாகக் கொண்டு விளங்கும் நெய்தல் நிலப்பரப்பிலே அருணகிரிநாதரால் புகழ்ந்து திருப்புகழ் பாடப் பெற்றதும் யோகர்சுவாமி போன்ற தவசிரேஸ்டர்கள் வழிபாடு செய்யப் பெற்றதும் சிவசம்புப் புலவர் , நவாலியூர் சோமசுந்தரப்புலவர் என்போரால் நான்மணிமாலை போன்ற நூல்களைப் பாடிப்பெருமை பெற்ற தலமும் தட்சிணகைலா யம்(தென்கைலாய புராணம்) 9ஆம் அத்தியாயத்தில் விதந்து கூறப்பட்டதுமாகிய கந்தவன ஷேத்திரத்திலே மனம், மொழி, மெய்யால் தன்னை வழிபாடாற்றும் அடியார்களின் துயர்களை நீக்கி அருளுகின்றவரும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளையும் ஒருங்கே அமையப்பெற்று அநாதியான பழமை வாய்ந்த வன்னிமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டவரும் கந்தவனம், காந்தாரண்யம், கந்தசுவாமிகானகம் கந்தவனக்கடவை ஆகிய சிறப்பு நாமங்களையுடைய பதியிலே வள்ளிநாயகி தெய்வநாயகி சமேதரராக வீற்றிருந்து அருள் பாலிப்பவருமாகிய ஷண்முகப்பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா கோலாகலமாக நடைபெறுவதையிட்டு நாமெல்லாம் மகிழ்ச்சியடைகின்றோம். இறைவன் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு பஞ்சகிருத்தியங்களை செய்கின்றான். அந்தவகையில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவானது அழித்தலைக் குறிக்கின்றது. எனவே அழித்தலின் பின்னே ஆன்மா இறையருள் பெறமுடியும். இதனாற் தேர்த்திருவிழாவின் மேன்மையை நன்கு உணரலாம்.

இன்றுநடைபெறும் தேர்த்திருவிழாவானது இவ்வூரில் உள்ள தீமைகளை அழித்து ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுப்பதுடன் பக்தர்கள் அனைவருக்கும் கந்தப்பெருமானின் திருவருட்கடாட்சம் கிடைக்கப்பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழப்பிரார்த்தித்து நல்லாசிகளை கூறிக் கொள்கின்றேன்.

சர்வே ஜனகா சுகினோ பவந்து
சிவப்பிரம்மஸ்ரீ **ச. வைத்தியநாதக்குருக்கள்**
மஹோற்சவக்குரு கந்தவனம் தேவஸ்தானம், பொலிகண்டி.


★★★ ★★★ ★★★ ★★★ ★★★ ★★★ ★★★ விழா சிறப்புற வாழ்த்துவோர் ★★★ ★★★ ★★★ ★★★ ★★★ ★★★ ★★★

திருமணப்பட்டுப் புடைவைகள் மற்றும் சகலவிதமான ஆடை வகைகளுக்கும்
யசோ ரெக்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி,கரவெட்டி.
தொ.பே.021 226 4997

P.ரவிச்சந்திரன்
வெற்றிலைக்கடை
நெல்லியடி, மாக்கற்.

ஹப்பி ரெக்ஸ்ரைல்
110, பிரதான வீதி, நெல்லியடி கரவெட்டி.
தொ.பே.021 226 3287,
பக்ஸ்: 021 226 3125

S. ரஞ்சன்
ரஞ்சன்பழக்கடை
நெல்லியடி மாக்கற்.

RAINBOW TILES STORES
றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி, சிலையடி,
மந்திகை - புலோலி.
021 226 2696 077 869 5418

SRIMURUGAN MEDICAL STORES
Main Street, Nelliady, Karaveddy.
T.P 021 373 5745

தேரேறி வரும் கந்தவனக் கந்தன்
அருள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றோம்.
ஸ்ரீ சுசிலா ஆபரண மாளிகை
Sri Susila Gold House
(916 KDM )தங்க நகைகள் மொத்தமாகக் கிடைக்கும்.
239, Main Street, Point Pedro.
T.P. No: 077 721 0206 021 226 1003 021 320 7437

அழகர் பல்பொருள் வாணிபம்
இல.4,நெல்லியடி, கரவெட்டி.

GANESAN HARDWARE
Gentral Hardware, Paint, Pipe, Fitting Tools, Bath rooms Fitting, wire & Building Material Supplier
No: 106, Main Street, Nelliady.
T.P: 021 226 3290, 077 900 0399 / 077 721 4135

Easy Soluctions Nelliady
www.easysolutions.lk
www.facebook.com/Easysolutions.lk

ராஜன்
சைக்கிள் வேக்ஸ்
வீடியோ மூவிஸ் சென்ரர்
தொலைத்தொடர்பு
மஹாலக்ஷ்மி பருத்தித்துறை

Real Itatian நெல்லியடி
Vinmeen Pizza
மங்கலகரமான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
No.83, MAIN STREET, NELLIADI, KARAVEDDY.
T.P: 021 226 1051.

★★★ ★★★ ★★★ ★★★ ★★★ ★★★ ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வேலி அருள்மிகு ஸ்ரீசெல்லக்கதிர்காம சுவாமி திருக்கோயில் மன்மத வருட

# இரதோற்சவச் சிறப்பிதழ் - 30.06.2015

## ஆலய பிரதம குருவின் பிரார்த்தனைச் செய்தி

நீர்வை செல்லக்கதிர்காம சுப்ரமணியரின் பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் இன்றாகும்.தமிழர்தம் தனிப்பெருந் தெய்வமான வள்ளி மணாளன் நம் மண்ணை காக்கும் தெய்வம். அநாத ரட்சகனாக மிளிரும் மூர்த்தி.புத்தெழுச்சி பூண்டிருக்கும் எம் திருக்கோயிலில் ஆறு முகங்களுடன் இன்று தேரேறும் பெருமானின் திருக்காட்சி காண்பவர்கள் பேறுபெற் றோராவர்.விரைவில் இப்பெருமான் புதிய சிற்ப இரதத்தில் எழுந் தருளவுள்ள நிலையில் நிகழும் இத் திருத்தேர் விழா தனித்துவமானது.

எம் பெருமானின் திருத்தேரோட்ட விழா மேன்மை பெற நம் ஷண் முகநாதன் சேவடிகளை சிந்தித்துப் போற்றுகின்றோம்.

கதிர்காமக் கந்தன் பாதம் கனவிலும் காத்து நிற்கும்.

சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள் (நீர்வை மணி ஐயா)

## நீர்வைபூர் ஒருபழமுதிர்ச்சோலை என கதிர்காம முருகன் ஆலயம்

கந்த புராண காலச் சிறப்பும் இராமாயண காலச் சிறப்பும் கொண்ட கதிர்காமத்திலிருந்து கொண்டு வரப்பெற்ற ஸ்ரீயந்திரமே நம் நீர்வேலி செல்லக் கதிர்காமம் உருவாகக் காரணமாயிற்று என்று கர்ண பரம்பரைக் கதைகள் மூலம் அறிய முடிகிறது.குடிலாக இருந்த இவ்வாலயம் 1930 இல் ஆகமோக்தமான ஆலயமாக்கப் பெற்று பிரம்மஸ்ரீ க. தியாகராஜக் குருக்களால் குடமுழுக்குச் செய்யப்பெற்று அவராலே தொடர்ந்து பரிபாலிக்கப் பெற்று வருவதாயிற்று.

குருக்கள் முதுமையால் தளர்வுற திரு. இராசா குடும்பத்தாரின் அனுசரணையுடன் சில காலம் பராமரிக்கப்பட்டது. எனினும் காலவசத்தால் சிலகாலம் பொலிவு குன்றி பூஜாராதனையும் தடைப்படலானது. இந்த நிலையில் பிரம்மஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள் (நீர்வைமணி ஐயா) பூஜகரானார் . அதன்பின் புனருத்தாரணம் செய்ய பெற்று 1985 இல் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற்றது . எனினும் 1995 இல் அசாதாரண நாட்டுச் சூழலில் சேதமுற்றது. பின்பும் குருக்கள் அன்பர்களின் அயராத நன்முயற்சியால் 1997 இல் புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது. திருக்கோயில் மிகச்சிறப்பாக இறைவனின் திருவருள் துலங்கும் பெருங்கோயிலாக மாற்றமுற்றுள்ளது.ஆனிமாதத்தில் மஹோற்சவம் காணும் கதிர்காம சுவாமி மீது மஹாவித்துவான் வீரமணி ஐயரவர்களும் வித்தகர் கோபாலசிங்க கவிஞரும் தோத்திரப்பாக்கள் பாடியுள்ளனர்.

பல்வகை மரங்களும் நிறைந்த இயற்கைச்சூழல் அமைவு பெற்றுள்ள இத்தலம் ஜாதி மத பேதமின்றி யாவரும் வழிபடும் ஸ்தலமாக பல தொழில் புரிவோரும் பிற மத சகோதரர்களும் பரவும் தலமாக உடல் உள பிறவிப் பிணி தீர்க்கும் வைத்தியனாம் இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலமாகத் திகழ்கிறது. சிறிய நூலகமாகவும் இந்தக் கோயில் உள்ளது ஆலய வெளியீடாக ஆலய குரு நீர்வைமணி ஐயாவின் அனுசரணையில் தமிழ், சமஸ்கிருத நூல்கள் பல வெளியாகியுள்ளன. பேரருளாளனான கதிர்காம சுவாமியின் கிருபையை நாமும் வேண்டுவோம் . மேலும் இவ்வாலத்தில் 2011 ஆம் ஆண்டு திருப்பணிச் சபை உருவாக்கப்பெற்ற பாலஸ்தாபனம் செய்யப் பெற்று திருப்பணிகள் நடைபெற்று 2012 ஆம் ஆண்டு வைகாசி மாத அஸ்வினி நட்சத்திரத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து திருப்பணிச்சபையும் அறங்காவல் சபையாக உயர்த்தப்பட்டது இவ்வாலயத்தில் வலஞ்சுழி விநாயகர், ஸ்ரீ தேவி, பூதேவி சமேத சுந்தரராஜப் பெருமாள் ஆகிய மூர்த்திகளும் தனித்தனி சந்நிதிகள் உள்ளமையும் உறியடி உற்சவம் போன்ற விஷ்ணு வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெறுவதும் குறிப்பிட வேண்டியன.

இந்த வகையில் ஆறுபடை வீடுகளில் பழமுதிர்ச்சோலை தலத்தினை ஒத்ததாக ஈழத்து பழமுதிர்ச்சோலை என்று போற்றும் வண்ணம் திருமாலும் திருமுருகனும் சோலை நிறை இத்தலத்தே எழுந்தருளியுள்ளமை விதந்துரைக்கத்தக்கது.

இவ்வாலய வளர்ச்சியில் ஈடுபட்டு உழைக்கும் ஒவ்வொருவரும் போற்றுதற்கும் வணக்கத்துக்கும் உரியராவர்

நம் எல்லோருடன் என்றென்றும் எழுந்தருளியிருந்து நீர்வைக் கதிர்வேலன் கடாட்சிக்க வேண்டுமாய் பிரார்த்திப்போமாக.

நீர்வை தி. மயூரகிரி சர்மா

## நீர்வை கதிர்காம தனித்துவச் சிறப்புகள்

| | |
|---|---|
| அமைவிடம் | : நீர்வையூரின் வடபால் ( நீர்வேலி சுன்னாகம் வீதிக்கு சமீபமாக) அமைவு பெற்றுள்ளது. |
| பெயர் காரணம் | : அன்பும் (காமம்) அருளொளியும் (கதிரும்) நிறைந்த பவித்திரமான ஸ்தலம். |
| மூலவர் | : ஸ்ரீசெல்லக்கதிர்காம சுவாமி |
| தேவியார் | : சுந்தரவல்லி, அமிர்தவல்லி |
| உற்சவர் | : ஸ்ரீசுந்தரராஜ சுவாமி |
| மூலவர் திருநிலை | : வேலாயுத வடிவாக கிழக்கு நோக்கிய திருநிலை. |
| தீர்த்தம் | : ஸ்ரீகுமார புஷ்கரணி |
| தலவிருட்சம் | : நெல்லிமரம், கடம்பமரம் |
| பெருவிழாக்கள் | : ஆனிப்பிரம்மோற்சவம், ஆடித்திருவோண தீர்த்தோற்சவம், கந்தஷஷ்டி உற்சவம் |

* தபஸ்வினிகளான பெண்ணடியார்கள் ஸ்தாபித்த ஆலயம்.
* நாகதேவர்களால் ஆலயம் காக்க படுவதாக ஐதீகம்.
* சமாதிலிங்க ஸ்தாபனமும்.வேலாயுத பிரதிஷ்டையும் உள்ள கோயில்
* இக்கோயிலுக்கென்று தனித்துவமான வழிபாட்டுப் பாரம்பரியங்கள் பேணப்படுகின்றன.
* சப்தகிரி நாதனாம் கதிர்காமப் பெருமானுக்கு நேர்த்தி செய்யப்பெற்று பின் அங்கு செல்ல இயலாதோர் இங்கு அதை நிறைவேற்றி மனநிறைவையும் முருகனருளும் பெறுகின்றனர்.
* திருமால் மருகன் , முருகன் இங்கு மால் வடிவமாகவே அலங்காரப் பிரியனாயிருக்கிறான். மாவிளக்குப்பிரசாதம் , சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் இங்கு விசேடம்.
* சிவத்தொண்டன் ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள், ஸ்ரீமத் முத்துக்குமார ஆச்சாரிய சுவாமிகள் ஆகிய தூய துறவியர் பிறந்தகம் இவ்வாலயத்தருகே உள்ளது.

* இன்று 30.06.2015 தேர்த்திருவிழா
* வசந்தமண்டபப் பூசை காலை 7.30 மணி
* சுவாமிதேரில் ஆரோகணித்தல் காலை 9 மணி
* நாளை தீர்த்தத் திருவிழா
* சுவாமி ஸ்ரீகுமார புஷ்கரணி தடாகத்தில் தீர்த்த மாடல் முற்பகல் 11 மணி
* நாளை மறுதினம் திருக்கல்யாண உற்சவம் பிற்பகல் 2 மணி

அனைவரும் வருகைதந்து செல்லக்கதிர்காம முருகனின் திருவருள் பெற்றுய்வீர்களாக

தேவஸ்தானம்.


திருமதி ராகினி நித்தியானந்தன்
குடும்பத்தினர்.
(தேர்த்திருவிழா உபயகாரர்)

பவானி களஞ்சியம்
நீர்வேலி
021 320 2600

ஞானம் சவுண்ட் சேவிஸ்
கரந்தன் மேற்கு, நீர்வேலி
077 549 5439

ஷாம்பவி பதிப்பகம்
Branch:
கரந்தன் வீதி, நீர்வேலி.

Tel: 021 222 4143
Mobile: 077 618 4425
E.Mail: shampavi2009@gmail.com

ஹரன் ஜீலல்லர்ஸ்
நகை - வைர வியாபாரிகள்


துவாரகன் உணவகம்
சுன்னாகம் வீதி,
நீர்வேலி
உரிமையாளர் : மா. ஜீவராஜன்

சுகந்தன் பல்பொருள் வாணிபம்
சுன்னாகம் வீதி, நீர்வேலி.
077 383 4296
உரிமையாளர் :K.சுகந்தன்


அருணா பல்பொருள் வாணிபம்
சுன்னாகம் வீதி, நீர்வேலி

காமாட்சி அம்பாள் சிற்பாலயம்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
உரிமையாளர் கலாபூஷணம்
விஸ்வலிங்கம் ஸ்தபதி
077 855 1391

மயூரி இரும்பகம்
Mayoori Hardware
சுன்னாகம் வீதி, நீர்வேலி.
077 718 1646

சிவா ஸ்ரோர்ஸ்
சுன்னாகம் வீதி, நீர்வேலி.
077 858 3803
உரிமையாளர் :S.ஜெயரூபன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை
# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்
# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 30.06.2015

## ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வீரமாகாளி அம்மன் வரலாற்றுச்சிறப்புகளை நோக்குமிடத்து கலிங்கை சிங்கை ஆரியன் (1215 - 1240) யாழ்ப்பாணத்து அரசனாக இருக்கையில் அவனுடைய சிறிய இராசதானியான நல்லூரைப் பாதுகாக்கும் நோக்குடன் வீரமாகாளி அம்பாள் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாண மன்னர்களின் போர்த்தெய்வமாகவும் வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அக்காலத்தில் இவ்வாலயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின் போது தங்கள் படைக்கலன்களைக் கொலுவின் போது வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தனர். இதற்கு சான்றாக சில வருடங்களின் முன்னர் சங்கிலிய மன்னன் பயன் படுத்திய பட்டாளத்து வாள் மானம்பூ உற்சவத்தின் போது கன்னி வாழையை வெட்டப்பயன் படுத்தினர். இத்தகைய வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட இவ் ஆலயம் தற்போது பரம்பரை பரம்பரையாக சைவக் குருமார்களால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலே முதன் முதலில் மஹிடாசுர சங்ஹாரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இவ்வாலயத்திற்கு உண்டு. வடக்கு வாயில் நோக்கி அமைந்துள்ள வீரமாகாளியம்மன் ஆலயம் ஆனது யாழ் நகரில் இருந்து பருத்தித்துறை வீதியை மையமாக கொண்டு அமைந்துள்ளது. ஆலயத்திற்கு அழகு சேர்க்கும் வகையில் இரு மருங்கிலும் அழகிய மணிக் கோபுரங்களும் சப்த தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் அமைந்து காணப்படுகின்றன. ஆலயத்துக்குள் புகுந்ததும் அடியார்களின் கண்ணைக்கவரும் வண்ணம் கொடித்தம்பம். காட்சியளிக்கின்றது.

ஆதி மூலம் எனும் கர்ப்பக்கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள விக்கிரகம் கருணாம்பிகை வடிவமுள்ளது. அதாவது அம்மூலவிக்கிரகமானது மகிடாசுவர்த்தினி எனவும் அழைக்கப்படுகின்றாள். தேவ சபையில் எட்டுக்கைகளுடன் காளியம்பாள் சிங்கத்தின் மீது அமர்ந்து காட்சியளிக்கின்றாள். மஹோற்சவ காலத்தின் போது எழுந்தருளி விக்கிரகமாக நான்கு கையுடன் கூடிய வீரமாகாளி தரிசனம் தருகின்றாள். பரிவார மூர்த்திகளாக விநாயகர், நாகதம்பிரான், கஜவல்லி, மகாவல்லி, சமேத சுப்பிரமணியர் , சனீஸ்வரன் , வைரவப்பெருமான் ஆகியோர் காட்சி தருகின்றனர். அம்பாளின் ஆலயத்தில் மிகச்சிறப்பான சித்திர வேலைப்பாடுகளையுடைய வாகனங்கள் பல காட்சியளிக்கின்றன. இவ்வாலய தேரானது வரலாற்றுச்சிறப்புகளளைக் கொணடது. அதாவது யாழ்ப்பாண தமிழ் சிற்பாச்சாரியர்களால் முதன் முதலில் உருவாக்கப்பட்ட தனித்துவச்சிறப்பினைக் கொண்டு விளங்குகின்றது. இவ்வாலயமானது அன்று தொடக்கம் இன்றுவரை சைவக்குருமார் பரம்பரையினால் பரிபாலிக்கப்பட்டும் நித்திய பூசைகள் நடத்தப்பட்டும் வருகின்றன.

## அருளாசிச் செய்தி

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி தனது ஆலய பெருந்திருப்பணிகளை எல்லாம் எனது கையால் செய்து வைக்கின்ற பெரும் பாக்கியத்தை அன்னை எனக்களித்திருக்கின்றா. எம் முன்னோர்கள் உள்ளன் போடு செய்த பூஜைகளின் பயனே அவர்களின் வாரிசான எனக்கு அருள் கிடைக்க வழிசமைத்தது என்றால் மிகையாகாது அவர்கள் கண்ட கனவுகளை எல்லாம் இன்று நினைவாக்கி வைக்கின்றாள் அன்னை வீரமாகாளி. 25 தினங்கள் நடைபெறும் பெருந்திரு விழாவில் அன்னையின் அழகுக் கோலத்தை வர்ணிக்க முடியாது. அதிலும் தேர்த்திருவிழா அலங்காரத்தைக் காண கண் ஆயிரம் வேண்டும். எமது ஆணவத்தை அழித்து எம்மை மனிதனாக வாழ வழி சமைக்கும் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டுள்ள அடியார்கள் தொண்டர்கள் புலம்பெயர் அடியார்கள் மற்றும் இவ்வுலகத்தில் வாழ்கின்ற சகல ஜீவ ராசிகளும் இன்புற்று வாழவும் எல்லாம் வல்ல பரம்பொருளாம் அன்னை வீரமாகாளியைப் பணிந்து அருளாசி கூறுகின்றேன்.

வீரமாகாளியைச் சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

சக்திதாசன் சிவஸ்ரீ சிவ கமல்ராஜ் குருக்கள்
(முதன்மைப் பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்),
சிவாச்சார்ய இளவரசு-சக்தி கிரியா வியாசர்)

## தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்


கிருஸ்ணா
நகை மாளிகை
இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
அசல் 22 கரட், தங்கநகைகள் உத்தரவாதத் துடன்
செய்து கொடுக்கப்படும்
கிளை:
கிருஸ்ணா அடகு கடை
370, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

மதிவதனி சிற்பாலயம்
T.P : 021 222 0374, 077 411 2049, 077 465 6408

YOGI'S BEAUTY
இல. 75, அம்மன் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
yogisbeauty@ yahoo.com

COLOMBO Hut
Rooms - Homes - Tours
House Keeper 0756 530 348

நியூராம்
கட்டட
ஒப்பந்த காரர்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பூபாலு
மோட்டோர்ஸ்
263,
பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்மன்
கோயிலடி,
யாழ்ப்பாணம்.

Yarl Pardy
your home in jaffna
Tel:
+94 (0) 21 222 6868
+94 (0) 75934 0026
+94 (0) 777 360353
49-51 Amman road,
Nallur,
Jaffna, Srilanka
House Keeper
0759 875 800
Email: tysunda@gmail.com

அம்பாள்
மரக்காலை
261, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி
அம்மன் கோயிலடி, நல்லூர்,
யாழ்ப்பாணம்
T.P: 021 492 1012, 0777 111147

அம்பாள்
வெதுப்பகம்
264, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

ராணி
மரக்காலை
85, வீரமாகாளி அம்மன்
கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் கழிவுகள்

கே.கே.எஸ். வீதியில் யாழ். இந்துக் கல்லூரிக்கும், சிவ தொண்டன் நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் மீண்டும் கழிவுகள் கொண்டப்பட்டுள்ளதைக் காணமுடிந்தது.
யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகளில் ஒன்றாக கே.கே.எஸ். வீதி காணப்படுகின்றது. இந்த வீதியூடாகத் தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் பயணிக்கின்றனர். இந்த நிலையில் வீதியின் ஓரமாகக் கழிவுகள் கொட்டப்பட்டு அசிங்கமாகக் காணப்படுகின்றமை பலரையும் முகம் சுளிக்க வைக்கிறது.
இந்த இடத்தில் கழிவுகளை கொட்டுவது எந்த வகையிலும் நியாயமானதாகத் தெரியவில்லை. மேலும் யாழ். மாநகர சபையினர் அடிக்கடி கழிவுகளை அகற்றி வருகின்ற போதிலும் கழிவுகளைக் கொட்டுபவர்கள் விடுவதாகத் தெரியவில்லை. வீதியோரத்தின் குறிப்பிட்ட தூரத்துக்கு இந்தக் கழிவுகள் பரவிக் கிடப்பதால் அதைக் காணுகின்ற வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் குடாநாட்டு மக்கள் தொடர்பாகத் தவறாக எண்ணும் நிலையும் ஏற்பட்டுள்ளது.
ஆகவே குறிப்பிட்ட இடத்தில் கழிவுகள் போடுவதை உரிய அதிகாரிகள் தடை செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

*மா.ஸ்ரீரஞ்சினி யாழ்ப்பாணம்*

## அதிகாரிகளின் கண்களுக்குத் தெரியவில்லையா?

சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் வீதியின் மோசமான நிலை தொடர்பாகப் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை அந்த வீதியில் பேருந்தில் பயணித்து அவஸ்தைப்பட்ட அனுபவம் எனக்கு ஏற்பட்டது.
நானும் எனது மகளும், பேர்த்தியுமென மூன்றுபேர் சுன்னாகத்திலிருந்து அரச பேருந்தில் ஏறி வடமராட்சிக்குப் பயணமானோம். முன்பாக உள்ள இருக்கைகளில் பயணிகள் அமர்ந்திருந்ததால் பேருந்தின் பின் இருக்கையில் நாம் அமர்ந்து கொண்டோம். பேருந்து புறப்பட்டு அந்த வீதியூடாகப் பயனிக்க ஆரம்பித்ததும் அவஸ்தையும் ஆரம்பமானது. வீதியின் மேடு பள்ளங்களில் பேருந்து வேகமாக ஏறி இறங்கும் போது நாமும் தூக்கி எறியப்பட்டோம். எனது பேர்த்தியின் நிலைதான் பரிதாபமாக இருந்தது. இவ்வாறு புத்தூர் செல்லும் வரை நாம் அவஸ்தைப்பட்டுக்கொண்டே இருந்தோம். பருத்தித்துறை வீதியில் பேருந்து பயணிக்கத் தொடங்கிய போதுதான் நாம் நிம்மதியில் பெருமூச்சு விட்டோம்.
தினமும் பல நூற்றுக் கணக்கானவர்கள் பயன்படுத்தும் இந்த வீதி உரிய அதிகாரிகளின் கண்களில் இதுவரை தெரியவில்லையா?

*கா.புவனேஸ்வரன்*
*சுன்னாகம்*

## மருந்துகளுக்கு பற்றுச் சீட்டு




சுன்னாகத்தில் இயங்கிவருகின்ற மருந்து விற்பனை நிலையத்தில் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படாததால் விலை விவரங்களை அறிந்துகொள்ள முடியாத நிலையில் மருந்துப் பாவனையாளர்கள் உள்ளனர்.
இந்த மருந்து விற்பனை நிலையத்தில் அதிக விலைக்கு மருந்து வகைகள் விற்பனை செய்யப்படுவதாகக் கூறமுடியாது. அதன் உரிமையாளர்கள் நியாயமாகவே நடந்து கொள்கின்றனர். ஆனால், வேறு இடத்தில் மருந்துகளை வாங்கும் போது, விலைகளைச் சரிபார்த்துக் கொள்ள முடியவில்லை.
ஆகவே இந்த மருந்து விற்பனை நிலையத்தினர் பற்றுச் சீட்டு வழங்கும் நடைமுறையை உடனடியாகக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை உள்ளது.
வேறு சில மருந்தகங்களிலும் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படு கின்றது. இதனையும் உரியவர்கள் கவனிக்க வேண்டும்.
மேலும், மருந்துகளுக்குரிய பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுவதால் ஏதாவது தவறான மருந்துகள் விநியோகிக்கப்படும் போது, மருந்துப் பாவனையாளர்கள் மருந்துகளைத் திரும்ப ஒப் படைப்பதற்கும் வசதியாக இருக்கும்.


*சு.பகீரதன் சுன்னாகம்*

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நீதி கிடைக்குமா?

முல்லை மற்றும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 12 வருடங்களுக்கு மேல் எந்தவித ஊதியமுமின்றி தொண்டர் ஆசிரியராகப் பணியாற்றி நிரந்தர நியமனத்தின் போது அரசியல் பழிவாங்கப்பட்டு கவலை அடைந்து நிர்க்கதியாக நிற்கும் தொண்டர் ஆசிரியர்களுக்காக நீதியைத் தட்டிக் கேட்க மாகாணசபைகூட முன்வரவில்லை. மாறாக மத்திய அரசை சாடியுள்ளது. நியமனத்தில் முறைகேடுகள் நடைபெற்றன. இவையெல்லாம் அரசியல் செல்வாக்கு. தனித்து அமைச்சர்களின் இணைப்பாளர்களால் பழிவாங்கப்பட்ட போதிலும், பலம் கொண்ட மாகாணசபையில் இவர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்க முடியாதுள்ளது. நியமனம் பெற்றவர்கள் பற்றி மீளாய்வு செய்யப்படுமானால் அவர்களுக்கு துணைநின்ற ஆசிரியர்கள்கூட குற்றவாளிகளாக்கப்படுவர். எத்தனையோபேர் பாடசாலை செல்லாதோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் உண்மையில் சுமந்தவர் கூலியைப் பெறாது யாரோ ஒருவர் பெற்றுள்ளார். சுமந்தவர்கள் கண்ணீர் வடிக்கின்றனர். அவர்கள் வாழ்க்கையைப் பாதித்துள்ளது. இதனை தற்போதைய அரசுக்கு எடுத்துக்கூறி அவர்களுக்கு நீதி பெற்றுத்தர மாகாணசபை முன்வரவேண்டும்.

*சிந்து, ஒட்டுசுட்டான்*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## தேர்தல் ஆணையாளரின் எச்சரிக்கை நியாயமானது

கடந்த காலத்தில் கடுமையான அரசியல் மயமாக் கலுக்கு இலங்கையிலுள்ள அரச நிறுவனங்க ளெல்லாம் உட்படுத்தப்பட்டமை காரணமாகவே நாட்டிற்கு முக்கியத்துவமிக்க தேர்தல் போன்ற செயற் பாடுகளின்போதும்கூட நியாயமான நடவடிக்கையை எதிர்பார்க்கமுடியாத துர்ப்பாக்கிய நிலையை எதிர் கொண்டிருக்கின்றோம்.
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்ற உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவிப்பு வெளியாகிய பின்னர் கடந்த சனிக்கிழமை தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேர்தல் ஆணையாளர் தெரிவித்த கருத்துகள் இதனை வலுப்படுத்துவதாக அமைந்திருந்தன.
தேர்தல் சட்டங்களை மீறும் சிவில் உத்தியோகத்தர்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கநேரிடும் எனத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்திருந்தார்.
சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் தேர்தலை நடத்துவதற்கு சிவில் உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் அவர்களுக்கு எதிராக அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப் படும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.
பக்கச்சார்பாக செயற்படும் சிவில் உத்தியோகத்தர்களைத் தண்டிக்க அண்மையில் நிறைவேற்றப்பட்ட 19ஆவது திருத்தத்தின் மூலமாக தமக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியிருந்த அவர், மூன்றாண்டுகால சிறைத்தண்டனையை யும், ஒரு இலட்ச ரூபா அபராதத்தையும் விதிக்க அதிகாரமுண்டு எனவும் குறிப்பிட்டிருந்தார்.
ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி வரையில் அரசியல் ரீதியான எந்தவொரு நியமனங்களையோ, இடமாற்ற உத்தரவுகளையோ பிறப்பிக்கமுடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
கடந்த காலத்தில் நாட்டில் இடம்பெற்ற முக்கியமான தேர்தல்களின்போது நடைபெற்ற சம்பவங் களின்மூலம் கிடைத்த பட்டறிவே தேர்தல் ஆணையாளர் இத்தகைய கடும் எச்சரிக்கையுடன் கூடிய கருத்துகளை வெளிப்படுத்தியமைக்குக் காரணமாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.
கடும் அழுத்தங்களின் மத்தியிலும் - அச்சுறுத்தல் களுக்கு நடுவிலும் தேர்தல் ஆணையாளர் உட்பட சில அதிகாரிகள் நடுநிலைமையோடு நியாயமாக நடந்துகொண்டதன் பிரதிபயனாகவே ஜனநாயகத்திற்குச் சார்பான அணியினர் கடந்த தேர்தலில் வெற்றி பெற்றதை மறந்துவிடக்கூடாது.
நல்லாட்சி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிசெய்கின்ற கலாசாரத்தை ஸ்தாபிக்கும் நோக்குடன் 2001ஆம் ஆண்டில் அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தம் பெரும் எதிர்பார்ப்புகளுடன் நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும், அதிகாரத்திலிருந்தவர்கள் அதனை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போட்டிருந்தமையால் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகவில்லை.
பெயரளவில் இருந்த 17ஆவது திருத்தத்தை 2010ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ அரசு இல்லாதொழித்து ஜனநாயக விரோதமான 18ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து சர்வாதிகாரத்தை ஊக்குவித்தது.
18ஆவது திருத்தத்தின்மூலம் வரலாறு காணாத அளவில் அரச சேவை, அரசியல் மயமானது. இதன் பலாபலனை கடந்த ஆட்சிக்காலத்தில் மக்கள் அனுபவிக்க நேர்ந்தது.
இருந்தபோதிலும், அதிர்ஷ்டவசமாக கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி 19ஆவது திருத்தச்சட்டம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விடயங்களிலிருந்து நலிவுற்ற நிலையிலேனும் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக 17ஆவது திருத்தத்தில் இருந்த நல்ல அம்சங்கள் - குறிப்பாக, சுயாதீன ஆணைக்குழுக்கள் மீண்டும் ஸ்தாபிக்கப்படுவதற்கு வழிகோலப்பட்டது.
அரசமைப்புப் பேரவை இன்னமும் ஸ்தாபிக்கப்படாமையால் சுயாதீனக் குழுக்களின் நியமனங்களை முன்னெடுக்கமுடியாதுள்ளபோதிலும், அரச சேவையிலுள்ளவர்கள் தமது பணிகளை சுயாதீனமாக முன்னெடுக்கமுடியும் என்ற நம்பிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாகவே தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள எச்சரிக்கையும் அமைந்துள்ளது. இவ்வாறே ஒவ்வொரு அரச நிறுவனங்களிலுள்ள வர்களும் நடந்துகொள்வார்களேயானால் நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கும் - நியாயம் வெல்வதற்கும் வழிபிறக்கும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 90 | 60 | 80 | 60 | 80 | 40 |
| கத்தரி | 60 | 70 | 50 | 50 | 40–70 | 80 | 80 | 25 |
| கரட் | 140 | 160 | 160–220 | 160 | 240–250 | 280 | 220 | 240 |
| மரவள்ளி | 40 | 40 | 50 | 50 | 60 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 140 | 120 | 140 | 120 | 180 | 120 | 140 | 120 |
| பாகல் | 130 | 150 | 130 | 180 | 160 | 140 | 150 | 130 |
| கருணைக்கிழங்கு | 90 | 80 | 90 | 100 | 100 | 120 | 120 | 65 |
| பெ.வெங்காயம் | 110 | 100 | 100 | 100 | 100 | 110 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 120 –160 | 140 | 140 | 180 | 200 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 80 | 100 | 80 | 80 | 70 | 110 | 70 | 50–60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 50 | 50–60 | 40 | 70 | 30–35 |
| கீரை | 10 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 30–35 | 10 |
| பொன்னாங்காணி | 10 | 20 | 20 | 30 | 20 | 30 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 120 | 160 | 160 | 180–190 | 180 | 190–220 | 220 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 80 | 60 | 80 | 70 |
| கோவா | 90 | 80 | 90 | 100 | 80–100 | 120 | 80 | 70 |
| வெண்டி | 120 | 100 | 100–140 | 120 | 140 –160 | 120 | 120 | 70 |
| போஞ்சி | 160 | 220 | 140 | 180 | 240 | 320 | 240 | 140 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 140 | 160 | 240 | 160 | 140 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 50–60 | 40 | 35–50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 90 | 90 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 140 | 120 | 100 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 130 | 160 | 120–140 | 160 | 200–240 | 200 | 200 | 120 |
| இராசவள்ளி | 120 | 140 | 120 | – | 100–120 | 160 | 180 | – |
| முருங்கைக்காய் | 500 | 300 | 500 | 300 | 400–500 | 400 | – | 300 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உயர்ந்த மனநிலை

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒருபோதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு, உள்ளம் ஒருவனை அழைத்துக் கொண்டு போகிறது.

தாழ்ந்த உண்மையிலிருந்து உயர்ந்த உண்மைக்கு மனித குலம் செல்கிறது, தவறிலிருந்து உண்மைக்குச் செல்கிறோம் என்று நினைப்பது பொருந்தாது.

உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல் வாழ்த்துக்கள்! இன்பங்களுக்கும் நல் வாழ்த்துக்கள்.

## நாளை

ஆனி-16
புதன்கிழமை
01.07.2015
திதி: சதுர்த்தசி
மு.ப. 09.45 வரை
நட்சத்திரம்: மூலம்
பி.இ.04.30 வரை
சுபநேரம்:
04.26-05.56 வரை
இராகுகாலம்:
11.56-01.26 வரை
பூரணை விரதம்


## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 800 | 800 | 600 |
| நண்டு | 300 | 450 | 400 | 400 | 300 | 450 |
| கணவாய் | 550 | 600 | 600 | 600 | 600 | 500 |
| பாரை | 550 | 600 | 650 | 500 | 500 | 320 |
| சுறா | 600 | 600 | – | 650 | 1000 | – |
| சீலா | 300 | 450 | 500 | 400 | 500 | – |
| விளை | 500 | 450 | 400 | 500 | 600 | 350 |
| முரல் | 300 | 350 | 400 | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 600 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 400 | 500 | 300 | – |
| ஒரா | 350 | 400 | 300 | 450 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 300 | 200 | 300 | – | 300 |
| ஆடை | 100 | 100 | 80 | 100 | 100 | 100 |
| ஒட்டி | 150 | 200 | 150 | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 400 | 100 | 250 | 400 | 140 |
| பாலை | 400 | 300 | 300 | 500 | 400 | – |
| வாழை | 100 | 250 | – | 300 | – | – |
| கொய் | 80 | 250 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 100 | 300 | 280 | 250 | – | 250 |

### நீரிழிவு நோயாளிகளுக்கு...

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் ஏற்றது வெந்தயம். வெந்தயம் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதோடு மட்டுமல்லாமல் நீரிழிவு நோய் மற்றும் கொலஸ்ரோல் பிரச்சினைகளுக்கும் மருந்தாகப் பயன்படுகிறது.

சாதாரணமாக எமது இரத்தத்தில் சீனிச்சத்தின் அளவு 80 – 110 மி.லீ வரை இருக்கலாம். நாம் எடுத்துக் கொள்கிற உணவு, அதன் கலோரி போன்றவற்றைப் பொறுத்து இந்தச் சர்க்கரையின் அளவு வேறுபடும். அதிக கலோரி உணவு உட்கொள்கின்ற போது, சீனிச்சத்தின் அளவைக் கட்டுப்படுத்துவதுதான் இன்சுலினின் வேலை. நீரிழிவுக்காரர்களுக்கு இந்த இன்சுலின் சுரப்பு சரியாக இருக்காது. அந்த இன்சுலின் சுரப்பை ஊக்கப்படுத்தி, கிரியா ஊக்கியாக செயற்படுகிற வேலையைத்தான் வெந்தயம் செய்கிறது. தினமும் இரவில் ஒரு கரண்டி வெந்தயத்தைத் தண்ணீரில் ஊற வைத்து விட்டு, மறுநாள் காலையில் அந்தத் தண்ணீரோடு, வெந்தயத்தையும் சேர்த்து உள்ளெடுத்துக் கொண்டால், இரத்தத்தில் சீனிச்சத்தின் அளவு கட்டுக்குள் வரும். கொலஸ்ரோலை கட்டுப்படுத்துவதிலும் வெந்தயத்துக்கு மிகப் பெரிய பங்குண்டு.



## வியர்க்குருவை விரட்ட

வெய்யிற்காலத்தில் வியர்க்குரு தோன்றாமல் இருக்க அடிக்கடி குளிக்க வேண்டும். குளிக்கும் போது மூலிகையினால் தயாரிக்கப்பட்ட சோப்புகளைப் பயன்படுத்து வதே சிறந்தது. வெள்ளரிக்காயை வெட்டி, வியர்க்குருவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 15 முதல் 20 நிமிடங்கள் தேய்க்க வேண்டும். இவ்வாறு ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று முறைகள் செய்யலாம்.இதனை வியர்க்குரு மறையும் வரை தொடர்ந்து செய்யலாம்.

சோற்றுக்கற்றாழை ஜெல்லை, வியர்க்குருவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேய்த்து 20 நிமிடங்கள் கழித்து கழுவி விட வேண்டும். இவ்வாறு ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று முறை செய்தால், நாளடைவில் குணமாகும். வியர்க்குரு தோன்றியுள்ள பகுதிகளில், சாமந்திப் பூவின் சாறு தடவினால் குணமடையும். அதிக காரம் மற்றும் மசாலா நிறைந்த உணவுப் பொருள்கள் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். வெங்காயச் சாற்றை வியர்க்குரு மீது தடவினால் வியர்குரு மறைவ துடன் உடல் குளிர்ச்சி பெறும். சந்தனத்தை உடல் முழுவதும் பூசி அரை மணி நேரம் ஊற விட்ட பின்னர் குளித்தால் வியர்குரு மறையத் தொடங்கும். சோறு வடித்த கஞ்சியை வியர்குரு மீது தடவி சிறிது நேரம் கழித்துக் குளிக்க வியர்க்குரு குணமாகும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 4 | 3 | 9 | 5 | 8 | 6 | 1 |
| 6 | 9 | 1 | 7 | 8 | 4 | 5 | 2 | 3 |
| 8 | 5 | 3 | 6 | 2 | 1 | 9 | 4 | 7 |
| 5 | 8 | 9 | 1 | 3 | 2 | 4 | 7 | 6 |
| 1 | 4 | 7 | 8 | 5 | 6 | 2 | 3 | 9 |
| 3 | 6 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 5 |
| 4 | 3 | 6 | 2 | 1 | 9 | 7 | 5 | 8 |
| 7 | 1 | 5 | 4 | 6 | 8 | 3 | 9 | 2 |
| 9 | 2 | 8 | 5 | 7 | 3 | 6 | 1 | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 5 | 6 | | | | 3 |
| | 7 | | 1 | | | | | 9 |
| 5 | | | | 3 | | 1 | 6 | |
| | | 9 | 7 | | | | 1 | |
| | 4 | | | | | | 9 | |
| | 5 | | | | 3 | 7 | | |
| | 3 | 7 | | 1 | | | | 5 |
| 2 | | | | | 5 | | 3 | |
| 1 | | | | 2 | 4 | | 7 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளை யும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றுச் சிறப்புக்களோடு விளங்கும் யாழ்ப்பாண மன்னரின் போர்த்தெய்வமான

# வீரமாகாளி இன்று தேரேறி வருகிறாள்

யாழ்ப்பாணம் – வண்ணை அருள்மிகு வீரமாகாளி ஆலயம் சரித்திரப் பிரசித்திபெற்ற திருத்தலமாகும். நாற்றிசையும் புகழோங்கத் தமிழையும் சைவத்தையும் ஒருங்கே வளர்த்து ஆட்சி செய்து வந்த சக்கரவர்த்திகளினால் ஸ்தாபிக்கப்பட்டு வந்த இந்த ஆலயம் நல்லூரின் இராசதானியின் எல்லைக்கு அண்மையில் இருந்ததால் நல்லூருக்கு நுழைய முயன்ற அன்னியருடன் நடைபெற்ற போர்கள் பல இந்தப் பகுதியில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இது பற்றி யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் கூற்றிலிருந்து அறிய முடிகிறது.

யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாக வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அந்தக் காலத்திலிருந்தே இந்த ஆலயம் சிறப்புப் பெற்று விளங்கி வருகின்றது. மன்னர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின்போது தங்கள் படைக்கலன்களை கொலுவைத்து வழிபட்டு அம்பாளின் அருட் கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தார்கள்.

இலங்கையில் முதல் முதலில் மஹிஷாசுர சங்காரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இந்த ஆலயத்துக்கு உண்டு. வடக்கு வாயில் நோக்கி அமைந்துள்ள வீரமாகாளி அம்மன் ஆலயம் யாழ். நகரில் இருந்து பருத்தித்துறை வீதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. கோயிலின் உள்ளே புகுந்ததும் கண்ணைக் கவர்வது அங்குள்ள கொடித்தம்பமாகும். ஆலய உட்பிரகாரத்தில் கிழக்கு வீதியில் யாக சாலையும், வாகனசாலையும், தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கி எழுந்தருளிய மூர்த்திகளான விநாயகர், நாகதம்பிரான், மகாவல்லி, கஜாவல்லி சமேத சுப்பிரமணியரும், மேற்குப் பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு சனீஸ்வரர் ஆலயமும், புதிதாக அமைக்கப்பட்ட வசந்த மண்டபம், பிரதான வடக்கு நோக்கிய வாசலில் சப்த தளங்களைக் கொண்ட வானளாவ உயர்ந்த இராஜ கோபுரம், மணி மண்டபம் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தேர் முட்டி, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகுறு தீர்த்தத்தடாகம், வைரவப் பெருமான் ஆலயம், அன்னபூரணி மடாலயம், தொண்டர் சபை போன்ற சிறப்பு அமைப்புக்களைக் காணலாம்.

ஆதி மூலம் எனும் கருவறையில் கர்ப்பக்கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள சிலா விக்கிரகம் கருணாம்பிகை வடிவமாயுள்ளது. மூர்த்திகரமான வடிவத்தில் மஹிஷாசுரமர்த்தினி எனவும் கூறப்படுகிறாள். இந்த ஆலயத்தில் காணப்படும் தேர் வரலாற்றுச் சிறப்பைக் கொண்டு விளங்குகின்றது. 1941ஆம் ஆண்டில் இந்தத் தேர் அமைக்கப்பட் டது. இலங்கையில் யாழ்ப்பாணத் தமிழ் ஆசாரியார்களால் செய்யப்பட்ட முதல் தேர் இதுவாகும். விநாயகர் சண்முகம் என்ற சிற்பாசாரியாரால் செய்யப்பட்டது.

இந்தத் தேர் வெள்ளோட்டம் விடப்பட்டவேளை தேர் அசைய முடியாமல் தத்தளித்த போது வெள்ளைநிற ஆடையுடன் அங்கு ஒரு வயதான மூதாட்டி அந்தச் சிற் பாசாரியாரிடம் ஐந்து ரூபா காசு கொடுத்துவிட்டு மறைந்த பின் அந்தத்தேர் அசைந்தது என்றும் கூறப்படுகிறது. அவர் கொடுத்த ஐந்து ரூபா தற்பொழுது அந்த ஆசா ரியாரின் பட்டறையில் கண்ணாடிச் சட்டமிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

> தேர் வெள்ளோட்டம் விடப்பட்ட வேளை தேர் அசைய முடியாமல் தத்தளித்த போது வெள்ளைநிற ஆடையுடன் அங்கு ஒரு வயதான மூதாட்டி அந்தச் சிற் பாசாரியாரிடம் ஐந்து ரூபா காசு கொடுத்து விட்டு மறைந்த பின் அந்தத்தேர் அசைந்தது என்றும் கூறப்படுகிறது. அவர் கொடுத்த ஐந்து ரூபா தற்பொழுது அந்த ஆசாரியாரின் பட்டறையில் கண்ணாடிச் சட்டமிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடக் கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

இந்த ஆலயத்தில் அழகிய திருமஞ்சம், புஸ்பரதம், சப்பரம், கண்ணைக் கவரும் பல வாகனங்கள் எல்லாம் அம்பிகையின் ஆலயத்துக்கு சிறப்புக்களைப் பெருக்கி நிற்கின்றன. மகோற்சவ காலங்களில் ஒவ்வொரு நாள் உற்சவமும் விசேடமானது. இவ்வாறாக வரலாற்றுச் சிறப்புக்களை கொண்டு விளங்கும் வண்ணை வீரமாகாளியம்பாளின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை மிகச் சிறப்பாக நடை பெறுகின்றது.

அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியாக, பகையறுத்து வாழ்வுதர வீரவாளேந்தி தேரேறி வருகின்ற திருக்காட்சியைக் காண யாழ்ப்பாணக் குடாநாடே வண்ணை வீரமாகாளி அம்பாளின் ஆலயத்தில் சங்கமமாகும் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்.

சமூகதிலகம் வர்ணணைக் கலா
மதுரகவி காரை.எம்.பி.அருளானந்
J.P பணிப்பாளர், சைவத்
பண்பாட்டுக் கழ

# 3 டி கண்ணாடி தூய்மையாக்கல் நிலையத்தை அறிமுகம் செய்துள்ள சிலோன் தியேட்டர்ஸ்




சி.ரி ஹோல்டிங்ஸ் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான சிலோன் தியேட்டர்ஸ், இலங்கையர்களுக்கு தரமான சினிமா அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதில் புகழ்பெற்ற நிறுவனமாக விளங்குகிறது. புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இந்த சினிமா அனுபவத்தை வழங்கும் சிலோன் தியேட்டர்ஸ், திரையரங்குகளில் திரைப்படங்களை பார்வையிடும் ரசிகர்களுக்கு வழங்கும் 3 டி கண்ணாடிகளை தூய்மைப்படுத்தும் வகையில் தூய்மை நிலையத்தை அறிமுகம் செய்துள்ளது. 2015 ஜூன் மாதம் 23 ஆம் திகதி மெஜஸ்ரிக் சிற்றி திரையரங்குத் தொடரில் இந்த தூய்மையாக்கல் நிலையம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. 3 டி திரைப்படங்களை பார்வையிட வரும் ரசிகர்களை அபாயகரமான நோய்கள் மற்றும் தொற்றுக்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அறிமுக நிகழ்வில் கொழும்பு பதில் மேயர் யு.எல்.டைடஸ் பெரேரா மற்றும் கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஆர்.எல்.டி எஸ். விஜேமுனி, சிலோன் தியேட்டர்ஸ் பிஎல்சி நிறைவேற்று பணிப்பாளர் சஞ்சய் நைல்ஸ், பொது முகாமையாளர் மஹேந்திர டி அல்விஸ் மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரவீன் டேவிட் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். இந்த கட்டமைப்பின் மூலமாக எவ்வித சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவது தவிர்க்கப்படுவதுடன், சகல விதமான துர்மணங்களையும் நீக்கும் வகையில் அமைந்துள்ளது. இதன் மூலம் பார்வையாளர்களுக்கு சௌகர்யமும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிகழ்வில், புதிய நிலையத்தின் அனுகூலங்கள் பற்றி சிலோன் தியேட்டர்ஸ் பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரவீன் டேவிட் கருத்துத் தெரிவிக்கையில், இந்தத் தூய்மையாக்கல் நிலையம் என்பது, எமது வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, நிறுவனத்தினால் வெளிப்படுத்தப்படும் அர்ப்பணிப்பாக அமைந்துள்ளது.

எமது திரையரங்குகள் பெருமளவான வாடிக்கையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், அவர்கள் வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். எனவே, அவர்கள் எமது திரையரங்குகளுக்கு வருகை தரும் போது நம்பிக்கையுடன் வருகை தருவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும் என்றார்.

[illegible] இலங்கையில் [illegible]ாக திரையிடும் முன்னணி நிறுவனம் எனும் வகையில் இந்த நம்பிக்கையை மக்கள் மத்தியில் சிலோன் தியேட்டர்ஸ் கொண்டுள்ளது. நாம் குழுமம் எனும் வகையில் விஸ்தரிக்கப்பட்டு வரும் நிலையில், எமது வர்த்தக நாமங்களுடன் இணைந்துள்ள நம்பிக்கை எமக்கு மிகவும் வலிமையளிக்கும் விடயங்களாக அமைந்துள்ளன. நாம் இவற்றில் தொடர்ந்து முதலீடுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். தூய்மையாக்கல் நிலையம் என்பது இதில் ஒரு அங்கமாக அமைந்துள்ளது. இதன் போது 3டி கண்ணாடிகள் கிருமிகள் அகற்றப்பட்டு, பிரத்தியேக பாவனைக்காக பொதி செய்யப்பட்டிருக்கும். இதன் மூலம் கண்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விற்பனையில் சாதனை படைக்கும் ஹோவெய் (Huawei)



சிறந்த மொபைல் சாதனங்களை வடிவமைத்து அறிமுகம் செய்து வரும் Huawei நிறுவனமானது இந்த வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் 50 மில்லியன் மொபைல் சாதனங்களை விற்பனை செய்துள்ளது.
சீன மொபைல் சாதன வடிவமைப்பு நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட அதி உச்ச விற்பனையாக இது கருதப்படுகின்றது. இதேவேளை கடந்த வருடத்தின் முதல் காலாண்டுப்பகுதியில் 34.27 மில்லியன் மொபைல் சாதனங்களே இந்த நிறுவனத்தினால் விற்பனை செய்யப்பட்டிருந்தன. மேலும் இந்த வருடத்தின் முதல் காலாண்டுப் பகுதியில் மொத்தமாக 6.9 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மொபைல் சாதனங்களை விற்பனை செய்துள்ளதுடன் புதிய வரவாக Huawei P8 Max எனும் ஸ்மார்ட் கைப்பேசியை அறிமுகம் செய்யவுள்ளது.

# பிரபல்யம் அடையும் Dropbox

ஒன்லைன் சேமிப்பு வசதியை வழங்கிவரும் பிரபல்யமான நிறுவனங்களுள் ஒன்றான Dropbox, நிறுவனம் தற்போது 400 மில்லியன் பயனர்களை எட்டியுள்ளது.
கடந்த வருடம் மே மாதத்தில் 300 மில்லியன் பயனர்களைக் கொண்டிருந்த Dropbox ஒரு வருடம் எனும் குறுகிய காலத்தினுள் மேலும் 100 மில்லியன் பயனர்களை பெற்றுச் சாதனை படைத்துள்ளது.



இதில் 100,000 இற்கும் அதிகமானவர்கள் வியாபார நோக்கத்துடன் இந்தச் சேவையைப் பயன்படுத்துபவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு தனது சேவையை வழங்கிவரும் Dropbox நிறுவனம் 2008 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.
இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் அன்ரோயிட் சாதனங்களுக்கான புதிய Dropbox அப்பிளிக்கேஷனும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# அல்ஸீமர் நோயாளிகளைக் கண்காணிக்கும் அப்பிளிக்கேஷன்



அல்ஸீமர் நோய் என்பது தன்னை அறியாது, நிலை மறந்து பயணிப்பதாகும். இவ்வாறு தன்னை மறந்து பயணிக்கும் நோயாளியொருவர் தொடர்பில் தகவல் தெரிவிக் கக்கூடிய சாதனம் ஒன்றை 16 வயதான அமெரிக் காவைச் சேர்ந்த உயர் கல்லூரி மாணவனான Kenneth Shinozuka என்பவர் உருவாக்கியுள்ளார்.
தனது பாட்டனாரும் இதே நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களே இந்தச் சாதனத்தை உருவாக்கத் தம்மைத் தூண்டியதாக குறித்த மாணவன் தெரிவித்துள்ளார்.
Safe Wander எனும் இந்தச் சாதனமானது, சிறிய நாணயத்தின் அளவை ஒத்ததாக இருப்பதுடன், அதன் அடிப்பகுதியில் சென்சார் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.
இதனை நோயாளியின் பாதத்தின் அடிப்பகுதியில் அல்லது காலுறையினுள் பொருத்துவதன் மூலம் அவரது அசைவுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# நாடாளுமன்று கலைக்கப்பட்டதால் 20 என்ற பூகம்பம் தவிர்க்கப்பட்டது

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 30
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் 20 என்ற பூகம்பம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட்.



காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்ற இப்தார் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
சிறிய கட்சிகளுக்கும், சிறுபான்மை சமூகங்களுக்கும் பாதிப்பாக விளங்கிய தேர்தல் முறை மாற்றம் குறித்த 20ஆவது திருத்தம் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எழுப்பிய எதர்ப்புக் குரலால் அவர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் அமைச்சர் ராஜித போன்றோரால் இனவாதியாகக் காட்டப்பட்டுள்ளார்.
இனத்தின் அரசியல் பாதிக்கப்படும் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை எதிர்ப்புக் குரல் எழுப்பியது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன ஆகியோருக் கிடையில் உடன்படிக்கை ஏற்பட்டு, பிரதமர் வேட்பாளர் ஒருவரை எதிர்வரும் பொதுத் தேர்தலில் நிறுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
இதனால் மஹிந்தவின் அட்டகாசம் மீண்டும் வந்து விடுமோ என்ற பெரும் அச்சம் பீதி ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலை முஸ்லிம் சமூகம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
1994ஆம் ஆண்டு எமது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்த நாட்டின் ஆட்சியை, பிரதமரை, ஜனாதிபதியை தீர்மானிக்கும் சக்தியாக விளங்கினார்.
நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக வந்ததன் பின்னர் இரண்டு முக்கிய விடயங்களை கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றேன். அதில் பெண்கள் வெளிநாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண்களாக செல்லக் கூடாது, அதைத் தடை செய்யவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு இங்கேயே வாழ்வதார தொழிலை ஏற்படுத்துவதற்காக முதலீடுகளை செய்து அவர்களுக்கான தொழில்களை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றேன். அதே போன்று கிழக்கு மாகாணத்தில் வேலை வாய்ப்பில்லாமலிருக்கும் 3 ஆயிரத்து 200க்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றேன். – என்றார்.
இந்த வைபவத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாறூக், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளருமான யூ.எல். எம்.என்.முபீன் உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.
(ற)




வல்லை மகளிர் மகா வித்தியாலயத்தின், தரம் 6,7,8 என்பவற்றைச் சேர்ந்த மாணவியர் நேற்றுமுன்தினம் கல்விச் சுற்றுலா மேற்கொண்டிருந்தனர். அதன் ஓர் அங்கமாக, அவர்கள் உதயன் பணி மனையையும் பார்வையிட்டனர்.

# கிழக்கு உள்ளூராட்சி ஊழியர்கள் 684 பேருக்கு நிரந்தர நியமனம்

திருகோணமலை, ஜூன் 30
கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் பல வருட காலமாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 684 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
நிரந்தர நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் வழங்கினார்.
அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு 131 நியமனங்களும், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு 178 நியமனங்களும், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு 375 நியமனங்களும் வழங்கப்பட்டன.
இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
சுமார் 20 வருட காலங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படை யில் கடமையாற்றிய இந்த ஊழியர் கள், தமது நியமனம் குறித்து பல போராட்டங்களை முன்னெடுத் திருந்தனர். தற்போதைய நல்லாட்சியில் இவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அறிக்கை வெளிப்படுத்துவது என்ன?

சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க இராஜாங்க அமைச்சு வெளியிட்டிருந்த 2014ஆம் ஆண்டுக்கான உலக விவகாரங்கள் தொடர்பான அறிக்கையின் இலங்கை குறித்த பகுதியில், உலகம் முழுவதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இடம்பெற்றுவருவது பற்றியும் தெரிவிக்கப்பட்டி ருந்தது.

இந்த அறிக்கை வெளிவந்த கையோடு தென்னிலங்கைத் தலைவர்கள் குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜீ.எல்.பீரிஸ் போன்றவர்கள் "குய்யோ முறையோ" என்று கூக்குரல் எழுப்பியிருந்தார்கள். புலி தலை தூக்கிக் கொண்டு நிற்கிறது, எந்தச் சமயத்தில் அது இலங்கை மீது பாயுமோ தெரியவில்லை என்பது போல் அவர்கள் அச்சுறுத்தியதற்கான அடிப்படை என்னவென்பதை நாட்டின் நடப்பில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் அறிவார்கள்.

சிறிசேன-ரணில் இணைப்பரசு பலவீனமானது, அவர்களின் கையாலாகாத்தனத்தினால் தான் மீண்டும் இந்தப் புலி ஆபத்து ஏற்பட்டிருக்கிறது, அதனால் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவாகிய பலவானை ஆட்சியில் அமர்த்தினால்தான் இந்த ஆபத்திலிருந்து நாட்டைக்காக்க முடியும் என்பதாக ஒரு தோற்றப்பாட்டை சிங்கள பேரினமக்கள் மத்தியில் ஏற்படுத்தி, அதன் மூலம் காரியம் சாதிப்பதே அவர்களது நோக்கம். இல்லையெனில், இப்பொழுது அமெரிக்க இராஜாங்க அமைச்சு அறிக்கையின் மேலும் ஒரு பகுதி வெளிவந்திருக்கிறதே, அதைப்பற்றி அவர்கள் ஏன் பேசாமடந்தைகளாய் மௌனம் காக்க வேண்டும்? அவர்கள் நடத்திய கொடூர ஆட்சியின் பொட்டுக்கேடுகளை அது வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளமையே அவர்களது மௌனத்துக்குக் காரணம்.

அந்த அறிக்கையின் சில பகுதிகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

ராஜபக்ஷ ஆட்சியின்போது இடம்பெற்ற மிகப் பிரதானமான மனித உரிமை மீறல்களாவன, சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் புலிகளுக்கு ஆதரவாளர்கள் போலத் தென்பட்டவர்கள் மீது அரச ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் இம்சைகளும், தாம் விரும்பாத நிலையில் காணாமற்போகச் செய்யப்பட்டமை, விசாரணைகளின்றி நடத்தப்பட்ட கைதுகள், தடுப்புக்காவல், வதை செய்தல், தடுப்பிலுள்ளவர்களைத் துன்புறுத்தியமை, வன் புணர்வுக்குட்படுத்தியமை மற்றும் வேறு விதமான பால்வினைத் தொந்தரவுகள், பால் நிலை வன் செயல்கள் என்பனவையாகும். இவைகள் பொலிஸ், பாது காப்புதரப்பினர்களால் மேற் கொள்ளப்பட்டிருந்தன. மேலும் விரிவான அளவில் மனித உரிமை மீறல்களுக்கு தண்டனை விலக்கு அளிக்கப்பட்டிருந்தமையும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிரான கருத்துக்கள் வெளியிடுகின்ற ஊடக நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள் அரசுக்கு விசுவாசமானவர்களால் இம்சைகளுக்குள்ளாக்கப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும், தாக்கப்பட்டுமுள்ளன. இது விரிவானதொரு பீதிநிலையை ஏற்படுத்தியிருந்ததால் ஊடகவியலாளர் தமக்குத் தாமே தணிக்கையை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. இது ஜனநாயகச் சீர்குலைவுக்கு இட்டுச்சென்றது. அதுமட்டுமல்ல, மோதல்கள் நிகழ்ந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களில் தொடர்புடைய இராணுவ அதிகாரிகள் குறித்து 2014ஆம் ஆண்டு மனித உரிமைகள் சபை அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருப்பதுபோல், இன்னமும் சர்வதேச மனிதஉரிமை சட்டங்களை மீறியமைக்கான பொறுப்புக் கூறலுக்குட்படுத்தப்படா மல் இருக்கின்றன. அத்துடன் தெற்கில் பொதுபல சேனா அமைப்பு பொதுமக்கள் மீதும் சமய சிறுபான்மையினர் மீதும் நடத்தியிருந்த தாக்குதல் குறித்தும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான அறிக்கைகள், கருத்துக்களில் காணப்படும் தங்கள் பரப்புரைக்கு உகந்த தகவல்களை மட்டும் தேடியெடுத்துக்கொண்டு சன்னதம் ஆடுபவர்கள், அவைகளில் காணப்படும் தங்களுக்கு மாறான உண்மைகளை அப்படியே விட்டுவிடுகிறார்கள். இதனை இந்த நாட்டின் பெரும்பான்மையினர் புரிந்து கொள்வதற்கு இன்னரும் காலம் எடுக்கக்கூடும். ஆனால் உலகம் விழித்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் புரியும் தகிடுதத்தங்களை சர்வதேசம் உன்னிப்புடன் அவதானித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் இவர்கள் [illegible] மறந்து போகலாகாது. அதைத்தான் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அறிக்கை வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்.

# பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலத்தைக் கடத்துவதில் பயனில்லை




■சேரலாதன்

ஜனாதிபதியுடன்கூட்டமைப்பினர் அண்மையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய பொறிமுறை தொடர்பாகத் தாம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னரும் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனவர்கள் தொடர்பான பிரச்சினை, முன்னாள் போராளிகள் வெளிநாடுகளில் இருந்து திரும்பி வருகின்றபோது கைது செய்யப்படுகின்றமை, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரப் பிரச்சினை, இடம்பெயர்ந்த தமிழர்கள் தமது வாழ்விடங்களில் குடியமர்த்தப்படாமை, படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்படாமை, வெளியிடங்களைச் சேர்ந்த மீனவர்களால் ஏற்படுகின்ற தொல்லைகள், பெரும்பான்மை இனத்தவரால் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றமை, தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின் றமை, புதிய தேர்தல் சீர்திருத்தத்தின் மூலமாக சிறுபான்மை மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைக்கப்படும் நிலை இவ்வாறு தமிழ் மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

மஹிந்த ஆட்சி மாறியபோது தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டமை உண்மைதான். அந்த அளவுக்கு அவர்கள் வெறுத்துப்போன நிலையில் காணப்பட்டனர். இதனை வெளிப்படுத்தும் நிலையில் மைத்திரிக்குத் தமது வாக்குகளை வாரி வழங்கி அவரை ஜனாதிபதிப் பதவியிலும் அமர்த்தி வைத்தனர். தமிழர்களால் தான் நான் தோல்வியைத் தழுவினேன் என்று மஹிந்த மனம் வெதும்பிக் கூறுமளவுக்கு தமிழர்கள் அளித்த வாக்குகள் பெறுமதிமிக்கவையாகக் காணப்பட்டன. சில இனவாதிகள் இதைக் கூறிக் கூறியே இனவாதத் தீயை அணையவிடாது [illegible] செய்[illegible] வேறு விடயம்.

இந்த நிலையில் [illegible] வாழுகின்ற தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்ளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் ஜனாதிபதியைச் சந்தித்து தமிழர் பிரச்சினைகள் தொடர்பாக சுமார் ஒரு மணிநேரம் உரையாடியதாகவும், இதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க உடனிருந்ததாகவும் தெரிய வருகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கி வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியும், கூட்டமைப்பி னரும் சந்தித்துப் பேசியிருக்கின்றமை அரசியல் முக்கியத்துவம் மிக்கதொன்றதாகவே கருதப்படுகின்றது.

ஏனென்றால் தெற்கில் தற்போது நிலவுகின்ற அரசியல் குழப்ப நிலைகளைப் பார்க்கும்போது வடக்குக் கிழக்கில் வாழுகின்ற தமிழர்களின் ஆதரவு நிலையான அரசு ஒன்றை மத்தியில் அமைப்பதற்குத் தேவையாக இருக்கப்போகின்றது. ஆனால் இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஜனாதிபதி எத்தகைய உறுதி மொழிகளைக் கூட்டமைப்பினருக்கு வழங்கினார் என்பது தெரியவரவில்லை. தமிழர்களுக்குச் சார்பாக ஒரு சிறு துரும்பைக்கூட எடுத்துப் போட்டாலும் அதனைப் பெரிதாக்கிக்காட்டி பெரும்பான்மையின மக்கள் மத்தியில் அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தக் காத்திருக்கும் இனவாதிகள் தொடர்பாக ஜனாதிபதி எச்சரிக்கையாக இருந்திருக்கலாம். அல்லது அவர் வழங்கிய உறுதி மொழிகளைக் கூட்டமைப்பினரும் சூழ்நிலையைக்கருத்தில் கொண்டு வெளியிடாமல் இருந்திருக் கலாம்.

எது எவ்வாறு இருப்பினும் ஜனாதிபதிப் பொறுப்பில் மைத்திரி அமர்ந்து ஆறு மாதங்களே ஆகின்றன என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டின் இனப்பிரச்சினை சுமார் 60 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. காலத்துக்குக் காலம் ஆட்சி பீடம் ஏறிய அரசுகள் இனப்பிரச்சினையை ஊதிப்பெருப்பித்ததைத் தவிர அதனைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. சிறு பான்மையின மக்களுக்கு வழங்கப்படுகின்ற உரிமைகள் இன வாதக் கண்ணோட்டத்துடன் பார்க்கப்படுகின்றமையே இதற்கான பிரதான காரணமாகும்.

இந்தச் சின்னஞ்சிறிய தீவிலே இரண்டு மொழிகளைப் பேசுகின்ற மூன்று பிரதான இனங்கள் மட்டுமே வாழ்ந்து வருகின்றன. ஆகவே மொழிப்பிரச்சினை ஏற்படுவதற்கான காரணமே இல்லையென்று கூற முடியும். பல மொழிகளைப் பேசுகின்ற மக்களைக் கொண்டுள்ள இந்தியாவில் மொழிப் பிரச்சினை எமது நாட்டைப் போன்று ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அங்கு மதப்பிரச்சினைதான் இரண்டு பிரதான மதத்தவர்களுக்கிடையில் நிலவி வருகின்றது. மேலும் ஹிந்தி மொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தியாவின் தேசிய கீதம் சிறுபான்மையின மக்கள் பேசுகின்ற மொழிகளில் ஒன்றான வங்காள மொழியிலேயே இசைக்கப்படுகின்றது. ஆனால் சிங்கள மொழியில் இயற்றப்பட்டு இசைக்கப்படுகின்ற எமது நாட்டின் தேசிய கீதத்தை தமிழர்கள் தமது தாய்மொழியிலேயே இசைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் தற்போது அதற்கும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. இந்த நிலையில் இன ஒற்றுமையையும், அமைதியையும் நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

மேலும், இலங்கை ஆட்சியாளர்களுடன் தமிழ்த் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதும், ஏமாற்றப்படுவதும் இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இடம்பெற்று வருகின்றது. இதன் விளைவாகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டனர். ஆனால் பயங்கரவாத நடவடிக்கை என்ற பெயரில் அதுவும் ஒடுக்கப்பட்டு விட்டது.

ஆகவே தமிழ்த் தலைவர்கள் இனி யாவது அரசுத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்போது ஒரு கால எல்லையை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். இதை விடுத்து வெறுமனே பேச்சுவார்த்தை எனக்கூறிக் கொண்டு காலத்தைக் கடத்துவதால் எதுவுமே நடக்கப்போவதில்லை.

**மஹிந்த ஆட்சி மாறியபோது தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட் டமை உண்மைதான். அந்த அளவுக்கு அவர்கள் வெறுத்துப்போன நிலையில் காணப்பட்டனர். இதனை வெளிப்படுத்தும் நிலையில் மைத் திரிக்குத் தமது வாக்குகளை வாரி வழங்கி அவரை ஜனாதிபதிப் பதவி யிலும் அமர்த்தி வைத்தனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர். கந்தையா குருபரன்
பெண் நோயியல் மகப்பேற்றியல் நிபுணர்
யாழ். போதனா வைத்தியசாலை, சிரேஷ்ட
விரிவுரையாளர், யாழ்.மருத்துவ பீடம்

# இன்புளுவன்சா சுவாசத் தொற்று நோய் தொடர்பான அறிவுறுத்தல்கள்

இலங்கை சுகாதார அமைச்சின் தகவலின்படி இலங்கையில் கடந்த 3 மாதங்களில் 24 நோயாளிகள் சுவாசத் தொற்று நோய்களால் மரணமடைந்துள்ளார்கள். இவர்களில் 10 பேர் கர்ப்பவதிகள் அல்லது மிகவும் அண்மையில் பிள்ளை பெற்ற தாய்மார் ஆவர்.

பொதுமக்களின் சந்தேகங்களைத் தீர்க்கவும் தேவையற்ற பயங்களைப் போக்கவும் இந்த கட்டுரை வரையப்படுகிறது.

வருடா வருடம் இந்த வகை சுவாச தொற்று நோய்கள் பரவுவது வழமை ஆகும். இதுவும் சாதாரண தடிமன் காய்ச்சல் போன்று பரவும்.

தாக்குதிறன் கூடிய வைரஸ் வகைகள் தொற்றும்போது, மிகக் கடுமையான நோய் அறிகுறிகளும் உயிரிழப்பும் ஏற்படும்.

இலங்கையில் தற்போது இன்புளுவன்சா என்ற வைரஸ் தாக்கத்தால் ஒருவகை சுவாசத் தொற்று நோய் பரவிக்கொண்டு இருக்கிறது.

இது கர்ப்பிணித் தாய்மார், சிறு குழந்தைகள்,முதியோர் மற்றும் நீர்ப்பீடன சக்தி குறைந்தவர்கள் ஆகியோரைத் தாக்கும் போது விளைவுகள் கடுமையாக இருக்கும். இந்த வகை இன்புளுவன்சா வைரஸ்கள் காலத்துக்குக் காலம் தமது பரம்பரை அலகுகளை மாற்றி அமைப்பதால் , நிரந்தர வக்சின்கள் உருவாக்குதல் மருத்துவத்துறைக்கு மிகப் பெரும் சவாலாக உள்ளது.

மேலும் தற்போது கிடைக்கும் வக்சின் வட ஐரோப்பிய நாடுகளுக்கென தயாரிக்கப்பட்டது. அங்குள்ள வைரஸும் இலங்கையில் உள்ள வைரஸும் வேறு வேறானது

எனவே இவ்வகை வச்சின்கள் பாதுகாப்பு அளிக்கும் என்பது முற்று முழுதாக உண்மை அல்ல.

இரண்டு வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகள் மற்றும் கர்ப்ப காலத்தில் இவ்வகை நோய்கள் ஏற்படும்போது அல்லது அறிகுறிகள் காணப்படும்போது உடனடியாக தகுதி வாய்ந்த மருத்துவரிடம் ஆலோசனை பெறவேண்டும்

**கர்ப்ப காலமும்
இன்புளுவன்சா காய்ச்சலும்**

கர்ப்ப காலத்தில் இவ்வகை நோய்கள் ஏற்படும்போது மிகக் கடுமையான விளைவுகள் ஏற்படும்.

இந்த நோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்து சரியான சிகிச்சையை வழங்கினால் உரிய நேரத்தில் தேவையற்ற தாய் –சேய் உயிரிழப்பைத் தடுக்கலாம்.

கர்ப்பிணித் தாய்மாருக்கு இரத்தச் சோகை இதய வருத்தம், முட்டு, சலரோகம் போன்ற நோய்கள் இருந்தால் இந்த நோயின் தாக்கம் மிக அதிகமாக இருக்கும்.

சிலவேளைகளில் இந்நோய் தாக்கிய கர்ப்பவதிகளுக்கு கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம்,வயிற்றில் பிள்ளையின் உயிரிழப்பு, தாய் இறப்பு என்பன ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

**நோயின் அறிகுறிகள்**


சளிக்காய்ச்சல், தடிமன், தொண்டைப் புண், மூக்குச்சளி ,தலையிடி, உடல்நோ என்பன.

**நோயின் அபாய அறிகுறிகள்**

அதி கூடிய காய்ச்சல் , மூச்சு விட முடியாமை, நெஞ்சு நோ, எப்போது மருத்துவ சேவை யை பெற வேண்டும்?

இந்த அறிகுறிகள் ஒருநாளுக்கு மேல் இருந்தால் உடனடியாக மருத்துவரை நாட





வேண்டும்.

இரண்டு நாள்களுக்கு மேல் இருந்தால் கட்டாயம் வைத்தியசாலையில் சேர்க்க வேண்டும். அருகிலுள்ள அரச வைத்திய சாலையை அணுகுதல் பாதுகாப்பானது.

**நோய் தொற்று இருப்பின் என்ன செய்ய வேண்டும் ?**

நோய் தாக்கக் கூடியவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் நோய் அறிகுறிகளை அறிந்து வைத்திருத்தல்.

நோயின் ஆரம்ப அறிகுறிகள் ஏற்படின் உடனடியாக வைத்திய சேவையை நாடுதல்.

இவ்வாறான அறிகுறிகளுடன் இரண்டு வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் இருப்பின் தயவு செய்து உடனடியாக மருத்துவரை அணுகவும்.

எவ்வளவு விரைவாக சிகிச்சை ஆரம்பிக்கப்படு[illegible] அவ்வளவு நன்[illegible]. தாமதிப்பதால் நாம் வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தியவர்கள் ஆவோம்.

**கர்ப்பிணித் தாய்மார் சிறு குழந்தைகள்,முதியோர் மற்றும் நீர்ப்பீடன சக்தி குறைந்தவர்கள் ஆகியோரைத் தாக்கும் போது விளைவுகள் கடுமையாக இருக்கும். இவ்வகை இன்புளுவன்சா வைரஸ்கள் காலத்துக்குக் காலம் தமது பரம்பரை அலகுகளை மாற்றி அமைப்பதால் , நிரந்தர வக்சின்கள் உருவாக்குதல் மருத்துவத்துறைக்கு மிகப் பெரும் சவாலாக உள்ளது.**

நோயின் ஆரம்ப வேளைகளில் மருந்து கொடுக்கப்படும்போது நோயைக் கட்டுப் படுத்துதல் மிக இலகுவானது.

தற்சமயம் சுகாதார அமைச்சினால் அனைத்து பெரிய வைத்தியசாலைகளுக்கும் இன்புளுவன்சா சுவாசத் தொற்று நோய் தொடர்பான விளக்கம் அவசர சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சௌக்கிய மாதுக்கள் ஆகியோர் உங்களுக்கு இன்புளுவன்சா சுவாசத் தொற்று நோய் தொடர்பாக உதவுவார்கள்.

*ஒருவரிடமிருந்து மற்றவருக்கு நோய் தொற்றாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?*

**அனைவரும் நோயின் அறிகுறிகளை தெரிந்து வைத்திருத்தல்**

நோய் அறிகுறி உள்ளவர்கள் பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பாவிப்பதை இயலுமானவரை தவிர்த்தல்.

இலகுவில் தொற்று நோய் ஏற்படக்கூடிய இடங்களை தவிர்த்தல்.

பாடசாலை, சந்தை, ஆலயத் திருவிழா, தேவையில்லாமல் வைத்தியசாலைக்கு வருவதைத் தவிர்த்தல்.

தேவையில்லாமல் குழந்தைகளை வைத்தியசாலைக்கு அழைத்துவருவதைத் தவிர்த்தல், பிறரது முகத்துக்கு நேரே தும்முதலை தவிர்த்தல். தும்மும் போது பறக்கும் சளியில் இக்கிருமிகள் உள்ளன. இவை இலகுவில் பரவும்.

தும்மும்போது குறைந்தது ஆறு அடி விலத்தி இருப்பின் இவ்வாறான சளித்தொற்று தவிர்க்கப்படும்

**தனிநபர் சுகாதார பழக்கங்களை கடைப் பிடித்தல்**

தும்மும்போது கைக்குட்டை பாவித்தல், மூக்கை மூடித் தும்முதல், கையினால் மூடித் தும்முதல்,சிறு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் இன்புளுவன்சா நோய் உள்ளவர்களைப் பராமரிப்பதை தவிர்த்தல்.


சுகாதார சேவையில் உள்ளவர்கள் நோய் பரவாமல் இருக்க எல்லாவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்தல்.

முகத்தை மூடிய முகவாடம் அணிந்தவாறு, நோயாளிகளைப் பராமரித்தல்.

நோயாளிகளைப் பராமரித்த பின் கைகளைச் சவர்க்காரம் பாவித்துக் கழுவுதல்.

சளி துடைக்கப் பாவித்த கைக்குட்டைத் திசுவை உரிய முறையில் அகற்றுதல்.

நோயின் ஆரம்ப அறிகுறிகள் ஏற்படின் உடனடியாக வைத்திய சேவையை நாடுதல். மற்றும் நோய் ஏற்படுவதை தவிர்த்தால் தேவையற்ற உயிரிழப்புக்களை தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களால் எதிர்காலம்

## எண் 4 ராகு

இரு இனம் ஒரு உடல் கொண்ட எண் 4. குண மாற்றம், செயல் மாற்றம், நாடு மாற்றம், மொழி மாற்றம் இவர்களுக்கு அனுபவம். எண் 4 இல் பிறந்த நாள்கள் 4, 13, 22, 31 திகதிகளில் பிறந்தவர்களுக்கு உடையது. புகைக்கு உருவம் இல்லை, மின்சாரத்தைப் பார்க்க முடியாது, காந்த அலைகளையும் பார்க்க இயலாது. இவர்களை சிந்தனை, செயல்கள் அவற்றின் காரணங்கள் மற்றவர் அறிய இயலாது. போக்குவரத்து, தொலைத்தொடர்பு இயக்கங்கள் நவீன விஞ்ஞான வளர்ச்சியின் சாயல் கொண்டவர்கள் எண் 4 இற்கு உரியவர்கள். புகை நிறம் ராசியாக இருக்கும். மாரி, குமாரி போன்ற தெய்வப் பிடிப்பும், வயதான பாட்டியர்கள் உதவியும், மூத்த பாரம்பரியத்தை காட்டும் தோற்றமும் உடையவர்கள். புகைத்தல், குடித்தல், நாடு சுற்றுதல் போன்ற வழியில் வருமானம் உள்ளவர்கள். காதல் இச்சை உடையவர்கள். ஆராய்ச்சியாளர்கள், சூது செய்து காரியம் கைக்கொள்வார்கள். வீரர்கள், மேதைகள், தியாகிகளாகவும் வாழ்வார்கள். கிலேச குணம் அமைதியற்ற சுபாவம், எண் 9, 3 நல்லதைச் செய்யும். எண் 8, 2, 1 தீங்கான எண்கள். கோமேதகம் இரத்தினம், கடினமான பாறை கள் இரசாயனத் தொழிற்சாலைகள் தனக்கு இருப்பிடம். கண்டுபிடிப்புகள், நவீன உலகம், இரவு நேரங்கள் உதவியாகவும், போட்டி, பந்தயங்கள், விளையாட்டு வீரவிருதுகள் இவற்றால் பலன்களும் அடைவார்கள். எண் 6 போன்றவர்களுடன் கூடி வாழ்வார்கள். நவீன காலத்தைப் பயன்படுத்தக் கூடியவர்கள்.



## எண் 6 சுக்கிரன்

பொருள் இல்லாருக்கு இவ்வுலகில்லை, அருள் இல்லாருக்கு அவ்வுலகு இல்லை என்பதற்கு இணங்க பொருளுடைய எண் வங்கி பெட்டக எண் 6 சுக்கிரன் எனப்படும். ஆங்கில திகதிகள் 6, 15, 24 இல் பிறந்தவர்களின் எண் 6. பார் புகழும் பந்தயங்கள், பதவிகள், பட்டங்களை மிக மிக சாதாரணமாகச் சாதிக்கக்கூடியவர்கள். கண் நோய் உள்ளவர்கள். கடின உழைப்பாளிகள் எரிச்சல் படும் வகையில் வளர்ச்சி உடையவர்கள். தங்களுக்கு என்று ஒரு வழியும், அதன் சட்ட திட்டங்களை தாங்களே படைத்துக் கொள்ளக் கூடியவர் களாகவும் இருப்பார்கள். காதல் வாழ்க்கைக்கு காவியம் படைக்கக் கூடியவர்கள். தாய்மைக் குணம், மறக்கக் கூடியதும், மன்னிப்பு அளிப்பவர் களாகவும் தர்மம் இல்லாதவர்களின் அகங்காரம் தன்னிடம் இருக்கும். திறமை இல்லாதவர்களையும் வாழ வைப்பார்கள் இந்த சுக்கிரர்கள். பெருக்கமான வாழ்க்கை உடையவர்கள். நிறைவு உடையவர்கள். கொந்தளிப்பைக் காட்டுவார்கள். வாகனம் வகை வகையாக அனுபவிப்பார்கள். ஆடை அணி மணிகள் உடையவர்கள். கூட்டத் தலைமையின் வருமான வரி வகைகளைக் கணக்கிடுவார்கள். சொல்வாக்கும், செல்வாக்கும் உடையவர்கள். வைத்தியம், புகழ், பணம், வியாபாரம், பங்கு மார்க்கெட், பணப் பெட்டக வசதியுள்ள வங்கிகளில் பதவி வகிப்பார்கள். ஆக்கும் சக்தியும், உற்பத்திச் சக்தியும் உடையவர்கள். சமுதாய தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாக இவர்கள் இருப்பார்கள்.

## எண் 5 புதன்

எண்களின் செல்லப்பிள்ளை என்று கூறக்கூடிய எண் 5 புதன். இளவரசன் என்றும் சொல்லத் தகுதியான எண் 5. ஆங்கில திகதிகள் 5, 14, 23 இல் பிறந்தவர்களின் எண் இது. கம்பீரம் தெளிவு சுத்தம், நண்பன், உதவியாளன், கலை, ஆடல், பாடல் போன்ற செயல் எண். 5 இரு பக்கங்களிலும் தேவதையைப் போல இரு இருக்கைகள் உள்ள எண். தாராளமாக செலவு செய்வார்கள். வியாபாரம் உடைய வர்கள். செல்வந்தர்கள். சுயநலம் உடையவர்கள். இளமையும், அறிவும், புத்திசாலித்தனமும், தனது கௌரவமும் பாராட்டி வாழ்வார்கள். இசைஞானம் உடையவர்கள். கலை அறிவு உடையவர்கள். சாதகமான எண்கள் 5, 6, 1 மக்களது அரசர்கள் மக்களைப் போல வாழ்வார்கள். ஆணைப் போல, வீரம், ஆளுமை, விசுவாசம், வெற்றியும், பெண்ணைப் போல நளினம், வளைந்து போகும் குணம், அச்சம், கலை, கவி ஆற்றல் உடையவர்கள். தூய்மைக்குச் சொந்தக்காரர்கள் ஆவர். எதிரிடையான எண் 9. இரத்தினம் பச்சைகல். பச்சை நிறம் அம்புக் குறியிட்ட சின்னம். தூதுவன் செயல் உள்ளவர்கள். இவர்களின் குழந்தைகள் வெற்றி வாழ்வு உடையவர்கள். தாய், தாய் மாமன், சம்மந்திகள் கூட்டத்துக்கு இனிய மகள். வாகனம் நூதனமாக வைத்திருப்பார்கள்.

# கருத்தரிப்பும் பெண்களும்



குழந்தைப்பேறு என்பது எல்லாத் தம்பதிகளும் விரும்பும் பொதுவான ஒரு விடயம் தான். பலர் இந்த விடயமாக ஆசீர்வதிக்கப்பட்டாலும் சிலருக்கு ச சந்தோஷம் எளிதாகக் கிடைத்துவி தில்லை.. எல்லா விரல்களும் ஒ போல இருப்பதில்லை அல்லவா? போலத்தான் எல்லா தம்பதிகளுச் இந்த விடயம் ஒரே சமயம், தாங் எதிர்பார்ப்பது போல நடந்துவிடும் எ சொல்லிவிட முடியாது.

இன்றும் சரி, அன்றும் சரி... திருமணமான தம்பதிகளுக்கு அவர்களுடைய குடும்பங்கள் கொடுக்கும் அதிகப்படியான அவகாசம் மூன்று மாதங்கள் தான். அதன் பிறகு இன்னும் உண்டாகலையா..? என்கிற கேள்விகளால் அந்தத் தம்பதியை அரித்தெடுக்கத் தொடங்கி விடுகிறார்கள், அவர்களுடைய உறவினர்களும் நண்பர்கள் வட்டமும்.

அதிலும் ஆண் இந்த விடயத்திலிருந்து பெரும்பாலும் தப்பிவிடுவார். அவரிடம் இந்தக் கேள்வி பெரும்பாலும் நேரிடையாகக் கேட்கப்படுவதில்லை. பெண்கள் தான் மொத்தத் தாக்குதலுக்கும் ஆளாகிறார்கள். கொஞ்ச நாள்களிலேயே அவளுக்கு சமூகம் மலடி என்கிற ஒரு பட்டத்தையும் வழங்கிவிடுகிறது.

நாம் முதலில் ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். பெண்களில் மலடு என்கிற ஒரு விடயமே கிடையாது தெரியுமா? தம்பதிகள் இருவரும் சரியானபடி, சரியான நேரத்தில் உறவு வைத்துக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். அல்லது அவர்கள் சரியானபடி சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். அதனால்தான் குழந்தை உண்டாகாமல் இருந்திருக்கலாமே ஒழிய, மலட்டுத் தன்மை என்பது பெண்களில் கிடையாது. திருமணமான தம்பதிகளில் நூறில் இருபது பேருக்குக் குழந்தை பிறப்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இவர்களில் 35–40 வீதம் வரைதான் பெண்கள் காரணமாகிறார்கள். பத்து வருடங்களுக்கு முன் 20– 25 வீதம் வரை தான் ஆண்கள் காரணமாக இருந்தார்கள். ஆனால் இன்று 40 வீதம் வரைக்கும் குழந்தையில்லா பிரச்சினைக்கு ஆண்கள்தான் காரணமாக இருக்கின்றனர். 15- 20 வீதம் வரை பிரச்சினைக்குக் காரணம் யாரென்றே தெரியாமல் போகலாம். இந்த சந்தர்ப்பத்தில் தம்பதிகள் இருவருமே பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு எந்தக் காரணத்தினாலோ குழந்தை பிறக்காமலேயே போகும்.

எது எப்படியோ, திருமணமாகி இரண்டு வருடங்களாகியும் குழந்தை உண்டாகாமல் இருந்தால்தான் தம்பதிகளில் எவருக்கேனும் பிரச்சினை இருக்கமுடியும் என்று எம்மால் சொல்லமுடியும். குறிப்பிட்ட சில மாதங்களுக்குள்ளேயே பிரச்சினை உள்ளது என்றெல்லாம் கண்மூடித்தனமாகச் சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு தம்பதியினருக்கும் அவரவர் சூழல் வேறுபடும். சிலர் முப்பது வயதளவில் திருமணம் முடித்திருக்கலாம். இவர்களுக்கு குழந்தை விடயம் தள்ளிப்போனால் இரண்டு மூன்று வருடம் வரையெல்லாம் காத்திருக்க முடியாது. இது உடனே கவனிக் கப்படவேண்டிய விடயமாகிவிடும்.

சிலருக்கு இருபத்தியிரண்டு, இருபத்து மூன்று வயதிலேயே திருமணமாகலாம். ஆனால் குடும்பத்தாரின் நச்சரிப்பு இந்தத் தம்பதியினருக்கு அதிகமாக இருக்கும். வயது காரணமாக இவர்கள், இன்னும் சில காலம் வரை பொறுத்திருந்து பார்க்கலாம் என்றாலும், குடும்பக் கட்டாயத்தின் பேரில் அவர்கள் உடனே சிகிச்சைக்கு ஆரம்பித்து விட நேரலாம். அதனால் சூழல் என்பது அவரவர்க்கு ஏற்றபடி மாறுபடும். அவரவருடைய குடும்பச்சூழல் மற்றும் தேவைப் படி மருத்துவர்கள் சிகிச்சை ஆரம்பிப்பார்கள். பொதுவாக சிகிச்சைக்குச் செல்லும் குழந்தையில்லாத் தம்பதிகளில், நூறு பேரில் எண்பத்தைந்து சதவீதம் பேர் வரை எந்த விதமான மருந்து மாத்திரை களையும் பயன்படுத்தாமலேயே கருத்தரித்து விடுவார்கள். மீதமுள்ளவர்களுக்குத் தான் மருத்துவர்களது உதவி முழுமையாகத் தேவைப்படும். தம்பதிகளும் தயக்கப்படாமல் தங்கள் பிரச்சினைகளை மனம் விட்டு மருத்துவரிடம் சொல்ல வேண்டும். அதிலும் அவர்கள் கொடுக்கும் தகவல்கள் உண்மையாக இருக்கவேண்டியது அவசியம்.

சிலருக்கு அல்லது தம்பதியர் இருவருக்குமே நடந்தது இரண்டாம் திருமணமாக இருக்கலாம். அவர்களில் கணவர் ஏற்கனவே குழந்தை பெற்றவராக இருந்தாலும் முன்பிருந்த உடல் நிலைபோல அவருக்கு இப்போது இல்லாமல் போகலாம். அதுவும்கூட கருதரிக்காமல் போகக் காரணமாகும் என்பதால், எந்தத் தகவலையும் மறைக்காமல் மருத்துவரிடம் சொல்லிவிட வேண்டும். சில நேரங்களில் குழந்தை இல்லையா என்ற சமூகத்தின் கேள்வி கூடத் தம்பதிகள் மனதில் ஒருவித பாதிப்பு ஏற்படுத்தி, கருத்தரிப்பு உண்டாவதில் பிரச்சினைகள் ஏற்படுத்தலாம்.

சில குடும்பங்களில் கூட்டுக் குடும்பமாக இருப்பார்கள். அதுபோன்ற சூழலில் தம்பதியரின் நெருக்கம் குறைய வாய்ப்புள்ளது. அதனாலும் குழந்தைப்பேறு தள்ளிப் போகலாம். இதுபோன்ற பல காரணங்களினால் உடலளவில் பிரச்னைகள் இல்லாத தம்பதிகளுக்கும் கூட கருத்தரிப்பதில் பிரச்சினைகள் உண்டாகலாம். மருத்துவரிடம் இது பற்றி ஒளிவு மறைவில்லாமல் பேசி பிரச்சினைக்கு உரிய தீர்வு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்பெருமை

**ஒரு** தடவை முல்லா ஒரு குளக்கரை ஒரமாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது வழியில் இருந்த ஒரு கல் தடுக்கி அவர் குளத்தில் விழும் தறுவாயில் அவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு மனிதர் பாய்ந்து வந்து முல் லாவைக் குளத்தில் விழாமல் காப் பாற்றினார். முல்லா அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஆனால் முல்லாவைக் காப்பாற்றிய வரோ சும்மா இருக்கவில்லை. முல் லாவை எந்த இடத்தில் எவருக்கு நடுவே சந்தித்தாலும் 'குளத்தில் விழ இருந்த முல்லாவை நான்தான் காப்பாற்றி னேன்' என்று சொல்லத் தொடங்கி விட்டார். அவருடைய தற்பெருமைப் பேச்சைக் கேட்டுக் கேட்டு முல்லாவுக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது. அவருக்கு தகுந்த நேரத்தில் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று தீர் மானித்தார்.

ஒரு நாள் பழைய குளக்கரைப் பக்கம் சனநடமாட்டம் அதிகமாக இருந்தது. அந்தப் பக்கம் வந்த முல்லா அந்தத் தற்பெருமைக்காரர் குளக்கரையில் எவரோ ஒருவருடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். திடீரென முல்லா குளத்தி னுள் பாய்ந்து விட் டார். முல்லா குளத்தில் விழுந்து விட்டார் என நாலாபுறமிருந்த மக்களிடமிருந்து கூக்குரல்கள் எழுந்தன. பலர் முல் லாவைக் காப்பாற்றுவதற்காக குளத்தில் இறங்கி னர்.

முன்னர் முல்லாவைக் குளத்தில் விழாமல் காப்பாற்றியவரும் அவசர அவசரமாகக் குளத்தில் இறங்கினார். முல்லாவோ எவரைப் பற்றியும் கவலைப்படாமல் குளத்தில் நீச்சலடித்து விளையாடிக் கொண்டிருந்தார். முல்லாவுக்கு நீந்தத் தெரியும் என்ற விடயம் அதுவரை எவருக்கமே தெரியாது.

முல்லா முன்னர் தம்மைக் காப்பாற் றியதாக தற்பெருமை பேசிவரும் மனித ரைச் சுட்டிக் காண்பித்து ' எனது அருமை நண்பரை உங்களுக்கெல்லாம் அறி முகப்படுத்த நினைக்கி றேன். நீந்தத் தெரிந்த என்னை இந்தக் கனவான் ஒரு தடவை நீரில் மூழ்கி விடாமல் காப்பாற்றிப் பேருதவி செய்தார் ' என்றார்.



# தெரிந்து கொள்வோம்

- ஒரு பென்சிலைக் கொண்டு சுமார் 50 கிலோமீற்றர் நீளத்துக்குக் கோடு வரைய முடியும்.
- இலைகளை உதிர்க்காத மர வகை, ஊசியிலை மரங்கள்.
- ஹிட்லர் இளம்வயதில் ஓவியராக இருந்துள்ளார்.
- ஓர் எறும்பு ஆண்டுக்கு சுமார் ஒரு கோடி முட்டைகள் வரை இடும்.
- சில வகையான ஆந்தைகளுக்குத் தலையில் கொம்பு போன்ற தோற்றம் உண்டு.
- தபால்பெட்டிக்குச் சிவப்பு நிறம் பூசும் பழக்கம் முதன்முதலில் 1876 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது.
- செவ்வாய்க் கிரகத்தில் தொடர்ந்து 250 நாள்களுக்கு பகலாகவே இருக்கும்.
- இந்தியாவிலுள்ள பெண் யானைகளுக்குத் தந்தம் கிடையாது.
- ஒளிவிடும் தன்மை கொண்ட உலோகம், சீர்கான்.
- உலககிலுள்ள சிகரங்களில், மூன்றாவது பெரிய சிகரம், கஞ்சன் ஜங்கா.
- செங்குத்தான நிலையிலேயே நீந்திச் செல்லும் ஆற்றல் உள்ள மீன், கடற்குதிரை.
- நிக்கல் உலோகத்தைக் கண்டறிந்தவர் கிரான்ஸ்டட்.
- மனிதனைப் போலவே நடக்கக் கூடிய பறவை, பென்குவின்.
- புறாப் பந்தயம் தோன்றிய இடம், பெல்ஜியம்.



# வர்ணம் தீட்டலாம் வாங்க





# மைனா

மைனாக்கள் 'ஸ்ட்டேண்டிடே' குடும்பத்துள் அடங்குபவை. பசரீன் பறவைகள் குழுவைச் சேர்ந்த இவை, இயற்கையாகக் கிழக்காசியாவில் மட்டுமே வாழ்கின்றன, எனினும் இவற்றின் பல வகைகள், வட அமெரிக்காவுக்கும், சாதாரண மைனா இனம் தென்கிழக்கு ஆஸ்தி ரேலியாவுக்கும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மைனாக்கள் வலுவான பாதங்களைக் கொண்ட, நடுத்தர அளவிலான பசரீன்களாகும். இவற்றின் பறப்பு வலுவானதும், நேரானதுமாகும். இவை கூட்டமாக வாழ்பவை. இவை விரும்பும் வாழிடம் ஓரளவு திறந்த வெளிகளாகும். இவை பூச்சிகளையும், பழங்களையும் உண்ணுகின்றன. இவற்றில் பல வகைகள் மனித வாழிடங்களுக்கருகில் வசிப்பதுடன், எல்லாவகை உணவு களையும் உண்ணக்கூடியவை. உடல் நிறம் பொதுவாகக் கருமையானது, பெரும்பாலானவை மண்ணிறம் கொண்டவை. சில வகைகள் மஞ்சள் நிறத்திலான தலை அலங் காரங்களைக் கொண்டுள்ளன.பெரும்பாலான வகைகள் பொந்துகளிலேயே கூடு கட்டுகின்றன.

# தங்க நாணயம்



ஒரு கிராமத்தில் ஓர் அறிஞர் இருந்தார். அவர் ஒரு பொருளாதார மேதை. பல மன்னர்கள் தங்களது நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்படுத்த அவரது ஆலோசனையை நாடினர்.

ஒரு நாள் ஊர்த் தலைவர் அவர் முன் வந்து அவரைப் பார்த்துக் கிண்டலாக, 'அறிஞரே! நீங்கள் பெரிய அறிஞர் என்று உலகமே பாராட்டுகிறது. ஆனால் உங்கள் பையன் ஒரு அடி முட்டாளாக இருக்கிறானே! தங்கம், வெள்ளி இவற்றுள் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது என்று அவனைக் கேட்டால் அவன் வெள்ளி என்று சொல்கிறான். வெட்கக்கேடு!' என்றார். அறிஞர் மிக வருத்தமடைந்தார். பையனை அழைத்தார். 'தங்கம், வெள்ளி ஆகிய இரண்டில் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது?' என்று கேட்டார். பையன் 'தங்கம்' என்று சொன்னான். 'பின்னர் ஏன் ஊர்த் தலைவர் கேட்கும்போது வெள்ளி என்று சொன்னாய்?' என்று கோபத்துடன் கேட்டார் அறிஞர்.


'தினமும் நான் பாடசாலை செல்லும்போது அவர் ஒரு கையில் தங்க நாணயமும், மறு கையில் வெள்ளி நாணயமும் வைத்துக் கொண்டு என்னை 'அறிஞரின் மகனே' என அழைத்து 'இவ்விரண்டில் மதிப்பு வாய்ந்ததை நீ எடுத்துக் கொள்' என்பார். நான் உடனே வெள்ளியை எடுத்துக் கொ[illegible] அவரும் சுற்றி இருப்பவர்களும் சிரித்துக் கி[illegible]டன் போய் விடுவேன். இது ஓராண்டாக நடக்கிறது. தினம் எனக்கு ஒரு வெள்ளி நாணயம் கிடைக்கிறது. நான் தங்கம் என்று சொல்லி தங்க நாணயத்தை எடுத்திருந்தால், அன்றோடு இந்த விளையாட்டு நின்றிருக்கும், எனக்கு நாணயம் கிடைப்பதும் நின்று போயிருக்கும். எனவே தான் அவ்வாறு செய் தேன் என்று விளக்கம் சொன்ன மகனைப் பார்த்து,அறிஞர்திகைத் தார்! வாழ்க்கையில் பல நேரங்களில் நாம் முட்டாள்களாக வேடம் புனைய வேண்டியி ருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துனீசியாவில் மீண்டும் தாக்குதல் நடக்கும் அபாயம்

## பிரிட்டன் எச்சரிக்கை



லண்டன்,ஜூன் 30
துனீசியாவில், சுற்றுலா மையங்கள் மீது இஸ்லாமியவாதத் தீவிரவாதிகள் மேலும் தாக்குதல்களை மேற் கொள்ளலாம் என்று பிரிட்டன் எச்சரித்துள்ளது.
இந்தத் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து கடந்த சனிக்கிழமையன்று ஊர்வலம் நடத்தப்பட்டது.
சமூக வலைத்தளங்கள் மூலமாக தீவிரவாதக் குழுக்களால் ஈர்க்கப்பட்ட தனிநபர்கள் மூலம், தாக்குதல்கள் மேற்கொள்ளப்படக் கூடும் என பிரிட்டன் வெளிவிவகாரச் செய லகம் தெரிவித்துள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை, துனீசியாவின் சூஸில் உள்ள கடற்கரையில் தனியாக வந்த துப்பாக்கிதாரி ஒருவர், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் உயிரிழந்த 38 பேரில், குறைந்தது 15 பேர் பிரிட்டன் பிரஜைகளாவர். இந்தத் தாக்குதலுக் குக் கண்டனம் தெரிவித்து நூற்றுக்கணக்கானவர்கள் ஊர் வலம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புருண்டி பொதுத் தேர்தலை பாதுகாப்பான சூழலில் நடத்துக

## பான் கீ - மூன் அறிவிப்பு

புஜும்புரா, ஜூன் 30
புருண்டியில் நடைபெற்று வரும் நாடாளுமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களை பாதுகாப்பான சூழ்நிலையில் நடத்த வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ – மூன் கோரிக்கை விடுத்துள்ளார்.
கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியில், ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிஸா பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் 3 ஆவது தடவையாக அவர் போட்டியி டுகிறார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு போராட்டம் நடை பெறுகிறது. இதற்கிடையே ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிஸா, தான் சானியா நாட்டில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்கச் சென்றபோது அங்கு திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டது. இந்தப்புரட்சியை ஜனாதிபதி பியார்ரேவுக்கு எதிராகச் செயற்படும் தளபதி கோட் பிராய்டு நியோம்பர் நடத்தினார். ஆனால் அரச விசுவாச இராணுவப் படைகள் புரட்சியை முறியடித்துவிட்டன. இதனை அடுத்து திட்டமிட்டப் படி தேர்தல் நடைபெறும் எனக் கூறப்பட்டது.
இதனை எதிர்த்து பொது மக்களும், மாணவர்களும் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இதுவரை வன்முறைச் சம்பவங்களில் 70 பேர் உயி ரிழந்துள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் அயல் நாடுகளுக்கு அகதி களாகச் செல்கிறார்கள். அங்கு நடைபெறும் வன்முறை சம்பவங்களால் தேர்தலை தள்ளி வைக்கும் படி ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ –மூன் உட்பட பலர் கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால் ஜனாதிபதி பியார்ரே நகு ருன்ஜிஸா அதை நிராகரித்து விட்டார்.
இந்த நிலையில், ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ –மூன் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாட்டில் நிலவும் பதற்றமான சூழ் நிலையை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் தேர்தல் நடத்தப்படவிருப்பது கவலை அளிக்கிறது. எனினும் குறைந்த பட்சம் தேர்தலை பாதுகாப்பான சூழ்நிலையில் நடத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.
இந்த இரண்டு தேர்தல்களையும் புறக்கணிப்பதாக 15 எதிர்க்கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில், ஓரினச் சேர்க்கைக்கு ஆதரவான 13 ஆவது பேரணி ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன்போது வன்முறை ஏற்பட்டதால் தண்ணீர் மற்றும் கண்ணீர் புகைகள் மூலம் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் விரட்டியடித்தனர். (ஐ)

# போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு போதுமான மருத்துவ வசதி கிடைப்பதில்லை

## ஐ.நா.சபை தெரிவிப்பு


ஜெனிவா,ஜூன் 30
உலகளவில் போதைப் பொருள்களின் பயன்பாட்டுக்கு அடிமையானவர்களில், ஆறு பேரில் ஒருவருக்கு மட்டுமே மருத்துவ வசதி கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் பயன்பாடு மற்றும் குற்றச் செயல்கள் தடுப்பு தொடர்பான அலுவலகம் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
போதைப் பொருள்களைப் பயன்படுத்தும் பெண்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்வதில் பலதடைகளை எதிர்நோக்குகிறார்கள்என்றும்– அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
உலகளவில் போதைப் பொருள்கள் பயன்படுத்தும் மூவரில் ஒருவர் பெண்ணாக இருக்கிறார் என்றும், அவர்களிலும் மருத்துவ வசதி பெற்றுக்கொள்ளக் கூடியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது என்றும் –ஐ.நா. அறிக்கை கூறுகிறது.
இதுமட்டுமன்றி ஆப்கானிஸ் தானில் ஓபியம் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், உலகளவில் கொக்கோ இலை பயிரிடப்படுவது குறைந்துள்ளது என்றும் –அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அணுசக்தி பேச்சு நீடிக்கும்




வியட்நாம்,ஜூன் 30
ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்துக்கான பேச்சு, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவையும்தாண்டிநீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வியட்நாமில் அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பேச்சு கடந்த வாரம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில்பெரிய கருத்துவேறுபாடுகள் இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதாகவும், பேச்சுக்கள் எதிர்வரும் ஜூலைமாதம் தொடக்கக் காலப் பகுதி வரை நீடிக்கும் என இருதரப்பும் தெரிவித்துள்ளன.
ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜாவத் ஜரிப், பேச்சை எப்படி மேற்கொண்டு எடுத்துச் செல்வது என்பது குறித்த ஆலோசனையை நாடு திரும்பியவுடன் அறிவிப்பார் என தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# மும்பைப் பெண் கள் துணிச்சலானவர்கள்



புதுடில்லி,ஜூன் 30
இந்தியாவிலேயே மும்பையில் வசிக்கும் பெண்கள்தான் துணிச்சலானவர்கள் என்று புதிய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.
மும்பைப் பெண்கள் தனித்து நின்று எதையும் சாதிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் என்று அந்தப் புதிய கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள பெண்கள் எல்லா நேரங்களிலும் தனியாக வெளியே சென்று வருகின்றனர். அவர்கள் அத... த் தக்கபடி தங்களை வலுப் படு... க் கொள்கிறார்கள். எந்தப் பிர... னை என்றாலும் தைரியம... அதை எதிர்கொள்கிறார்கள். இந்... ாவின் பலபகுதிகளில் இருந்து புதி... க மும்பைக்கு வரும் பெண்கள், அவர்களைப் பார்த்து தங்களை ... பலப்படுத்திக்கொள்கிறார்கள். குடு... பவாழ்க்கை, தொழில் ... இரண்டுக்கும் இடையே ... தியாசத்தை மும்பைப் பெண்கள் நன்றாகவே உணர்ந்துள்ளனர் என்று அந்தக் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துனீசியா கடற்கரையில் தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு ஏராளமானோர் மலர்வளையம் வைத்தும் மெழுகுவர்த்தி ஏற்றியும் தங்களது அஞ்சலியைச் செலுத்தினர். மேலும் சிலர் தாக்குதலின்போது உயிரிழந்தவர்களின் நினைவாக கடற்கரையில் ஊர்வலமாகச் சென்றனர். முன்னதாக சில சுற்றுலாப் பயணிகள் தாக்குதல் நடைபெற்ற இடத்தில் செல்பி எடுத்து அந்தப் புகைப்படங்களை சமூகவலைத் தளங்களில் பதிவேற்றியுள்ளன. (ஐ)

# வடகொரியா ஜனாதிபதியை விமர்சிக்கும் ஊடகங்கள்



பியாங்யாங்,ஜூன் 30

வட கொரியாவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையத்துக்குப் பெருந்தொகை நிதியைச் செலவிட்டதற்குப் பதிலாக அந்த நாட்டு மக்களின் வறுமையைப் போக்கும் நடவடிக்கையில் செலவிட்டிருக்கலாம் என சர்வதேச ஊடகங்கள் வட கொரிய ஜனாதிபதியை விமர்சித்து வருகின்றன.

வட கொரியாவில் சர்வதேச விமான நிலையம் அமைக்கும் பணிகள் கடந்த சில வருடங்களாக நடைப்பெற்று, அண்மையில் அந்தப் பணிகள் முழுவதும் நிறைவடைந்துள்ளன. பல மில்லியன் டொலர்கள் செலவில் கட்டப்பட்டுள்ள அந்த விமான நிலையத்துக்கு அந்த நாட்டின் சர்வாதிகார ஜனாதிபதியான கிம்–யாங்–அன், அவருடைய மனைவி ரி–சோல்–யூ மற்றும் முக்கிய அதிகாரிகள் சென்றிருந்தனர்.

கட்டுமானப்பணிகளால் திருப்தி அடைந்த ஜனாதிபதி, விமான நிலையத்தை நாளை தாம் திறந்து வைக்க உள்ளதாக அந்த நாட்டின் ஊடகங்களுக்குப் பேட்டி அளித்துள்ளார்.

இரண்டு அடுக்கு மாடிகள் கொண்ட அந்த விமான நிலையத்தில், நகைக் கடைகள், சொக்லேட் நீரூற்று, பல் பொருள் அங்காடிகள் என சர்வதேச விமா[illegible]களில் உள்ள முக்கிய [illegible]திகள் ஏற்படுத்[illegible] [illegible]படவுள்ள இந்த விமானநிலையத்தைபற்றிசர்வதேச ஊடகங்கள் எதிர்மறையானகருத்துக்களையே வெளி யிட்டு வருகின்றன.

கடந்த 1994–1998 ஆம் ஆண்டுகளில் வட கொரியா வரலாறு காணாத பஞ்சத்தை சந்தித்தது. பஞ்சத்தில் போதிய உணவின்றி தவித்த ஆயிரக்கணக்கான மக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

வட கொரியநாடுஇன்னமும்உணவுப் பஞ்சத்தில் தவித்து வரும் நிலையில், சொகுசான விமான நிலையம் தேவையா என சர்வதேச ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துள் ளன.

ஐ.நா. சபை அண்மையில் வெளியிட்ட புள்ளி விவரத்தில், வருடத்துக்கு சுமார் 2 மில்லியன் வட கொரிய மக்கள் ஐ.நாவிடம் உணவு உதவி வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ளது.

மேலும், வட கொரியாவில் வருடத்துக்குசுமார் 20சதவிகிததாய்மார்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு போதிய ஊட்டச்சத்து உணவுகள் கிடைக்கவில்லைஎன்றஅதிர்ச்சி தகவலையும் ஐ.நா. சபை வெளியிட்டது.

–இவ்வாறு குடிமக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கையை எடுக்காமல், தனது அரசை உலக நாடுகள் முன் னிலையில் பெருமைப்படுத்தும் விதமாக சொகுசு விமான நிலையத்தை அமைத்துள்ளமை [illegible]யற்றது – என ஊடகங்கள் விமர்சித்துள்ளன. (ஐ)

# கடன் சுமையில் கிரீஸ் நாடு

ஏதன்ஸ்,ஜூன் 30

கடன்சுமையால்மிகவும்பாதிக்கப்பட்டுள்ள கிரீஸ் நாடு, நாட்டின் அனைத்து வங்கிகளையும் மூடுவதற்கு அதிரடியாக உத்தர விட்டுள்ளது.

கிரீஸ் நாடு கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ளதால் 1.6 பில்லியன் யூரோவை சர்வதேச நாணய நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இந்த நிலையில் கடனைச் செலுத்துவதற்கு கூடுதல்அவகாசம் கேட்டிருந்ததாகக்கூறப்படுகிறது. ஆனால்அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அதனால் கிரீஸ் நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் அந்த நாட்டில் உள்ள வங்கிகள் அனைத்தும் மூடப்படவுள்ளதாக என்று அந்த நாட்டின் பிரதமர் தெரிவித் துள்ளார்.




மேலும் ஏ.ரி.எம்மில் இருந்து பணம் எடுப்பதற்கும் கட்டுபாடு விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு வங்கிக் கணக்கில் இருந்து நாள் ஒன்றுக்கு 42 யூரோ மட்டுமே எடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்கு வர்த்தகமும் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இன்னமும் சில நாள்களில் நாட்டின் சகல வங்கிகளும் மூடப் படும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் தமது கணக்கிலுள்ள பணத்தை மீளப்பெறுவதற்காக ஏராளமானோர் ஏ.ரி.எம் முன் வரிசையாககாத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இன்று ஒரு வினாடி அதிகம்; நாஸா தகவல் வெளியீடு

வொஷிங்டன்,ஜூன் 30

இன்று செவ்வாய்க்கிழமை ஒரு வினாடி அதிகமாக இருக்கும் என்று நாஸா தகவல் வெளியிட் டுள்ளது. [illegible] வெளி [illegible] பூமி, சூரியன், பால்வெளி அண்டம் ஆகியவை தொடர்பாக, ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் பூமி தன்னைத் தானே ஒருமுறை சுற்றிக் கொள்வதற்கு 86 ஆயிரத்து 400 வினாடிகளை எடுத்துகொள்கிறது. இன்று பூமியின் சுழல் வேகம் குறைவதால், இன்றைய கால அளவு, ஒரு வினாடி அதிகமாக இருக்கும்.

அதாவது,சர்வதேச ஒருங்கிணைப்பு நேரத்தில் 23:59:59 மணிக்கு பின்னர் 00:00:00 என மறுநாள் தொடங்கிவிடும்.ஆனால்,இன்றுநேரம் 23:59:59 இதிலிருந்து 23:59:60 இற்கு மாறும். அதன் பின்னரே 00:00:00எனமறுநாள்தொடங்கும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடலுணவு ஏற்றுமதி பெரு வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 30
இலங்கையின் கடலுணவு ஏற்றுமதி கடந்த ஏப்ரல் மாதத்தில், 41.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக, மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.
2014 ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இலங்கையின் கடலுணவு ஏற்றுமதி வீழ்ச்சி கண்டு வருகிறது.
கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையின் கடலுணவு ஏற்றுமதி, 41.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.
கடந்த ஆண்டு ஏப்ரலில் 23.9 மில்லியன் டொலருக்குக் கடலுணவு ஏற்றுமதி செய்த இலங்கை, இந்த ஆண்டில், 14.1 மில்லியன் டொலர் கடலுணவு ஏற்றுமதி வருவாயையே பெற்றுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான கடலுணவு ஏற்றுமதி, 68.3 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.
இலங்கையில் இருந்து கடலுணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடை, கடந்த ஜனவரி 13ஆம் திகதியில் இருந்து நடைமுறையில் இருந்து வருகிறது.
2013ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு 74 மில்லியன் டொலருக்கு கடலுணவுப் பொருள்களை இலங்கை ஏற்றுமதி செய்திருந்தது.
ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையினால் இலங்கை சுமார் 100 மில்லியன் டொலர் ஏற்றுமதி வாய்ப்பை இழந்துள்ளது. (த)

# தேர்தல் கண்காணிப்பில் நிபுணர்கள்

கொழும்பு, ஜூன் 30
திறைமை வாய்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்களை நாடளாவிய ரீதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தவுள்ளதாக தேசிய தேர்தல்கள் கண்காணிப்புமத்திய நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ரசங்க ஹரிச்சந்திர தெரிவித்தார்.
எதிர்வரும் பொதுத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 25,000ற்கும் அதிகமான கண்காணிப்பாளர்களை நியமிப்பதற்குத் தேர்தல்கள் கண்காணிப்புக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.
அதற்கமைய 15,000 கண்காணிப்பாளர்களைத் தாம் நியமிக்கவுள்ளதாகப் பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.
10,000 கண்காணிப்பாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கபே அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார். (த)

## துயர் பகிர்கின்றோம்

### ஐயாத்துரை வரதராஜா

யா/புனித ஹென்றியரசர் கல்லூரியில் தகவல் தொழில்நுட்ப பாட ஆசிரியராக கடைமையாற்றும் எம் சக ஆசிரியர் **வ.வித்தியாதரனின்** பாசமிகு தந்தை **ஐயாத்துரை வரதராஜா** அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச்சமூகம்
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை.

(61455)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு நடராசா



தோற்றம் 23 * 06 * 1928

மறைவு 27 * 06 * 2015

குளவிசுட்டான், நெடுங்கேணியைப்பிறப்பிடமாகவும் இல.131/2 பண்டாரிக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராசா 2015.06.27 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு தங்கம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் பரமலிங்கம், யோகேஸ்வரி, பவளமணி, சந்திராவதி, இராசலட்சுமி, சிவலிங்கம் (அதிபர், வ/குளவிசுட்டான் அ.த.க பாடசாலை), இராசலிங்கம், கணேசலிங்கம், அமுதலிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜானகி (ஆசிரியர், வ/கந்தபுரம் வாணி வித்தியாலயம்), செல்வநாயகம், யோகராசா, சந்திரகுமார், கருணாகரன், உதயராணி(நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனியா), வசந்தி(ஆசிரியர், வ/கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம்), சுதா, அகலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2015) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தட்சணாங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
மகன் சிவலிங்கம்
077 114 3459
024 222 5588

இல.131/2 பண்டாரிக்குளம்,
வவுனியா.

(61107)

# 31 ஆம் நாள் நினைவுதினமும் நன்றி செலுத்தும் வழிபாடும்

## திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி

(ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)



மலர்வு 30.01.1956

உதிர்வு 31.05.2015

இறைபதம் அடைந்த திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடும் 2015.07.01 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் வழிபாட்டிலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத்தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையாகக்கேட்டுக்கொள்கிறோம்

மேலும் அன்னாருக்கு வைத்திய சிகிச்சை அளித்த புற்றுநோய்ப்பிரிவு வைத்தியநிபுணர்கள், வைத்திய கலாநிதிகள், தாதிமார்கள், ஊழியர்கள் சுகவீனமுற்று இருந்தபோது ஜெபத்தினில் தாங்கிய குருமார்கள், சபை ஊழியர்கள், மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நல்லடக்க ஆராதனை நடத்திய குருமார்கள், சபை ஊழியர்கள் ஏனைய வழிகளில் உதவியவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

“சேவை”
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

ம.குட்டித்தம்பி(கணவர்) 077 773 4698
அன்பழகன்(சகோதரன்) இரஞ்சினி(மைத்துனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலையில் மஹிந்த போட்டியிடுவது உறுதி

## அடித்துச் சொல்கிறார் வாசுதேவ

கொழும்பு, ஜூன் 30

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது உறுதி என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் ,

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்தாலும் அவர் யாரிடமும் அடிபணியவில்லை. அவர் பின்னால் உள்ள நாங்களும் யாருக்கும் அடிபணியவில்லை. மஹிந்த ராஜபக்ஷ எங்கள் தலைவர் என்ற நிலையில் இந்த நாட்டில் உள்ள மக்கள் அவரை பிரதமராக்க ஒன்று கூடியுள்ளனர்.

சுதந்திரக் கட்சியில் போட்டியிடுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமா என மக்களில் சிலருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் ஆலோசகராக உள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு எவ்வாறு இந்தச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகும்?

இதனாலேயே அவருக்கு வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடச் சந்தர்ப்பம் கிடைப்பது உறுதி – என்றார். (த–ரி)

# குற்றங்களை மறைக்க துடிக்கின்றார் மஹிந்த

## சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 30

நாட்டில் அரசியல் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிக்கொள்வதற்கு முயற்சிப்பது தங்களால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகளை மறைத்துக்கொள்வதற்கே என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தனது பிறந்த நாளான நேற்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டி விகாரைக்குச் சென்று மத வழிப்பாடுகளில் கலந்து கொண்டுள்ளார். அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

கடந்த ஆட்சியின்போது இடம்பெற்ற ஊழல் மோசடிகளை மறைத்து கொள்வதற்காகவே மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளச் சிலர் முயற்சிக்கின்றனர் என்று கூறினார்.

இதேவேளை, நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தன்னுடைய முழு ஆதரவை யும் வழங்குவ தாக அவர் மேலும் குறிப்பிட்டார். (த)


**தவறிவிட்டது**

சங்குவேலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த செல்வகுமார் ஜதீஸ்குமார் என்பவருடைய தே.அ.அட்டை (901063508V) , சாரதி அனுமதிப்பத்திரம் என்பன உரும்பிராய்க்கும் மருதனார் மடத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 571 9280
076 683 4501



**அறிவித்தல்**

குருநகர் சந்தையில் அமைந்துள்ள கட்டடத்தொகுதியில் இல 13இல் இயங்கிவரும் **சசி எலக்ரிக்கல்ஸ்** ஆகிய (மின் உபகரணம் திருத்துநர்) எம்மிடம் பழுதுபார்ப்பதற்காக தந்த மின் உபகரணங்களை ஒரு கிழமைக்குள் (08.07.2015) மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(61458) **உரிமையாளர்.**


# தேர்தலில் யாரையும் ஆதரிக்க மாட்டேன்

## சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தான் யாருக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை என்று மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் கட்சிகள் எவ்வாறு தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன என்பது தொடர்பில் பலர் உன்னிப்பாக அவதானித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தான் கொள்கைக்காக மாத்திரம் செயற்படுவதாகவும், எந்த ஒரு அரசியல் கட்சிக்காகவும் செயற்படவில்லை எனவும் தெரிவித்த சோபித தேரர், பொதுத் தேர்தலின்போது யாருக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார். (த)

# மைத்திரியுடன் அநுர, சுசில் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 30

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

இதில் தேர்தல் குறித்தே ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது. (த)

## ரூபா 50 இலட்சம் கப்பம் கோரியவர் கைது

கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், குழந்தையை கடத்தபோவதாக தொலைபேசியில் அச்சுறுத்தி 50 இலட்சம் ரூபாவைக் கப்பமாக கோரிய சந்தேகநபர் ஒருவரை நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளதாக மிரிஹான விசேட குற்ற நடவடிக்கைப்பிரிவு அறிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள 39வயதான சந்தேகநபர் மொரத்தொட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் அவர், ஆள்களை அச்சுறுத்திக் கப்பம் கேட்டமை தொடர்பிலான பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்திய போது அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரையிலும் விளக்க [illegible] ...ரார்.


**JAFFNA SOCIAL ACTION CENTER**

**VACANCY FOR THE POST OF ACCOUNTANT**

Jaffna Social Action Center is a Sri Lankan non-governmental organization providing services throughout the Northern Province. Applications are invited for the post of Accountant from the suitable candidates with the following qualifications.

**Requirements**

- The person should have a degree or diploma in Finance Accounting
- Excellent interpersonal & liaison skills with excellent written and spoken English
- At least 3 years experience in an accounting role, preferably with NGO's.
- Good analytical skills & expert knowledge of MS Office as well as experience with accounting packages
- Able to work in a multicultural setting & able to deal with multiple donor accounting systems
- Willing and able to travel to all parts of the country (essential)

**Applicants:**

Interested candidates are invited to submit their CV with a covering letter and two non-related referees to reach us no later than the 10th of July 2015, to the following address: **Co-ordinator, Jaffna Social Action Center, 18/1, Kailasapillaiyarkovil Road, Nallur, Jaffna.**

Only the short listed candidates will be contacted. Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal [illegible] JSAC also [illegible] applications from women.


# மேல் மாகாண முதலமைச்சர் உடன் பதவி விலகவேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் சபையில் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 30

ஒரு வைத்தியசாலை நிர்வாகத்தைக் கூட ஒழுங்கான முறையில் கொண்டு நடத்தமுடியாத வங்குரோத்து நிலைமையில் மேல் மாகாணசபை இருப்பதாகக் குற்றம் சுமத்திய மேல்மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இதனால் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க உடனடியாக பதவி விலகவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நீர்கொழும்பு வைத்தியசாலை யில் நிலவிவரும் குழப்ப நிலைமை கள் காரணமாக அதன் நிர்வாகத்தை மத்திய அரசின் கீழ் கொண்டு வர வேண்டும் என அங்குள்ள மக்கள் தெரிவித்துவருகின்றனர். இதனை மாகாண சபையிடமிருந்து மத்திய அரசுக்கு வழங்குவது குறித்து கடந்த புதனன்று இடம்பெற்ற மாகாண சபை அமர்வில் மாகாண அமைச்சர் நிமல் லான்ஸா பிரேரணையொன்றை முன்வைத்தார். இது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கொழும்பு பிரதான அமைப்பாளரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைக் குறைக்கும் இந்தப் பிரேரணைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்ட முஜிபுர் ரஹ்மான், கடந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின்போது மாகாண சபையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. மாகாண சபையின் கீழ் இல்லாமல் செய்யப்பட்டு அது நாடாளுமன்றத் தின் அதிகாரத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அத்துடன், மாகாண சபைக்கு சொந்தமான பல காணிகள் புனித பூமி திட்டத்தினூடாக மத்திய அரசின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதே வேளை, மாகாண சபைக்கு வருவாயை ஈட்டிக்கொடுக்கும் வாராந்த பொதுச் சந்தை திவிநெகும திட்டத்தினூடாகக் கைப்பற்றப்பட்டது. மஹிந்த ஆட்சியில் இவ்வாறு பல அதிகாரங்கள் மத்திய அரசின்கீழ் கொண்டுவரப்பட்டன. இந்த வேலைத் திட்டத்தை மைத்திரி அரசின் கீழும் தொடர்வதற்கு நிமல் லான்ஸா முயற்சிக் கின்றார். இதனை அனுமதிக்க முடியாது" என்று வாதிட்டார்.

மாகாண சபையானது அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டின் இன விரிசலைத் தடுப்பதற்காகவே கொண்டுவரப்பட்டது. பல தலைவர்கள் உயிர்த்தியாகங்களைச் செய்தே நாட்டில் மாகாண சபையை உருவாக்கினார்கள். ஆகவே, இதனை நாம் பாதுகாக்கவேண்டும். மாகாண சபைக்கு இருக்கும் அதிகாரங்களை மத்திய அரசுக்கு வழங்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

நீர்கொழும்பிலுள்ள வைத்தியசாலையின் 7 மாடிக்கட்டடம் தொடர் பாக முதலமைச்சர் பிரசன்ன ரண துங்க தலைமையிலான மேல் மாகாண சபையால் நடவடிக்கை எடுக்கமுடியாததனாலேயே மக்கள், அதனை மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறுகின்றனர்.

பிரசன்னவால் மக்களின் கோரிக்கைகளையும், மாகாண சபைக்கு உரித்தான வேலைகளையும், நிர்வாகங்களையும் சரியான முறையில் நிர்வகிக்க முடியாமையால் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும். உங்களின் இயலாமையின் காரணமாக ஆட்சிப்பொறுப்பை எதிர்க் கட்சியிடம் ஒப்படைக்குமாறு முஜிபுர் ரஹ்மான் சபையில் கோரிக்கை விடுத்தார்.

நீர்கொழும்பு வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட வைத்திய சாலையின் 7 மாடிக்கட்டடம் கட்டப்பட்டு 10 வருடங்கள் பூர்த்தியடையாத நிலையில் அது இடிந்து விழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. இதனை நிர்மாணிப்பதில் ஊழல் இடம்பெற்றிருப்பதனாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும். அதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அமைச்சர் நிமல் லான்ஸா ஊழல்காரர்களைப் பாதுகாப்பதற்கு முயற்சிக்கின்றார். எனவே, மக்களின் பாதுகாப்பு உடனடியாக உறுதிசெய்யப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. உடனடித் தேவைக்கு மத்திய அரசின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். என்றாலும் மாகாண சபைக்கு இருக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு தாரை வார்க்க இடமளிக்கமுடியாது எனவும் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டினார். (த)

# நிர்வாக சேவை அலுவலருக்கு நாளை முதல் விசேட படிகள்

அச்சுவேலி, ஜூன் 30

அரச சேவையில் உள்ள நிர்வாக சேவை தரநிலை மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதியில் இருந்து சேவைக் காலத்துக்கு ஏற்ப 3ஆயிரம் ரூபா தொடக்கம் 15ஆயிரம் ரூபா வரையிலான விசேட படி வழங்கப் படவுள்ளது.

அமைச்சரவையின் கடந்த 17ஆம் திகதி தீர்மானத்துக்கு அமைய பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் 26.06.2015 ஆம் திகதி 18/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் விசேட படி வழங்கல் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த விசேட படி தொடர்பான விவரம் வருமாறு:

6 வருடங்களுக்கு உட்பட்ட சேவை உடையவர்களுக்கு 3ஆயிரம் ரூபா

6முதல் 11 வருட சேவை உள்ளவர்களுக்கு 5ஆயிரம் ரூபா –

11முதல் 19 வருட சேவையில் தரம் 1 பதவியில் உள்ளவர்களுக்கு 10ஆயிரம் ரூபா –

19 வருடங்களுக்கு மேல் சேவையில் உள் தரம் 1 பதவியில் உள்ளவர்களுக்கு 15ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. (த–11)

# ஐ.தே.க மாநாடு ஜூலை 11 இல்

பொதுத் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு, கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு கெம் பல் பார்க் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய செயற்பாட்டாளர்கள், மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் நாடு முழுவதுமுள்ள கட்சி ஆதரவாளர்கள் எனப் பெருந் திரளானோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பொதுத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்தும் வெற்றிக் [illegible] மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு இதன்போது [illegible] வழங்கப்பட [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அமைதிச் சுட்டியில் பின் தங்கியது இலங்கை

கொழும்பு, ஜூன் 30
உலக அமைதிச் சுட்டியில் சிறிலங்காவுக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்கான உலக அமைதிச் சுட்டியில், இலங்கை 114ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.
ஆஸ்ரேலியாவை தளமாக கொண்ட, பொருளாதார மற்றும் அமைதிக்கான நிறுவகம் ஆண்டுதோறும் உலக அமைதிச் சுட்டி என்ற பட்டியலை வெளியிட்டு வருகிறது.
162 நாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், 2015 ஆம் ஆண்டுக்கான உலக அமைதிச் சுட்டி தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
இதற்கமைய இலங்கை 114ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.
2014ஆம் ஆண்டில் இலங்கை 105ஆவது இடத்தில் நிலைப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு முன்னர், 2013 ஆம் ஆண்டில், இலங்கை 109ஆவது இடத்தில் இருந்தது. இம்முறை இலங்கை கடந்த ஆண்டை விட, ஒன்பது இடங்கள் பின்தள்ளப்பட்டுள்ளது.
இந்தப் பட்டியலில் தெற்காசியாவில் பூட்டான் 18 ஆவது இடத்திலும், நேபாளம், 62அவது இடத்திலும், பங்களாதேஷ் 84ஆவது இடத்திலும், இந்தியா 143 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 154ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 160ஆவது இடத்திலும் உள்ளன.
மிகவும் அமைதியான நாடுகளாக ஐஸ்லாந்து, டென்மார்க், ஒஸ்ரியா ஆகிய நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.
அதேவேளை, அமெரிக்கா 94ஆவது இடத்திலும், சீனா 124ஆவது இடத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. (த)

## மஹிந்த வீட்டில் தயாராகிறது மாற்று வேட்பாளர் பட்டியல்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்து வரும் நிலையில், தனியான தொரு வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் மஹந்த ஆதரவு அணி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. வேட்பாளர் பட்டியலில் மஹந்த வுக்கு இடமளிப்பது தொடர்பாக பேச்சுக்கள் ஒருபுறம் நடந்து வரும் நிலையிலேயே, மாற்று அணியின் வேட்பாளர் பட்டியலைத்தயாரிக்கும் முயற்சிகளும் இடம்பெற்றுவருகின்றன. (த)

## 16 மில்லியன் ரூபாவுடன் கைதானார் இலங்கையர்



கொழும்பு, ஜூன் 30
தனது பயணப் பையில் 16.9 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்களை மறைத்து மலேசியாவுக்குக் கடத்த முயன்ற இலங்கையரொருவரை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கைது செய்யப்பட்டவர் தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 37வயதான ஆண் என சுங்கத் திணைக்கள பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.
குறித்த நபர், 13,300 அமெரிக்க டொலர், 580 பஹ்ரேன் டினார், 810 கனேடிய டொலர், 3,100 டென்மார்க் குரோனர், 25, 250 யூரோ, 746,000 ஜப்பான் யென், 25 ஜோர்தான் டினார், 14,460 குவைத் டினார், 20,250 நோர்வே குரோனர், 5, 110 ஓமான் ரியால், 11,000 கட்டார் ரியால், 577 சிங்கப்பூர் டொலர், 300 சுவிஸ் பிராங், 4,620 ஸ்ரேலிங் பவுண்ட் ஆகியவற்றுடன் விமான நிலைய புறப்பாட்டு பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். (த)

## விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்த மஹிந்த

*ஜே.வி.பி குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 30
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2005ஆம் ஆண்டு வடக்கில் மக்கள் தேர்தலை புறக்கணிப்பதற்காக விடுதலை புலிகளுக்குப் பணம் வழங்கினார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
நாட்டுக்காகப் புதிய பயணம் என்ற தலைப்பில் கடுவெல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவிடம் நிறையப் பணம் இருக்கவில்லை. அனைத்திற்கும் பணம் வழங்குவதற்கு மஹிந்தவிடம் பணம் போதவில்லை.
பின்னர் மஹிந்த ஜனாதிபதியாகிய பின்னர் வடக்கில் வீடமைப்புத் திட்டமொன்றை ஆரம்பித்தார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புத் திட்டமே அது. இதன் போது ராடா நிறுவனத்திற்கு பணத்தை ஒதுக்கினார்கள்.தற்போது தேடிச் செல்லும் போது என்ன நடந்தது –ஒருவீடேனும்கட்டியிருக்கவில்லை.
600 மில்லியன் பணம் வழங்கப்பட்ட போதிலும் ஒரு வீடேனும் கட்டப்பட்டில்லை. விடுதலை புலிகளின் வீடமைப்பு நிறுவனம் ஒன்றுக்கே அந்த அனைத்து பணமும் வழங்கப்பட்டுள்ளது.
இது தொடர்பிலான அனைத்து விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இறுதியில் சிக்கப் போவது மஹிந்த ராஜபக்ஷ என அநுரகுமார மேலும் குறிப்பிட்டார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்



கோப்பாய் மத்தியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு சுப்பிரமணியத்தின் (ஓய்வு பெற்ற உப தபாலதிபர்) பாசமிகு மனைவியும் செல்வேந்திரன் (கொழும்பு), மகேந்திரன் (நீர்வேலி), லோகேஸ்வரி, இராசேந்திரன் (சுன்னாகம்), குலேந்திரன், செல்வமணி, கணேஸ்வரி(லண்டன்), பிரமேந்திரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயபவானி, இந்திராணி,காலஞ்சென்ற தயாபரன் மற்றும் இராகினி, கலாமதி, யோகேந்திரன், சஜித்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், செல்வமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஊர்மிளா, தர்சினி, ஜெயமால் மருகன், புவீந்திரன், விஸ்னுப்பிரியா, மயூரதன், மோகன்ராஜ், டிலானி சோபினி, கங்காசுதன் , பவதாரணி, ஜனகன் லாவன்யா, பிரவீனா, ஆரணி, பிரணவி ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.
அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2015) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(61453)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா இரகுநாதன்

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் உடையார் வளவு புன்னாலைக்கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் டென்மார்க், தெகிவளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தங்கம்மா இரகுநாதன் 21.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.




பிறப்பு 1934.08.11 இறப்பு 2015.06.21

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி இரகுநாதன் (இலகுப்பிள்ளை)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விநாசித்தம்பி - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற இளையதம்பி உடையார் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திரவியநாதன் (நாதன்) மற்றும் இளமுருகன், நந்தினி, வசந்தி, கருணாகரன் (கண்ணன் - டென்மார்க்), இளையதம்பி (சுவிஸ்), முருகானந்தன் (ஆனந்தன்-டென்மார்க்), குகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலநாயகி, காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் சிவனேசன், குகனேசன், பவானி, அனுஜா, உமாகாந்தா, இந்துஜா ஆகியோ ரின் அன்பு மாமியாரும் பானுஜா,கஜவதனன், பிரணவச்செல்வி, தாரங்கி, கயல்விழி, கயலன்பன், தக்ஷிணி, டௌகிதா, நிதர்சினி, கயானன், வித்தியா, நித்தியா, சௌமியா, மது கரன், அபிநயா,மதுஷிகா, மதுஜன், சினேஷிகா, சுபகரன்,பகிதரன், துவாரகன், சரணியா, டிலக்ஷன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரது பூதவுடல் 01.07.2015 புதன்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் மாலை வரை தெகிவளை இல்லத்தில் வைக்கப்பட்டு 02.07.2015 வியாழக்கிழமை மு.ப 10.00மணிக்கு இறுதிக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் உடையார் வளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக விலங்கன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

24 A.பாபு சாலை வீதி,
தெகிவளை.
077 707 4384
தகவல்: குடும்பத்தினர்
உடையார் வளவு,
புன்னாலைக்கட்டுவன்

## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் முரளிதரன் (முரளி)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் டோகா - கட்டாரை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் - முரளிதரன் 29.06.2015 காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் வெண்ணிலா, ஜனார்த்தனன்(டோகா) காலஞ்சென்ற வளர்நிலா மற்றும் றஞ்சலா, பகீதரன் (டோகா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வரதராஜன் (ஆஸ்திரேலியா), கலைச்செல்வி, கஜேந்திரன்(டோகா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிநயா, சுஜிவன், லோஷனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தாரகி, கவிநாஸ் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.06.2015) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாக்கஸ் லேன்,
மானிப்பாய்.
(077 667 6897)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவுக்கு வேட்புமனு இல்லை; தேசியப் பட்டியலும் வழங்கமாட்டேன்

## மீண்டும் அடித்துக்கூறினார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 30

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தான் ஒருபோதும் வேட்புமனு வழங்கப்போவதில்லை என்றும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நியமனத்தை வழங்கவும் தான் தயாரில்லை என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் முக்கியஸ்தர்களுடன் நேற்று முழு நாளும் பேச்சு நடத்தியுள்ளார்.

இடதுசாரிக் கட்சித் தலைவர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என சந்திப்பில் கலந்து கொண்ட இடதுசாரி தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுரபிரியதர்ஷன யாப்பா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்த, சு.கவின் சிரேஷ்ட உபதலைவர் நிமல் சிறிபாலடி சில்வா ஆகியோருடனும் ஜனாதிபதி நேற்று மாலை பேச்சு நடத் தியுள்ளார்.

தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது, ஆசனப்பங்கீடு உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டுள்ளன.



அத்துடன், சுசில் பிரேமஜயந்த மஹிந்த அணியில் இணையவுள்ள விவகாரம் பற்றியும் அங்கு பேசப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட அறுவரடங்கிய ஒருங்கிணைப்புக்குழு தனது அறிக்கையை இன்று ஜனாதிபதியிடம் ஒப்படைக்கவுள்ளது.

### மீள்குடியமர்வுக்கு

கலந்துரையாடலில் முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், முப்படையினர், வடக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் ஏனைய செயலாளர்கள், யாழ். மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில் இருந்து செய்தியாளர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

மைத்திரி அரசு பதவியேற்ற பின்னர் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட இடங்களிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கூட்டத்தில் முக்கியமாக உரையாடப்பட்டதாக அறிய வந்தது. இராணுவத்தினர் வசம் உள்ள வசாவிளான் சந்தி விடுவிக்கப்படவேண்டும், வல்லை – அராலி வீதியில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் 4 கிலோ மீற்றர் நீள வீதி விடுவிக்கப்பட வேண்டும், முன்னரே விடுவிக்கப்பட்ட நகுலேஸ்வரம் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும், வசாவிளான் றோ.க. பாடசாலை விடுவிக்கப்படவேண்டும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி விடுவிக்கப்படவேண்டும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விடுவிக்கப்படவேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன என்று அறிய முடிந்தது.

எல்லாக் கோரிக்கைகளுக்கும் பதிலளிப்பதற்குத் தமக்கு கால அவகாசம் தேவை என்று இராணுவத்தினர் பதிலளித்துள்ளனர். அதனால் மேற்படி பிரதேசங்களின் விடுவிப்பு தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

மேலும், முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர் குறிப்பிடும்போது, ஜனாதிபதியிடமும் பல தடவைகள் மக்களின் மீள்குடியமர்வு பற்றியும், புதிதாக காணிகள் விடுவிப்பது தொடர்பிலும் தெரிவித்துள்ளோம். ஆனால், எந்தப் பதிலும் இல்லை. பாதுகாப்புத் தரப்பினரே மக்களின் மீள்குடியமர்வுக்கு தடையாக உள்ளனர் என்று டி.எம்.சுவாமிநாதன் பகிரங்கமாக அந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டார் என்றும் தெரிய வந்தது.

வலி. வடக்கில் ஆயிரம் ஏக்கர் விடுவிப்பதாகச் சொல்லப்பட்ட ஆயிரம் ஏக்கரில் 400 ஏக்கர்களை விரைவில் விடுவிக்கவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோனாதிராசா தெரிவித்தார். ஏற்கனவே விடுவிக்கப்பட்ட வளலாய் பகுதியை ஆயிரம் ஏக்கர் விடுவிப்புக்குள் அடக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். அவரது கோரிக்கைக்கும் பதில் வழங்கப்படவில்லை.

புதிய ஆட்சியில் ஐ.தே.க பதவிக்கு வந்தால், மீள்குடியமர்வு தொடர்பிலான பிரச்சினைகளை எவ்வளவு காலத்தினுள் தீர்ப்பீர்கள் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கேள்வியெழுப்பினார். முன்னாள் அமைச்சரிடமிருந்து அந்தக் கேள்விக்கும் பதில் கிடைக்கவில்லை.

காணி விடுவிப்புக்கள் தொடர்பிலேயோ, விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றியோ எந்தவொரு தீர்க்கமான முடிவும் எட்டப்படாமலேயே கூட்டம் முடிவடைந்தது. இந்தக் கூட்டம் தொடர்பில், முன்னாள் அமைச்சரோ அல்லது அரச அதிபரோ உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கவில்லை. (உ–5)

### எம்மைச்

டி.எம். சுவாமிநாதன் பயணம் செய்தார். சாந்தைச் சந்தியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் பாதுகாப்பு வேலிக்கு முன்பாக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் அரச அதிகாரிகளுடனும் கலந்துரையாடல் இடம்பெற்றது. சிறிது நேரத்தின் பின்னர், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி அந்த இடத்துக்கு வருகை தந்தார்.

சாந்தைச் சந்தியிலிருந்து, வறுத்தலைவிளான் பிள்ளையார் கோயில் வரையில் செல்லக் கூடிய 30 மீற்றர் பாதையை இராணுவத்தினர் தமது பாதுகாப்பு வேலியினுள் அடைத்து வைத்திருப்பதால் மக்கள் பல கிலோ மீற்றர்கள் சுற்றி வருகின்றனர். எனவே குறித்த 30 மீற்றர் வீதித் துண்டை விடுவிக்குமாறு இராணுவத் தளபதியிடம் கோரிக்கை விடப்பட்டது. அவர் உடனடியாக எந்தப் பதிலும் வழங்கவில்லை.

குறித்த வீதித் துண்டை விடுவிக்குமாறு கடந்த மார்ச் மாதமும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அது ஏற்கப்படவில்லை. யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது கடந்த மூன்று மாத காலமாக கிடப்பில் போடப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் மீளவும், இராணுவத்தினரிடம் அனுமதிக்குச் சமர்பிக்கப்பட்டது.

இதேபோன்று, யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருந்த, வசாவிளான் ஊடான பாதையை விடுவிக்கும் கோரிக்கையும் நேற்று மீண்டும் இராணுவத்தினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட முன்னாள் அமைச்சர் மேற்படி கோரிக்கையை இராணுவத்தினருக்கு விடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன் மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரும் அமைச்சரின் பயணத்தின்போது உடனிருந்தனர். (உ–5)

### அபிவிருத்தி

ஆகியோர் ஊடகவியலாளர்களை வெளியேறப் பணித்தனர்.

"இது அரசியல் கூட்டமல்ல. அபிவிருத்தி தொடர்பான கூட்டம்தான். ஊடகவியலாளர்கள் வெளியேறுங்கள்" என்று தெரிவித்தார் அமைச்சின் செயலாளர் ரஞ்சினி. கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

தம்மைக் கூட்டத்திற்கு அழைத்துவிட்டு வெளியேற்றுவதற்கான காரணம் என்ன என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அபிவிருத்தி தொடர்பில் அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடத்த வேண்டியிருப்பதாலேயே ஊடகவியலாளர்கள் அங்கே இருக்கத் தேவையில்லை என்று அமைச்சின் செயலாளர் ரஞ்சினி பதிலளித்தார்.

"மக்களின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட கூட்டம் இரகசியமானதா?" என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அதிகாரிகளோ மக்கள் பிரதிநிதிகளோ பதிலளிக்கவில்லை.

இதேவேளை, நேற்றுக் காலை வலி. வடக்கு மீள்குடியேற்றப் பகுதிகளை முன்னாள் அமைச்சர் சுவாமிநாதன் நேரில் சென்று பார்வையிடும் நிகழ்வு தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன் பின்னரே மாவட்டச் செயலகக் கூட்டம் நடைபெற்றது. முப்படை அதிகாரிகள், சிவில் நிர்வாக அதிகாரிகள், ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். (உ–5)

### நாளை முதல்

ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ். மாநகர சபை மேலும் தெரிவித்துள்ளதாவது:

இதுவரை காலமும் யாழ். நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையே பெரும்பாலும் குப்பை அகற்றப்பட்டு வந்தது. தற்போது நகரிலிருந்து தினமும் குப்பைகள் எடுக்கப்படுவதோடு ஏனைய இடங்களிலிருந்து ஒவ்வொரு வாரமும் குப்பைகள் அகற்றப்படுகின்றன. இதற்கான முழு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாநகர எல்லையில் 23 வட்டாரங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒவ்வொரு மேற்பார்வையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். வட்டாரங்களுக்குத் தலா ஒவ்வொரு வாகனமும் குப்பை அகற்றவென வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் தலா 15 தொழிலாளிகள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டு உரிமையாளர்கள் நிறுவனங்களைச் சேர்ந்தோர் தமது குப்பைகளை ஒழுங்காக மாநாகர சபை குப்பை அகற்றுவோரிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் வீடுகளின் முன்பாக வீதியோரங்களில் குப்பைகளைப் போட்டு வைத்தால் அதற்குத் தண்டம் விதிக்கப்படும். முதற்கட்டமாக நாளை முதல் 1,000 ரூபா தண்டம் விதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குப்பையை வீதிகளில், பொது இடங்களில் கொட்டுவதைத் தடுப்பதே இந்தத் தண்டம் விதிக்கும் முறையின் நோக்கம். மீறி யாராவது குப்பை கொட்டினால் அந்த இடத்துக்குரியவர்கள் யாராக இருப்பினும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். குப்பையை இப்படி வீதியில் கொட்டுவோர் தொடர்பில் மாநகர சபைக்குப் பொதுமக்கள் அறிவிக்கவும் முடியும். தேவையான நடவடிக்கைகளை மாநகர சபை எடுக்கும் – என்று தெரிவிக்கப்பட்டது. (உ–4)

### மஹிந்த

இருவரும் தாங்கள் சந்திக்கவில்லை என அறிக்கைகள் வெளியிட்டு வந்தாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் இருவரும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தப் பேச்சின் ஒரு கட்டமாக, பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றியை உறுதிசெய்யும் பொருட்டு, அக்கட்சியின் உறுப்பினர்கள் கைதுசெய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (த–சி)

### நாகபாம்பு

சின்னத்தைத் தெரிவுசெய்து தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கியுள்ளதாகவும் நாளை (இன்று) அந்தச் சின்னத்துக்கு அனுமதி கிடைக்கும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (த–சி)

### மஹிந்தவுக்கு

அரசியலுக்கு வருவதா? இல்லையா? என்பதை அறிவிக்கவிருப்பதோடு, பொதுத் தேர்தலில் போட்டியிடுவதாயின் எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பதற்கான பதிலையும் வழங்குவார் என்றும் அஸ்வர் கூறினார். (த–சி)

### மஹிந்த, கோத்தா

கூறிய அவர்,

புலிகளின் தலைவர்கள் எவரையும் நாம் பாதுகாக்கவில்லை. நாம் எதைச் செய்தாலும், எமது நாட்டின் சட்ட கட்டமைப்புக்குள்ளேயே செயற்படவேண்டும். அதற்கமைய இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டுமாயின், பெரும் நிதியை நாம் ஒதுக்கீடு செய்யவேண்டும். சாதாரணமாக ஒரு வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு 5, 6 வருட காலம் எடுக்கும். இவற்றை உடனடியாகச் செய்துமுடிக்க முடியாது.

இதேவேளை, போரிலிருந்து நாட்டைப் பாதுகாத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் இராணு வத் தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்டவர்களைத் தண்டிப்பதற்கு இடமளிக்கமாட்டோம். அவர்களுக்கு உரிய கௌரவத்தை நாம் வழங்குவோம். சர்வதேசம் எமது நாட்டில் விளையாட இடமளிக்க முடியாது என்பதை உறுதியாகக் கூறுகின்றோம்–என்றார். (த–சி)

### எந்த வழியில்

.மேலும் தெரி வித்ததாவது:–

அரச தீவிரவாதம், எதேச்சதிகாரம் என்பவை குறித்து மக்கள் நன்றாக அறிந்துவைத்துள்ளனர். பாதாள உலகக் கொள்ளையர்கள், ஊழல்வாதிகள், மோசடிக் காரர்களை மஹிந்த அரசுதான் உருவாக்கியது என்பதை மக்கள் அறிவார்கள். அவர்கள் வரலாற்றை மறக்கவில்லை. அதனால், வெற்றிலை சின்னத்தில் அல்ல வேறெந்த சின்னத்தில் போட்டியிட்டாலும், மஹிந்த நிச்சயம் தோல்வியடைவார்.

தற்போதைய நிலையில் தேங்காய் விழுந்தால்கூட புலி என்றுதான் மஹிந்த கூறுவார். அண்மையில் இடம்பெற்ற பாலியல் துஷ்பிரயோகச் சம்பவத்தின் பின்னரான நிலைவரங்களுக்கும் புலிகள்தான் காரணம் என்றார். புலி இன்றி அவரால் முன்னோக்கிச் செல்லமுடியாது. பயங்கரவாதம் தலைதூக்குவதற்கான நிலைமை இங்கு இல்லை. நாட்டில் பாதுகாப்பு முழுமையாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது– என்றார். (த–சி)

### நயினை

தேருக்கு எழுந்தருள்வாள். தேரில் அர்ச் சனைகள் நிறைவடைந்ததும் தேரில் வீதிவலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பாள்.

தேர் உற்சவத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு ஏராளமான பக்தர்கள் நேற்று திங்கட்கிழமை மாலை முதல் ஆலயத்துக்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர். பொதுமக்களின் வசதிகருதி இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30மணி முதல் குறிகாட்டுவான் வரையான இ.போ. ச, தனியார் பஸ் சேவைகள் இடம்பெறும். நயினாதீவு குறிகாட்டுவான் மார்க்கத்தில் படகுச்சேவைகள் இன்று கூடுதலாக இருக்கும்

என நயினாதீவு படகு உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாதைச் சேவையும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பெருமளவு பக்தர்கள் இம்முறை தேர்த் திருவிழாவில் கலந்துகொள்வார்கள் என்பதால் தொண்டர் சேவைகள் மற்றும் அத்தியாவசியக் குடிதண்ணீர் சுகாதார சேவைகள் உரிய முறையில் இடம்பெறும் என ஆலய அறங்காவலர்சபை, வேலணை பிரதேச செயலகம், வேலணை பிரதேச சபைகள் தெரிவித்துள்ளன. பொலிஸார், கடற்படையினர் பாதுகாப்புப் பணிகளை முன்னெடுப்பார்கள். பெருமளவு பக்தர்கள் கலந்துகொள்வதால் ஆலயத்துக்கு வரும் அடியார்கள் நகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்வது முக்கிய அறிவித்தலாக உள்ளது. உற்சவம் சிறப்பாகவும் அமைதியாகவும் நடைபெறக்கூடியதாக அனைவரும் ஒத்துழைப்புத்தர அறங்காவலர் சபை பொதுமக்களைக் கேட்டுள்ளது.

அமுதசுரபி அன்னதான சபை மற்றும் தாகசாந்தி நிலையங்களும் பொதுமக்களுக்கான தமது பணியை சிறந்த முறையில் வழங்கக்கூடியதான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. நாளை முதலாம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தெப்பத் திருவிழாவும் இடம்பெறும். (ற–7)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# புலிகளின் திருமலைப் பொறுப்பாளர் தேர்தலில் போட்டியிட விண்ணப்பம்

*மாவையிடம் நேரில் கையளித்தார்*

யாழ்ப்பாணம், ஜூன் 30
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளராக வும் பின்னர் தலைமைச் செயலகப் பொறுப்பாளராகவும் இருந்த ரூபன் (ஆத்மலிங்கம் ரவீந்திரா) எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திரு கோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டி யிட விண்ணப்பித்துள்ளார்.

இலக்கம் 36, மார்டின்வீதி, யாழ்ப்பணத்திலுள்ள கட்சியின் தலைமைப் பணிமனையில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடிய ரூபன், தமது எழுத்து மூலமான விண்ணப்பத்தை அவரிடம் சமர்ப்பித்தார்.

இலங்கை–இந்திய ஒப்பந்த அடிப்படையில் உருவாக்கப்பட இருந்த வடக்கு–கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் புலிகளின் சார்பில் ரூபனுடன் தெரிவாகி இருந்தவரும், தற்போதைய வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வி .கே. சிவஞானம் அச்சமயம் மாவை சேனாதிராசாவுடன் இருந்தார். மேலும் கட்சியின் துணைத் தலைவர் க.துரை ரட்ணசிங்கம் மூலமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனுக்கான பிரதியை அவர் அனுப்பி இருந்தார். கட்சிச் செயல ருக்கான பிரதியைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி உள்ளார்.

திருமலை மாவட்டத்தில் தனக்கு வேட்பாளராக நிற்கும் வாய்ப்பு வழங்கப்படுமிடத்து இத் தேர்தலில் இம்மாவட்டத்திலிருந்து கட்சியின் சார்பில் இரு உறுப்பினர்களைத் தெரிவு செயப்படுவதற்கு ஏற்ற வகையில் செயலாற்றும் திறன் தனக்கு உள்ளது என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஒரு போராளியாக இதுவரை மக்கள் சேவையைச் செய்துவந்த தான் நாடாளுமன்ற அங்கத்துவத் தின் மூலம் போரால் பாதிக்கப்பட்டுச் சீரழிந்து போன மக்களுக்காக மட்டுமன்றி அனைத்து தமிழ் பேசும் மக்களுக்காகவும் இறுதிவரை பணியாற்ற விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

ரூபன் 13.05.1985 முதல் இறுதிப் போர் முடிவுக்கு வந்த 17.05.2009 வரையிலான 24 வருடங்கள் புலிகள் அமைப்பில் போராளியாக இருந்தார்.

1989 முதல் 1993 வரை திருமலை அரசியல் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். 1990 இல் பிரேமதாஸ அரசுடனான பேச்சுகளில் பங்கு பற்றினார். 1995இல் சந்திரிகா அரசுடனான பேச்சின் நிமித்தம் மீண்டும் திருமலை அரசியல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். 1996ஆம் ஆண்டு யாழ். இடப் பெயர்வின் பின் 1996 செப்ரெம்பர் முதல் 2000 டிசெம்பர் வரை பொருண்மிய மேம்பாட்டு நிறுவ னப் பொறுப்பாளராகச் செயலாற்றினார்.

2000 ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலில் திருமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி 13,000 வாக்குகள் மட்டுமே பெற்று தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழந்தது. இதனை அடுத்து திரும்பவும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தும் பொருட்டு மீண்டும் அரசியல் பொறுப்பாளராகத் தலைவர் பிரபாகரனால் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

23.10.2001 இல் சம்பந்தனை சேனையூருக்கு அழைத்து இவ் விடயம் தொடர்பில் கலந்துரையாடினார். அதன் பின் நடந்த தேர்தலில் கட்சி 66 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறவும் சம்பந்தன் மீண்டும் நாடாளுமன்றத்துக்குச் செல்லவும் வழிவகுத்தார். (த)

## எனது தந்தையே மீண்டும் வருக

*பேஸ்புக் மூலம் மஹிந்தவை அழைக்கின்றார் நாமல்*

கொழும்பு, ஜூன் 30
மனிதத்தின் பெறுமதியை கற்றுத் தந்த நீ, மீண்டும் எம்மக்களுக்காக அரசியலுக்கு வர வேண்டும் நாமல் ராஜபக்ஷ தனது தந்தை மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தன்னுடைய பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ,

அதிகாரம் இல்லாத காலத்தில் மக்கள் எமது தந்தையை இவ்வளவு நேசிப்பார்கள் என எதிர்பார்க்கவில்லை. மக்கள் என் தந்தை மீது அளவு கடந்த மதிப்பையும் பாசத்தையும் வைத்துள்ளார்கள். அவர்கள் உங்களை ஆட்சிக்கு வருமாறு அழைக்கின்றார்கள்.

அதிகாரம் இல்லாத தருணத் தில், மக்கள் உன்னை இவ்வளவு நேசிப்பார்கள் என நாம் ஒருபோதும் நினைக்கவில்லை. மனிதத்தின் பெறுமதியை சொல்லித் தந்த தந்தையே நாம் உன்னிடம் கற்றுக் கொள்கின்றோம், மீண்டும் வருக. அதுவே மக்களின் பிரார்த்தனை, அன்னை பூமியை ஆற்றுப்படுத்துவதற்கு மீண்டும் வருக... என்று அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (த)

## இளம் வயதில் இருதயநோய் வருவதற்குக் காரணம் என்ன?

கொழும்பு, ஜூன் 30
இலங்கை உட்பட்ட தென் னாசிய நாடுகளில் வசிப்போர் மத்தியில் இளம் வயதிலேயே இருதயநோய்கள் ஏற்படுவதற்கான உயர் அச்ச நிலை தோன்றியுள் ளது. ஸ்டான்டர்ட் சௌத் ஏசியன் ட்ரான்ஸ்லேசனல் ஹாட் இனிசி யேட்டிவ் என்ற அமைப்பு தமது அறிக்கையொன்றில் இந்த அச்சத்தை வெளியிட்டுள்ளது.

பெண்களைக் காட்டிலும் ஆண்களுக்கே இந்த நோய்த்தாக்கம் அதிகமாக ஏற்படும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் பொதுவாக ஏற்படும் இருதய நோய்களைக் காட்டிலும் நான்கு மடங்கு இருதயநோய்கள் ஏற்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

50 வயதுக்குக் குறைந்தவர்களுக்கே இந்த அச்சம் தோன்றி யுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. சிறுவயதிலேயே தேவையற்ற கொழுப்பு, கொழுப்பார்ந்த புரதங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

2.அமினோ அசிட்டின் அளவு அதிகளவில் காணப்படுகிறது.

3.இருதயநோய் மற்றும் சல ரோகம் ஆகியவற்றை ஏற்படுத்தக் கூடிய புரதத்தின் அளவு அதிகளவில் காணப்படுதல்.

4. அனு சேப குணங்குறிகள்

5. வயிற்றில் படியும் கொழுப் பால் ஏற்படும் உடற்பருமன் போன்றவையே அந்த 5 காரணங்க ளாகும் என்று ஸ்டான்டர்ட் சௌத் ஏசியன் ட்ரான்ஸ்லேசனல் ஹாட் இனிசி யேட்டிவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தென்னாசி யாவில் இருதயநோய்கள் ஏற்படு வதற்கான 5 காரணங்கள் கூறப் பட்டுள்ளன.

## மஹிந்தவுக்கு வேட்புரிமை வழங்குவதற்கு எதிர்ப்பலை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சுதந்திரக் கட்சியில் பிரதமர் வேட்புரிமை வழங்க கட்சி உறுப்பினர்களால் எதிர்ப்பு தெரி விக்கப்பட்டுள்ளதாகச் சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஆதரவு வழங்கிய பலரும், சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். இதன்போதே மஹிந்தவுக்கான வேட்புரிமைக்கு பல தரப்பில் இருந்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவு படாத வகையில் ஜனாதிபதி செயற்படுவார் எனவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (த)

## மைத்திரியால் எனக்கு மிகவும் மன வருத்தம்

*ஊவா முதலமைச்சர் சொல்கிறார்*

கொழும்பு, ஜூன் 30
நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட்டமை தொடர்பில் தன்னால் மனவருத்தம் அடைய மாத்திரமே முடியும் என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிடும்போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன பின்னர் தனது சுதந்திரக் கட்சியுடன் மாத்திரமே இணைந்து செயற்படுவதாகவும்,இவ்விடயம் தனக்கு மிகுந்த மன வருத்தத்தை கொண்டுவந்துள்ளதாகவும் ஹரின் பெர்னான்டோ உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் காலத்தில் தனது வீட்டுக்கு வந்து உணவு சாப்பிட்ட பின்னரே மைத்திரிபால சிறிசேன கூட்டங்களில் கலந்து கொண்டதாகவும், தற்போது அவரை வெற்றி பெறச் செய்த எங்களின் வீட்டுக்கு வருவதைத் தவிர்த்து அவருக்கு எதிராகச் செயற்பட்ட நிமல் சிறிபால டி சில்வா வீட்டுக்கு வந்து சென்றுள்ளார் என்றும் இதன்போது அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (த)

## சஜித்துக்கு எதிரான மனு; ரணிலுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஜூன் 30
வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பி வைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் இந்த மனுவை ஜூலை 10ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்து கொள்வதற்கும் உயர்நீதிமன்றம், நேற்றுத் திங்கட்கிழமை தீர்மானித்துள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குச் சாதாரண முறைமையின் கீழ் கடன் பெற்றுகொடுக்கப்படும் திவிநெகும பிரஜா வங்கியின் நிதியை முறைக்கேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டை சுமத்தியே வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு எதிராக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் சஜித்துக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளோருக்கே இவ்வாறு அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை, வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர், பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரே இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு, உயர்நீதிமன்ற நீதியரசர்களான ரோஹினி மாரசிங்க, சிசிர த அபா மற்றும் உபாலி அபேரத்ன ஆகிய மூன்று நீதியரசர்கள் கொண்ட குழுவினால் ஆராயப்பட்டது. (த)

## திருமலையில் மைத்திரி



கொழும்பு, ஜூன் 30
திருகோணமலைக் கடற்படை முகாமில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தை திறந்து வைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் அங்கு பயணம் மேற்கொண்டார்.

இதன்போது ஜனாதிபதி திருகோணமலை பொதுச் சந்தைப் பகுதிக்குச் சென்றிருந்ததுடன் அங்கிருந்த வர்த்தகர்களுடனும் கலந்துரையாடினார். அத்துடன் சந்தைக்குப் பொருள்கள் வாங்க வந்திருந்த மக்களிடமும் ஜனாதிபதி குறைநிறைகளை கேட்டறிந்தார். (த)

## ஜூலை 6 வரை டிரான் கைதாகார்

கொழும்பு, ஜூன் 30
ராடா நிறுவனத்தில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் நிதி மோசடி தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள முன்னான் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் எதிர்வரும் 6ஆம் திகதி வரை கைது செய்யப்படமாட்டார்.

இதனை நேற்றுச் சட்டா மா அதிபர் உயர் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

ராடா நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் நிதி மோசடிப் பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னான் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் இந்த நிதி மோசடியில் தொடர்புபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், தன்னைக் கைது செய்வதில் இருந்து தடுப்பதற்கான உத்தரவு பிறப்பிக்குமாறு உயர்நீதிமன்றத்திடம் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மன்றுக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போதே டிரான் அலஸை எதிர்வரும் 6ஆம் திகதி வரை கைது செய்யமாட்டோம் எனச் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென். அன்ரனிஸ் உதைபந்தாட்டத் தொடரில் சென்.லூட்சியா சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூன் 30


மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சாவற்காடுகில்லறி அணியை வீழ்த்தி பள்ளிமுனை சென்.லூட்சியா அணி சம்பியன் ஆனது.

இரு அணிகளும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய அணிகளென்பதனால் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே ஆட்டம் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் எகிறிக் கொண்டிருந்தன. எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப ஆட்டத்திலும் அளவுக்கு அதிகமான போராட்டக்குணம் எதிரொலித்தது. இரு வீரர்களினதும் வேகத்துக்கும், வியூகங்களுக்கும் ஏற்ப பந்து அங்கும் இங்கும் அல்லோலகல்லோலப்பட்டதுதான் மிச்சம் முதல் பாதிவரை கோலெதுவும் பதிவாகவில்லை.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் சமநிலைத்தன்மை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 5ஆவது நிமிடத்தில் பள்ளிமுனை சென்.லூட்சியா சார்பாக ஒருகோல் கச்சிதமாகப் பதியப்பட லூட்சியாவின் ஆதிக்கம் ஆரம்பமானது. பழிதீர்க்கவேண்டும் என்று முனைப்பில் படாதபாடுபட்டனர் சாவற்காட்டு கில்லறி அணியினர். ஆனால் அவர்களின் போராட்டங்கள் எதுவும் பலனளிக்காத நிலையில் முடிவில் பள்ளிமுனை சென்.லூட்சியா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

சிறந்த வீரனாக பள்ளிமுனை சென். லூட்சியா அணி வீரன் டிங்கேயும் சிறந்த கோல்காப்பளராக சென்.லூட்சியா அணி வீரன் பராவும் தொடராட்டநாயகனாக அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி வீரன் சுதர்சனும் தெரிவான அதேநேரம் சிறந்த அணியாக ஜோசப்வாஸ்நகர் ஐக்கிய அணி தெரிவாகியது.(ம-23)

# வரணியில் மாட்டுவண்டிச் சவாரி



கோப்புப் படம்

வரணி, ஜூன் 30

வரணி இயற்றாலை அந்தணத்திடல் விளையாட்டுத்திடலில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாபெரும் மாட்டுவண்டிச்சவாரிப் போட்டி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 79 சோடி காளைகள் பிரிவுபிரிவாக பங்குபற்றியிருந்தன. 'ஏ' பிரிவில் 16சோடி காளைகளும் 'பி' பிரிவில் 22 சோடி காளைகளும், 'சி' பிரிவில் 19 சோடி காளைகளும்,'டி'பிரிவில் 22 சோடி காளைகளும் பங்குபற்றியிருந்தன. ஒவ்வொரு பிரிவினுள்ளும் 1ஆம் இடத்தைப் பெற்ற காளைகளின்; உரிமையாளர்கள் தங்கப்பக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மற்றும் நீரிறைக்கும் இயந்திரங்கள், பெறுமதியான பரிசில்கள் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு வழங்கப்பட்டன. சுமார் 20ஆண்டுகளுக்குப் பின்பு இந்த விளையாட்டுத்திடலில் மீண்டும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இடம்பெற்றமை வரலாற்றுச் சிறப்புமிக்க அம்சமாக இருந்ததுடன் பெரும் தொகையான பார்வையாளர்கள் இந்த நிகழ்ச்சியை பார்வையிட்டனர்.

நிகழ்வுக்கு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான கேசவன் சேந்தன், டிறிபேக் கல்லூரி அதிபரும், சாவகச்சேரி தமிழரசுக்கட்சி அமைப்பாளருமான க.அம்பிகைபாலன், கரவெட்டி பெரும்போக உத்தியோகத்தர் வீ.தனபாலசிங்கம், இயற்றாலை கிராம அலுவலர் சி.கஸ்தூரி ஆகியோர் கலந்துகொண்டனர்.(ம-122)

# யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம் உடுவில் மகளிர் மூன்றாம் இடம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 17வயதுப்பிரிவு பெண்களுக்கான மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுவில் மகளிர்கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 40:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

# மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ்.இந்து மூன்றாம் இடம்



யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந் தாட்டத் தொடரின் 13 வயதுப்பிரிவு ஆண்களுக்கான மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 29:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக் கிக் கொண்டது.

(ம-23)

# மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ்.இந்து மகளிர் மூன்றாம் இடம்



யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப் பந் தாட் டத் தொடரின் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர்கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். இந்து மகளிர்கல்லூரி அணி 13:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் வேம்படி மகளிர் மூன்றாம் இடம்



யாழ்ப்பாணம், ஜூன்30

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 13 வயதுப்பிரிவு பெண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நேற்று திங்கட்கிழமை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்றது.

யாழ்.இந்துமகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி 26:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.

(ம-23)

# வடமராட்சி கிழக்கு வி.கழகங்களுக்கு உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 30

சிவன் பவுண்டேஷன் அமைப்பினால் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு வத்திராயன் பொதுமக்கள் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் 22 கழகங்களுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பிரதம விருந்தினராக சிவன் பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் கணேஷ் வேலாயுதம் கலந்துகொண்டார். (ம-265)



# அமெரிக்க உதைபந்தாட்டத் தொடரின் கிண்ணம் யாழ்.வொறியஸிடம்

யாழ்ப்பாணம், ஜுன் 30

இலங்கையில் முதன்முறையாக நடைபெற்ற அமெரிக்கன் உதைபந்தாட்டத் தொடரில் யாழ்.வொறியஸ் அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு ரொறிங்ரன் றக்பி மைதானத்தில் இடம்பெற்ற அமெரிக்கன் உதைபந்தாட்டத் தொடரின் ஒரு பிரிவான பௌவுல்ஸ் பிரிவின் இறுதியாட்டத்தில் யாழ்.வொறியஸ் அணியை எதிர்த்து பாகிஸ்தான் தேசியஅணி மோதிக்கொண்டது. இதில் யாழ்.வொறியஸ் அணி 13:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுவாக பழிதீர்த்தது இலங்கை



## சகலதுறை வீரராக ஷகிப் முதலிடம்

ரி-20, ஒருநாள், டெஸ்ட் என்று மூன்றுவிதமான ஆட்டங்களினதும் சிறந்த சகலதுறை வீரராக ஷகிப் அல் ஹசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டு [illegible]ப நேற்றுமுன்தினம் சகல து[illegible] வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. இதில் ஷகிப் அல் ஹசன் 408 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தார்.
[illegible]ருக்கு அடுத்த இடத்தில் இலங்கை வரர்களான டில்ஷான் 404 புள்ளிகளுடனும், மத்தியூஸ் 378 புள்ளிகளுடனும் உள்ளனர்.
தவிர பல்க்நெர், ஹபீஸ், மக்ஸ்வெல், ஜடேஜா, டுமினி, வற்சன், நபி ஆகியோர் அடுத்த 4 முதல் 10 இடங்களுக்குள் இருக்கின்றனர். (ம)

## நோர்வே செஸ் வசெலின் சம்பியன்

நோர்வே செஸ் தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்கும் சுற்றாக மாறியிருந்த ஒன்பதாவது சுற்றை ஆனந்த்துக்கு எதிராக சமன்செய்த[illegible] மூலம் ஏற்கனவே முடிந்திருந்த [illegible]ல் எட்டு சுற்றுக் களின் அடிப்படையில் வசெலின் சம்பியன் ஆகியுள்ளார்.
ஆனந்த் வெற்றிபெற்றால் மட்டுமே சம்பியனாகலாம் மாறாக ஆட்டம் சமநிலையில் முடிந்தாலோ அல்லது கைவிடப்பட்டாலோ வசெலின் சம்பியனாக மாறுவார் என்ற திரில் நிலையில் ஆட்டம் ஆரம்பமானது.
ஆனால் ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் இருவரும் சமநிலைக்குச் செல்வதாக தெரிவித்ததையடுத்து நோர்வே தொடர் முழுவதிலும் அதிக புள்ளிகளைப் பெற்றவர் என்ற நிலையில் வசெலின் சம்பியனாகியுள்ளார். (ம)

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் இலங்கையின் வெற்றியுடன் நேற்று நிறைவுக்கு வந்தது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஷ்பா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸுக்காக 138 ஓட்டங்களில் சுருண்டது.
139 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இலங்கையணி முதல் இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 315 ஓட்டங்களைக் குவித்து 176 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 177 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நேற்றுமுன்தினம் நான்காம் நாள் முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 329 ஓட்டங்களைக் குவித்தது. பாகிஸ்தானின் இரண்டாவது இன்னிங்ஸ் பலமாக அமைந்த போதிலும் முதல் இன்னிங்ஸ் சொதப்பலாக அமைந்த காரணத்தினால் இலங்கைக்கு வெற்றியிலக்காக 153 ஓட்டங்கள் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டன. இருப்பினும் நான்காம் நாளின் மாலை வேளையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஆட்டத்தின் இறுதி நாளாகிய நேற்று 153 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு களத்தில் கருணாரத்ன மற்றும் விதானகே. ஒருநாள் ஆட்டத்தின் பாணியில் இருவரும் அடித்து ஆடினார்கள். 6ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 49 ஓட்டங்களை எட்டியிருந்தபொழுது பவிலியன் திரும்பினார் விதானகே. ஆட்டமிழப்பைக் கூட கொண்டாடவில்லை பாகிஸ்தான் வீரர்கள். ஒரே பந்தில் வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார் சங்கா. கருணாரத்ன அரைச்சதம் கடந்து பவிலியன் திரும்ப இடத்தை நிரப்பினார் திரிமன்னே. மத்தியூஸும், திரிமன்னேயும் இணைந்து நிதான ஆட்டம். இணைப்பாட்டம் சற்று தாக்குப்பிடிக்க முடிவில் இலங்கை 7 இலக்குகளால் வெற்றி பெற்று உணவு இடைவேளைக்கு முன்னர் ஆட்டத்தை முடித்தது. ஆட்ட நாயகனாக பிரசாந் தெரிவானார். (ம)



## டோனியின் சாதனைகளே அவரைப் பற்றிப் பேசும்




இந்திய அணி பங்களாதேஹுக்கு எதிரான தொடரை இழந்ததையடுத்து டோனியின் தலைமைத்துவம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. சிலர் டோனி பதவி விலகவேண்டும் என்றும் தெரிவித்தனர். இந்த நிலையில் டோனிக்கு ஆதரவாக பாகிஸ்தானின் அதிரடி வீரர் அப்ரிடி கருத்துத் தெரிவித்துள்ளார்.
டோனி தொடர்பாக அப்ரிடி தெரிவித்ததாவது:- பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரை இழந்த பின் டோனியின் மீது வீசப்படும் குற்றச்சாட்டு மிகவும் மோசமானது என்று நான் நினைக்கிறேன். மற்ற நாடுகள் சென்று விளையாடும் நமது ஹீரோக்கள் ஒரு தொடரில் இவ்வாறு தோற்கும்போது இது போன்ற செயல்களில் இருந்து தப்புவதில்லை என்பது என்னுடைய முழுமையான கருத்து. இதுபோன்ற நேரத்தில் நமது தலைவர்கள் அல்லது வீரர்கள் தற்போது நல்ல படியாக செயற்படுகிறார்கள் என்பதை பார்க்கக்கூடாது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால், அவர்கள் மீது விமர்சனம் எழுப்பும்போது அவர்களுடைய பழைய சாதனைகளை தயவு செய்து மறந்து விடக்கூடாது. டோனியை நீங்கள் பார்த்தீர்கள் என்றால், அவர் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளார். இந்தியாவின் மிகவும் பிரமாண்ட வீரர். அவரது சாதனைகளே அவரைப் பற்றிச் சொல்லும். எதிர்காலத்துக்கான நல்ல அணியை டோனி உருவாக்கியுள்ளார். உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியை இந்திய இளம்படை என்றுஊடகங்கள் வர்ணிக்கவில்லை மாறாக டோனியின் இளம்படை என்றே வர்ணித்தன-என்றார். (ம)

## சந்திமால் சாதனை

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணியின் இலக்குக்காப்பாளரான தினேஷ் சந்திமால் ஆட்டமிழப்புக்களுக்கு அதிக தடவை உதவிபுரிந்தவர் என்ற புதிய சாதனை படைத் துள்ளார்.
இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் ஆட்டம் இலங்கையின் வெற்றியுடன் நிறைவுக்கு வந்தது. இந்த ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் சந்திமால் ஐந்து பிடியெடுப்பு மற்றும் ஒரு ஸ்டம்பிங் மூலம் ஆறு பேரை ஆட்டமிழக்கச் செய்து சாதனைப் படைத்துள்ளார்.
அஹ்மத் ஷேசாத், யூனிஸ்கான், ஆசாத் ஷாபிக், சர்பிராஷ் அஹ மது, ஜுனைத் கான் ஆகியோரை



பிடியெடுத்தும், சதம் அடித்த அசார் அலியை ஸ்டம்பிங் செய்தும் ஆட்டமிழக்கச் செய்துமே சந்திமால் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.
இதற்கு முன் இந்திய இலக்குக் காப் பாளர் கிர்மானி 1976ஆம் ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிராக இந்தச் சாதனையைப் படைத்தார். அதன்பின் ஆசிய கண்டத்தைச் சேர்ந்த ஒரு இலக்குக்காப்பாளர் இந்தச் சாதனையைச் செய்கின்றமை இதுவே முதல்தடவை. (ம)

# என்னம்மா இப்படிப் பண்றிங்களேயம்மா!

நேற்று ஆரம்பமாகிய விம்பிள்ரன் தொடருக்கான பயிற்சியாட்டமொன்று ஜோகோவிக் - ரிச்சர்ட் இடையே நேற்றுமுன்தினம் பிரான்ஸின் ஸ்டோர் பார்க் நகரில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் வீரர்களுக்கிடையிலான ஆட்டம் சுவாரஸ்யமாக இருந்ததோ? இல்லையோ? வீரர்களுக்கும் ரசிகைககளுக்கும் இடையிலான ஆட்டத்தில் கூக்குரல் சத்தங்கள் மைதானத்தை பிளந்தது.
ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஜோகோவிக் திடீரென தனது சட்டையை பார்வையாளர் பகுதியில் இருந்த இளம் ரசிகை ஒருவரிடம் வீசினார். அதை பார்த்த வீரர் ரிச்சர்ட், பதிலுக்கு தனது சட்டையை கழற்றி மற்றொரு இளம் ரசிகையிடம் கொடுத்தார். பதிலுக்கு அந்த இளம் ரசிகை, ரிச்சட்டுக்கு கன்னத்தில் மாறி மாறி முத்தம் கொடுத்து அசத்தினார். இந்த முத்தத்தை பார்த்து அதிர்ந்த ஜோகோவிக்கிடம்சட்டையைவாங்கியரசிகை, அவரை அழைத்து மாறி மாறி கன்னத்தில் முத்தமழை பொழிந்தார். ஆட்டத்தை ஜோகோவிக் நேர் செற்களில் முடித்தது வேறுகதை. (ம)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு உங்கள் நகரில் கணக்கிட முடியாத இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

**யாழ்ப்பாணம் இளைஞர் யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் பூசப்பட்ட அவுஸ்திரேலியா வைர நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.**

உரிய ஏற்றுமதி விலையான ரூ.1500/= & 3000/= வரையிலான நகைகளுக்கு



## ரூபா.150/=,300/= மட்டுமே

**2015 ஜூன் 30, ஜூலை 1,2,3, (செவ்வாய்,புதன்,வியாழன்,வெள்ளிக்கிழமை) திகதிகளில்**



**நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை**

(பகல் உணவு இடைவேளை கிடையாது)

ரூ.150/= இற்கும், ரூ.300/= இற்கும் விற்பனை செய்யும் ரூ.3000/= ஏற்றுமதி பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்.

**இவ்விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை. சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**



* மும்பாய் தங்க முலாமிடப்பட்ட செயின் பென்ரன் ரூ.150/= Only
* சிபரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் ரூ.150/= Only
* அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் ரூ.150/= Only
* மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் ரூ.150/= Only
* அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் ரூ.150/= Only
* அவுஸ்திரேலிய டயமன்ட் செயின் ரூ.300/= Only
* பஞ்சாப் பியூட்டி குயின் மாலை ரூ.300/= Only
* அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் ரூ.300/= Only
* கிரிஸ்டல் நெக்லஸ் செட் ரூ.300/= Only
* ஹைட்ராப்பாத் முத்து நெக்லஸ் செட் ரூ.300/= Only
* இத்தாலிய டயமன்ட் தோடுகள் ரூ.300/= Only
* ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் ரூ.300/= Only
* ஜெய்ப்பூர் குண்டன் நெக்லஸ் செட் ரூ.300/= Only
* அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் ரூ.300/= Only















விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு

**ரூபா 500/= & 5000/= வரை ஆபரணங்கள்**

# இடம் : வீரசிங்கம் மண்டபம்

**இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்**

**அனுமதி இலவசம்**

**தொலைபேசி : 075 507 5675**

**பெண் விற்பனையாளர்கள் தேவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.